www.tamilarangam.net

THAYAGAM

4.2.94

75¢

உண்மை:5 தேடல்:31

# தாயகம்

## நிபந்தனையற்ற பேச்சுவார்த்தைக்கு புலிகள் விருப்பு

**யாழ்.சென்ற ஆயர் அறிக்கை**

## யுத்த நிறுத்தத்திற்கு கோரிக்கை

**ஜனாதிபதி தேர்தல் முறையை மாற்ற உத்தேசிப்பு பாராளுமன்றமே ஜனாதிபதியை தெரிவு செய்யும்**

**ஐ.தே.கவில் காமினிக்கு ஏமாற்றம். பதவி கிடைக்க தாமதம்**

**தன் மீதான குற்றச்சாட்டுக்களை கொத்தலாவலை மறுக்கிறார்**

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net


Niru Brand®
Niru Brand®
Niru Brand®
Niru Brand®
Niru Brand®
Niru Brand®
Niru Brand®
Niru Brand®

தரத்தின் சின்னம்

நிரு பிராண்ட்®
நிரு பிராண்ட்®
நிரு பிராண்ட்®
நிரு பிராண்ட்®
நிரு பிராண்ட்®
நிரு பிராண்ட்®
நிரு பிராண்ட்®
நிரு பிராண்ட்®

Niru Niru

# தரத்தின் சின்னம்

# நிரு பிராண்ட்®

# Niru Brand®

நிரு பிராண்ட் தயாரிப்புகளுக்கு நிகர் Niru Brand® தயாரிப்புகளே.

உங்கள் கைகளில் கிடைப்பது தரமான நிரு பிராண்ட் தயாரிப்புகளா? என்பதை உறுதிப்படுத்துங்கள்

## போலிகளை வாங்கி ஏமாறுதீர்கள்

Niru Enterprises Inc,

**Tel:(416) 299-4202**

நிரு பிராண்ட் தயாரிப்புக்கள் எல்லா இலங்கை வர்த்தக நிலையங்களிலும் விற்பனையாகின்றன. உங்கள் ஏமாற்றத்தைத் தவிர்ப்பதற்கு எம்முடன் தொடர்பு கொண்டு எமது தயாரிப்புகள் எப்பொழுதும் கிடைக்கக் கூடிய வர்த்தக நிலையங்களை அறியலாம்

www.tamilarangam.net

Second class mail Registration No:8435

# தாயகம்

'உண்மையைத் தேடி'

# நிபந்தனையற்ற பேச்சுவார்த்தைக்கு புலிகள் விருப்பு

## யாழ்ப்பாணம் சென்ற ஆயர் குழு தகவல் யுத்தநிறுத்தத்திற்கு கோரிக்கை

அரசுடன் நிபந்தனையற்ற பேச்சுவார்த்தை நடத்த புலிகள் விருப்பம் கொண்டிருக்கிறார்கள் என்று கத்தோலிக்க தூதுக்குழு தெரிவித்துள்ளது. குடாநாட்டுக்கு சென்ற கத்தோலிக்க தூதுக்குழு புலிகளுடன் பேச்சுவார்த்தை நடத்திய பின்னர் மீண்டும் கொழும்பு திரும்பியுள்ளது. கத்தோலிக்க பேராயர் நிக்கொலஸ் மார்க்கஸ் பெணாண்டோ தலைமையிலான மூவர் கொண்ட குழு யாழ்ப்பாணம் சென்றிருந்தது. அந்தக் குழு விடுத்த அறிக்கை ஒன்றில் சமீபத்திய யுத்தங்களினால் சமாதானத்திற்கான சந்தர்ப்பங்கள் மோசமாகலாம் என்பதால் உடனடியாக ஒரு யுத்த நிறுத்தம் மேற்கொள்ளப்பட வேண்டும் என்று கோரிக்கை விடுத்திருக்கிறது.

இந்தக் குழு புலிகளின் தலைமைப்பீடத்தைச் சந்தித்ததுடன் உள்ளூர் மக்கள் எதிர்கொள்ளும் கஷ்டங்கள் பற்றி அறிந்து கொண்டதுடன் யுத்தத்தை முடிவுக்கு கொண்டு வருவதற்கான முயற்சிகளிலும்

ம.ப.பா...

# ஜனாதிபதி தேர்தல் முறையை மாற்ற முயற்சி

புதிய ஜனாதிபதி தேர்தல் அண்மிக்கும் தருணத்தில் ஐ.தே.க அரசு அரசியலமைப்பில் மாற்றங்கள் செய்ய உத்தேசித்து வருகிறது. இதன்படி தற்போது மக்களால் தெரிவு செய்யப்படும் ஜனாதிபதி முறைக்கு பதிலாக பாராளுமன்றத்தினால் தெரிவு செய்யப்பட வேண்டும் என்று ஜனாதிபதி விஜேதுங்க கூறியுள்ளார். அனுரதபுரத்தில் நடைபெறும் கட்சி மாநாட்டில் பேசிய போது கடந்த செவ்வாய்க்கிழமை ஜனாதிபதி இக்கருத்தைத் தெரிவித்துள்ளார். அரசியலமைப்பை மாற்றுவது பற்றிய பாராளுமன்றத் தெரிவுக்குழுவின் ஆலோசனையின்படியே, ஜனாதிபதித் தேர்தல், பாராளுமன்றத் தேர்தல் என்பவற்றுக்கு பதிலாக பாராளுமன்றத் தேர்தலை வைத்து பின்னர் ஜனாதிபதியை பாராளுமன்றம் தெரிவு செய்யும் முறையை நடைமுறைப்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.

இதன் மூலம் 36 கோடி ரூபாய் மீதப்படுத்தப்படும் என்றும் ஒரு தேர்தலை வைப்பதன் மூலம் எதிர்ப்புணர்வைக் குறைக்கலாம் என்றும் ஜனாதிபதி கூறினார். அத்துடன் ஜனாதிபதியும் பாராளுமன்றமும் வெவ்வேறு கட்சிகளைச் சார்ந்ததாயின் அதனால் பிரச்சனைகள் எழலாம் என்று கூறிய ஜனாதிபதி நிறைவேற்று அதிகாரமுள்ள ஜனாதிபதி எப்படி எதிர்க்கட்சியைச் சேர்ந்த பாராளுமன்றத்துடன் செயற்பட முடியும் என்றும் கேள்வி எழுப்பினார். அத்துடன் இந்த நிலையை எந்தக் கட்சியும் இதை வரவேற்கும் என்பதை தான் நம்பவில்லை என்றும் தெரிவித்தார்.

ம.ப.பா...

# புதிய தாக்குதலுக்கு இராணுவம் திட்டம்

கிழக்கில் நடைபெறும் தேர்தலைக் குழப்பும் நடவடிக்கையில் புலிகள் ஈடுபடலாம் என்று கருதி பாதுகாப்பு படையினர் நடமாட்டத்தை அதிகரித்துள்ளனர். அத்துடன் பருவகால மழை முடிவடைந்ததும் புதிய தாக்குதல்களை ஆரம்பிக்கத் திட்டமிட்டுள்ளனர்.

புதிதாக தாக்குதலை ஆரம்பிப்பது படையினரின் உற்சாகத்தை அதிகரிக்கும் என்றும் "பாதுகாப்பு பங்கர் மனநிலைக்குள்" இருந்து படையினரை விடுவிக்கும் என்றும் புதிய தளபதி கருதுகிறார். அத்துடன் படையினருக்கான பயிற்சிகளும் இரவு நேரத் தாக்குதல் பயிற்சிகளும் கொடுப்பதுடன் புதிய தளபதிகளை தெரிவு செய்து யுத்தத்தில் ஈடுபடுத்தப் போவதாக ஜெரி டிசில்வா தெரிவித்திருக்கிறார். அத்துடன் மாத்தயா விவகாரத்தையும் அவதானித்து வருவதாக தெரிவித்திருக்கிறார்.

மார்ச் 1ம் திகதி நடைபெறும் தேர்தல்களைக் குழப்ப புலிகள் திட்டமிட்டிருப்பதாக தங்களுக்கு தகவல் கிடைத்துள்ளதாகவும் இதற்காக பெருமளவு புலிகள் கிழக்கே நகர்த்தப்பட்டுள்ளனர் என்றும் இராணுவ தலைமைப்பீடம் கூறியுள்ளது. புதிதாக பொலிசாரும் கிழக்கில் நிலை கொள்ள வைக்கப்பட்டுள்ளனர்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## தேர்தல்...

அடுத்த தேர்தலில் ஐ.தே. கட்சி சார்பில் போட்டியிட விஜேதுங்க தெரிவு செய்யப்பட்ட போதும், ஜனாதிபதி தேர்தலில் சிறிமாவுடனான போட்டி நெருக்கமாவதால் ஐ.தே.கட்சி இவ்வாறான முறைக்கு மாற முயற்சிப்பதாக கருதப்படுகிறது. இதன் மூலம் வெற்றியை உறுதி செய்யும் வாய்ப்புகள் உண்டு.

### நிபந்தனையற்ற...

அக்கறை செலுத்தியது. புலிகள் சார்பில் பாலசிங்கம், பாலகுமார், பேபி சுப்பிரமணியம் ஆகியோர் இவர்களைச் சந்தித்தனர். இவர்களுடன் யாழ்.ஆயர் சவுந்தரநாயகம், மட்டக்களப்பு ஆயர் கிங்ஸ்லி சுவாம்பிள்ளை ஆகியோரும் மற்றும் வண. பிதாக்களும் கலந்து கொண்டனர்.

அத்துடன் தொண்டர் நிறுவனங்களான ஐ.நா அகதிகள் தூதுவரக அமைப்பு, செஞ்சிலுவைச் சங்கம் ஆகியவற்றின் பணிகளை சுதந்திரமாக நடைபெற அனுமதிக்கும்படியும் அவர்கள் புலிகளைக் கேட்டுக் கொண்டனர்.

அத்துடன் புலிகளால் பிடித்து வைக்கப்பட்டிருக்கும் இலங்கை இராணுவத்தினரைச் சந்தித்ததுடன் அவர்களின் குடும்பங்களுக்கான செய்தியையும் கொழும்புக்கு கொண்டு வந்தனர். கொழும்பு வந்த இந்த குழு பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவைச் சந்தித்தது.

### ஐ.தே.கவில்..

இதற்குள் லலித்தின் ஆதரவாளர்கள் காமினி ஐ.தே. கட்சியை எதிர்த்து பேசிய உரைகளை புத்தகமாக வெளியிட உள்ளனர். ஐலண்ட் பத்திரிகையும் காமினி லலித்திற்கு எழுதிய பழைய கடிதம் ஒன்றை வெளியிட்டுள்ளது. லலித்தின் மனைவி காமினியை விமர்சனம் செய்து பேட்டி ஒன்றை வெளியிட்டுள்ளார்.

# ஜே.வி.பி வன்செயலை மறுதலிக்கிறது

நான்கு வருடங்களின் பின்னர் ஜே.வி.பி அரசியலில் வன்செயலை நிராகரித்துள்ளது. லண்டனில் உள்ள கிளை மூலமாக விடுத்த அறிக்கை ஒன்றில் அரசியலில் சகல விதமான வன்செயல்களுக்கு எதிராக இருப்பதாக கூறிய போதிலும் இலங்கையின் முதலாளித்துவ முறைக்கு எதிராக இராணுவத்தனமான முறையில் செயற்படப் போவதாகக் கூறியிருக்கிறது. ஜே.வி.பி அரசியலில் நுழைந்த போது அதற்கு எதிராக வன்முறைகள் கட்டவிழ்த்து விடப்பட்டதால் அது தற்பாதுகாப்புக்காக அவ்வாறு செயற்பட நிர்ப்பந்திக்கப்பட்டது என்றும் அரசியலில் வன்முறை என்பது ஐ.தே.கவினால்தான் ஆரம்பிக்கப்பட்டது என்றும் லண்டன் கிளையில் உள்ள சந்திரானு கிளரன்ஸ் பீரிஸ் தெரிவித்திருக்கிறார்.

சிக்கலான அரசியல் நிலைமைக்குள் அப்பாவிகள் சொல்ல முடியாத துயரங்களுக்குள்ளானார்கள் என்றும் எனவே இவ்வாறான வன்செயல்களை நிறுத்துவது அவசியம் என்றும் தெரிவித்துள்ளது. இலங்கையின் முதலாளித்துவ ஆட்சியை முடிவுக்கு கொண்டு வரவும் அரச பயங்கரவாதத்தை எதிர் கொள்ளவும் வன்முறையில்லாத இராணுவத்தனமான எதிர்ப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப் படும் என்றும் தெரிவிக்கப் பட்டுள்ளது.

# ஐ.தே.கவில் காமினிக்கு ஏமாற்றமா?

காமினி ஐ.தே.கட்சியில் சேர்ந்த போதும் உடனடியாக அவருக்கு பதவி கிடைக்கும் என்று கூற முடியாத நிலை உள்ளது. ஐ.தே.கட்சியில் சேர்ந்தாலும் பாராளுமன்றத்தில் உறுப்பின ராவதற்கு தேசிய பட்டியலில் உள்ள யாராவது பதவி விலக வேண்டும். பாராளுமன்றத்தில் உறுப்பினரான பின்னர் தான் மந்திரிசபைக்குள் தெரிவாக முடியும்.

விஜேதுங்கவிற்கும் காமினிக்கும் இடையில் நடைபெற்ற பேச்சுவார்த்தைகளின்படி மூன்று வாரங்களில் அவருக்கு இந்த பதவிகள் கிடைக்கக் கூடும். ஆயினும் காமினி சேர்ந்த போது ரணில் விக்கிரமசிங்கவும் சிறிசேன கூரேயும் சமுகமளிக்கவில்லை. இவர்கள் இந்த இணைப்புக்கு எதிர் என்றே கருதப்படுகிறது.

அத்துடன் ஐ.தே.கட்சியின் செயற்குழுவே இவரை வெளியேற்றியது என்பதால் அது இந்த இணைப்பை அங்கீகரிக்க வேண்டும். ஆனாலும் ஜனாதிபதிக்கு இது குறித்த முழு அதிகாரங்களும் கொடுக்கப்பட்டிருந்தன.

காமினியும் கட்சியைக் கலைக்க வேண்டும், அல்லது கட்சியுடன் முழுமையாக ஐ.தே. கவுடன் இணைய வேண்டும் என்ற கோரிக்கையை நிறைவேற்ற முடியாதுள்ளார். லலித்தின் ஆதரவாளர்கள் இந்த இணைப்புக்கும் கலைப்புக்கும் எதிராக உள்ளனர்.

காமினியின் இணைப்பை தொண்டா வரவேற்றுள்ளார். காமினிக்காக ஜனாதிபதியுடன் பகைத்துக் கொண்டு மத்திய மாகாணத்தில் காமினியை ஆதரித்ததுடன் செல்லசாமியையும் பகைத்துக் கொண்டவர் தொண்டா என்பது குறிப்பிடத்தக்கது.

1ம் கலம் பார்க்க..



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# தென்மாகாண தேர்தல்

தென்மாகாணத்தில் கலேக்கப்பட்ட மாகாண சபைக்கான தேர்தல் திகதிகள் குறிக்கப்பட்டிருக்கின்றன. மார்ச் 25ம்திகதி தேர்தல் நடைபெறும். ஐ.தே.க, மக்கள் கூட்டணி எனப்படும் சு.க தலைமையிலான குழு உட்பட நான்கு கட்சிகள் 53 ஆசனங்களுக்கு போட்டியிடுகின்றன. காலி, மாத்தறை, அம்பாந்தோட்டை மாவட்டங்களில் தேர்தல் நடைபெறும். இதுவரையும் 288 பேர் வேட்பு மனுத் தாக்கல் செய்துள்ளனர்.

தற்போது காமினி ஐ.தே.கவுடன் சேர்ந்துள்ளதால் நிர்வாகத்தில் மாற்றங்கள் ஏற்படலாம்என்று கருதப்படுகிறது.

# உமாபிரகாஷ் சுட்டுக்கொலே

கொழும்பில் சமீப காலங்களில் வெள்ளே வான்களில் நடமாடித் திரிந்து பல தமிழ் இளேஞர்கள் காணுமல் போனதற்கு காரணமானவர் என்று கூறப்படும் உமா பிரகாஷ் தற்போது சுட்டுக் கொல்லப்பட்டிருக்கிருர். புளொட் இயக்கத்தைச் சேர்ந்த இவர் இந்தியாவிலிருந்து வருவிக்கப்பட்டிருந்தார். கடந்த வாரம் வனவாசல ரயில் நிலேயத்திற்கு அருகில் வைத்து இவர் சுட்டுக் கொல்லப்பட்டார். பச்சை நிறக்கார் ஒன்றில் வந்தவர்கள் இவரைச் சுட்டுக் கொன்றதாகக் கூறப்பட்டது.

# மனித உரிமை ஆணைக்குழு

மனித உரிமைகள் மீறல் குறித்து விசாரணைகள் செய்வதற்காக ஆணைக்குழு ஒன்று நியமிக்கப்பட்டிருப்பதாக ஜனதிபதியின் பேச்சாளர் ஒருவர் தெரிவித்திருக்கிருர். இளேப்பாறிய நீதியரசர்களேக்கொண்ட இந்தகுழு குற்றச்சாட்டுக்களே விசாரணே செய்து சமரசத் தீர்வுக்கு வரும், முடியாத பட்சத்தில் உயர்நீதிமன்றத்திற்கு வழக்குகளேப் பாரப்படுத்தும்.

இதற்குள் ஜெனிவாவில் நடைபெறும் ஐ.நா மனித உரிமைகள் குழுவின் ஐம்பதாவது அமர்வில் இலங்கைத் தூதுக்குழுவும் பங்கு கொள்வது குறிப்பிடத்தக்கது.

# குற்றச்சாட்டுகளுக்கு கொத்தலாவலே மறுப்பு

அமெரிக்காவில் திருடியதாக குற்றம்சாட்டப்பட்ட லெப்டினனட் கேணல் கொத்தலாவலே தன் மீதான குற்றச்சாட்டுக்களே மறுத்துள்ளார். ஐலண்ட் பத்திரிகையில் வெளிவந்த செய்திகளின்படி இவர் தற்போது தனது கடவுச்சீட்டையும் விமானச் சீட்டையும் ஒழுங்குசெய்வதில் ஈடுபட்டிருப்பதாகவும் அது முடிவடைந்ததும் விரைவில் நாடு திரும்புவார் என்றும் தெரிவித்துள்ளார். இது குறித்து இராணுவத் தலைமைப்பீடத்திற்கு அறிவித்துள்ளதாகவும் அவர் கூறியுள்ளார். தனதுகுடும்பத்தினர் இலங்கையிலேயே உள்ளதாகவும் அவர்கள் தன்னேடு அமெரிக்காவில் இருக்கவில்லே என்றும் கூறிய கொத்தலாவலே 'கடையில் விற்பனேயாளரின் தவறு காரணமாகவே இந்தக் குற்றச்சாட்டு ஏற்பட்டதாகவும் தனது நிலேயை தெளிவாக்கியும் இராணுவ நிர்வாக அதிகாரிகள் தனது சாட்சியத்தை பதிவு செய்யாமலும் தன்மீது எந்தக் குற்றச்சாட்டையும் சுமத்தாமலும் தன்னே இடைநிறுத்தியதாகவும் பின்னர் தன்னே நாட்டை விட்டு வெளியேற இரண்டு மணி நேர அவகாசமே தந்ததாகவும் கூறியிருக்கிருர்.

தன்னிடம் கடவுச்சீட்டு இல்லாததால் தான் அவசரவெளியேற்ற சீட்டு வழங்கப்பட்டு சென்ற போது தான் வெளியேற அனுமதிக்கப்படாததால் தான் சுயமாகவே வெளியேற திட்டமிட்டதாகவும் தெரிவித்த அவர் தான் நாடுசென்று தன் மீதான அவப்பெயரை நீக்குவதாகவும் கூறினுர்.

பத்திரிகைகள் தன் மீது தவருன தகவல்களே வெளியிட்டதாக குற்றம் சாட்டிய அவர் தான் இராணுவ அதிகாரியாக இருந்த போது ஒருவரின் வீட்டைச்சோதனேயிட்டு அனுமதிப்பத்திரம் இல்லாத துப்பாக்கி, கிரனெட், வோக்கி டோக்கி போன்றவற்றை கைப்பற்றியதாகவும் இது அவரது செயற்பாடாகவும் இருக்கலாம் என்றும்ஊகம்தெரிவித்திருக்கிருர்.

அத்துடன் தனது ஆங்கில அறிவு காரணமாக தன்னுடன் பயில்கின்ற ஆங்கிலேயரல்லாத மற்றவர்களுக்காக தான் மேலிடங்களுடன் முரண்பட்டதாகவும் இது சிலருக்கு எரிச்சலேக் கொடுத்தது என்றும் குறிப்பிட்டுள்ளார்.

முன்பு கிட்டு யாழ்ப்பாணத்தில் இருந்த போது கிட்டுவுடன் நெருக்கமான நட்பை ஏற்படுததிக் கொண்டவர் என்பது குறிப்படத்தக்கது.


**இலவச ஆங்கில வகுப்புகள்**

*திங்கள்-வெள்ளி*
*காலே 9.30-மாலே 3 மணி*
*525 ஷெர்போண் வீதியில்*
*(புளோர்)*

**விபரங்களுக்கு:**
**465 6021**




தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# முனியின் பதில்கள்

மஞ்சரி வெளி வந்தபோது 'சரி வந்தால் ' மரை' நிற்கும் என்று கூறினீர் வீரமாமுனிவரே! அதுபோல் செந்தாமரை நின்று உமது ஆருடம் பலித்துவிட்டது பாராட்டுக்கள்

ஜோ. மொன்றியல்

ஹ..........ஹ..........ஹா....(ஒரு தன்னடக்கமான சிரிப்பு)

கனடாவில் வெளிவரும் (தாயகம் தவிர்ந்த) பத்திரிகைகளுக்கு ஒரு போட்டி வந்தால் யார் வெல்லக்கூடும்?

ஜோ, மொன்றியால்

வைப்பது புழுகுப்போட்டி என்றால் போட்டி பலமாக இருக்கும்.... யார் வெல்பவர்கள் என்பதை சொல்வது கடினம்

மாத்தயாவுக்கு நடாத்தப்படும் விசாரணைகள் எதன் அடிப்படையில் நடாத்தப்பட இருக்கின்றன முனிவரே?

இம்மானுவேல் ரொரன்ரோ

மாத்தயா தன்மீது சுமத்தப்பட்ட குற்றங்கள் அனைத்திற்கும் 'ஆம்' என்று சொல்லும் வரையிலான அடிப்படையில்.....

புலிகளுக்கு சாமரம் வீச என இயங்கிவரும் இங்குள்ள ஒரு அமைப்பின் சங்கத் தமிழர்களுக்குள்ளே பெரும் பிணக்கு ஏற்பட்டுள்ளது காரணம் யாதோ?

இம்மானுவேல் ரொரன்ரோ

கற்றாரை கற்றாரே உறுமுவர்

ஒரு பிரபாகரன் போனால் ஆயிரம் பிரபாகரன் தோன்றுவார்கள் என தொண்டமான் சொல்லியிருக்கிறாரே?

ராஜேஸ்வரன் ரொரன்ரோ

இந்த வாராதுபோல வந்த ஒரு மாமணி தொலைந்துபோனால் ஆயிரம் மாமணிகள் கிடைக்கும் என்கிறார் தொண்டமான் உண்மைதான்.

ஈழநாடு பத்திரிகை பாரீஸில் எரிக்கப்பட்டதற்குப் பின்னால் ஒரு வலிய கரம் இருப்பதாக புலிகளின் திலகர் அறிக்கை விட்டிருக்கிறார் இதன் அர்த்தம் என்ன?

கருணா, ஸ்காபரோ

இதற்கு நான் பதில் தருவதைவிட ஆக்கிரமிப்பு இந்தியாவில் சுமார் 73 வருடங்களுக்கு முன்பே செத்துத் தொலைத்த அந்த சுப்பிரமணிய பாரதியார் திலகருக்கு என்று எழுதிய கவிதையை தருவதுதான் பொருத்தம்.

"ஓய் திலகரே நம்ம ஜாதிக்கடுக்குமோ? செய்வது சரியோ சொல்லும் முன்னறியாப் புது வழக்கம்- நீர் மூட்டிவிட்ட திந்தப் பழக்கம்-இப்போ தெந்நகரிலு மிது முழக்கம் -மிக இடும்பை செய்யுமிந்த ஒழுக்கம் சிறு பிள்ளைகளுக்கே யுபதேசம் நீர் பேசி வைத்ததெல்லாம் மோசம்.

எந்த ஒரு விழாவிலும் வெள்ளைக்காரர்கள் கையால் பரிசு வழங்குவதையும் வாங்குவதையும் ஒரு பெருமையாகக் கருதும் எம் பெருமக்கள் சிலரை பற்றி உமது கருத்து என்ன?

கண்ணன் ரொரன்டோ

வெள்ளையன், கறுவல், வெள்ளைக்காரி, கறுப்பி என்ற பேதம் இந்த முற்றும் துறந்த முனிக்கு கிடையாது என்றாலும் கூட ஒரு ரேஸிஸ்ட் பதில்தான் சொல்ல வேண்டும் போல தோன்றுகிறது. வெள்ளைக்காரனை வேலைக்காரனாக வைத்து வாழக்கூடிய வழியில் வளரக்கூடிய வழியை கைக்கொள்ளும் தமிழனைத்தான் நான் மதிப்பேன்.

நான் தமிழ்க' கலாச்சாரத்தை விரும்பி மதித்தாலும் தமிழ்ப் பத்திரிகைகளை சஞ்சிகைகளை படிப்பது கிடையாது. இவற்றை படிப்பதால் என்ன சுகம் கிடைக்கும் என்கிறீர்?

கண்ணன் ரொரன்டோ

சுகம் ஆயிரம் இந்த உலகிலே... காதலிப்பதை விட காதலிக்கப்படுவதில் சிலருக்குச் சுகம் கிடைக்கிறது. எழுதுவதை விட எழுதப்படுவதில் சிலருக்கு சுகம் கிடைக்கிறது. நீர் படிப்பதை விட உம்மால் படிக்கப்படுவதால் இந்தப் பத்திரிகைகளுக்கு ஒரு சுகம் கிடைக்கிறது என்று நினைத்தாவது. படி படி... வாழ்க்கையிலே எத்தனையோ படி.....

அன்று இந்தியா இலங்கைக்கு சமாதானப் படையை அனுப்பி இலங்கைத் தமிழர் பிரச்சனையை தீர்க்க எடுத்த முயற்சியும் இன்று அமெரிக்கா சோமாலியாவிற்கு படையை அனுப்பி அங்கு நடைபெறும் யுத்தத்தை முடிவுக்கு கொண்டு வர எடுத்த முயற்சியும் தோல்வியுற்றதற்கு காரணம் என்ன?

எஸ்.ஜெயக்குமார், ஸ்காபரோ

யாருக்கும் தானமாக சமாதானத்தை வழங்கிவிட முடியாது. யுத்த போதை தலை(மை)க்கேறி நிதானமற்று போனோர்க்கு சமாதானம் கூட ஒரு யுத்தமாகத்தான் தென்படும். இவ்விரு காரணிகளுமே



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இலங்கையில் சமாதானம் குழம்பியதற்கும் இன்று சோமாலியா வில் தோல்வியடைந்து போவதற்கும் வழியாக நிற்கிறது.

காஷ்மீரில் மசூதியைக் கைப்பற்றி தங்கள் வசம்வைத்திருந்த முஸ்லிம் தீவிரவாதிகள் கடைசியில் இந்தியப்படையிடம் சரணடைந்தது அவர்களின் போராட்டம் தோல்வியுறும் என்பதையா காட்டுகிற?
எஸ்.ஜெயக்குமார், ஸ்காபரோ
இல்லை... போராட்டங்கள் என்றுமே தோல்வியடைவதில்லை. உரிமைக்காக போராடுவது வேறு, மசூதியை பிடித்து வைத்துக்கொண்டு அதன் மூலம் போராட்ட வெறியை தூண்டுவது வேறு. பண்பட்ட போராட்டத்தை வளரவிடாது வெறும் வெறியை மட்டும் தூண்ட நினைப்பவர்கள் கடைசியில் எதிரியிடமே மண்டியிட்டுப் போனதற்கு இதைவிடவும் பல உதாரணங்கள் உண்டு.

அன்று வேண்டாம் என்று அனுப்பிய இந்திய இராணுவத்தை இலங்கை அரசு வலிந்து அழைக்கிறதே, மறுபடியும் இந்தியா வந்தால் தமிழர் பிரச்சனை தீருமா? சிக்கல் அடையுமா?
ஜெயக்குமார்
இனியொருமுறை இந்திய இராணுவம் வந்தால் கதை வேறாக போகும். "சிங்கள அழைப்பில்" இந்திய இராணுவம் வருமாயின் அதுதமிழருடன் கொடூர யுத்தத்தை புரியமாட்டாது. இதை புலிகளும் நன்கு புரிந்து கொண்டு, சிங்கள அரசிற்கு தமது ராஜதந்திரத்தை காட்டவென இந்தியப்படையுடன் நல்லுறவையே பேண முனைவர். சுலபமாக வடக்கு கிழக்கு இந்திய படைவசம் போகும். அதன் பின்னர்தானே நிரந்தரமான ஸ்ரீலங்கா– இந்தியா பிணக்கு ஆரம்பிக்கும்தமிழர் பிரச்சினை ஒரு தீர்வுக்குப் போகும். (இந்தியப்படை சிங்கள அழைப்பை ஏற்குமா என்பது கேள்விக்குறி)

ஓய் முனிவரே! குஷ்பு அமலா இருவரில் ஒருவர் உம்மை திருமணம் செய்ய சம்மதித்தால் யாரை மணம் புரிவீர் என சொல்லக்கடவீராக.....!
சிவா ரொரன்டோ
யானைக்கு வாலாய் இருப்பதை விட பூனைக்குத் தலையாய் இருக்கலாம் ஐயா.....

வாழ்க்கையின் அர்த்தம்தெரிந்த எம் மாவீரன கூட மரணத்துக்குப் பயந்து ஒளிந்து வாழ்கிறான் என்றால் அதற்குக் காரணம் யாது?
இளமுருகு, ஸ்காபரோ
தனது வாழ்க்கையின் அர்த்தம் மட்டும் தெரிந்த மாவீரன் அவன்.

மாத்தயாவுக்கு ஆதரவாக சுவரொட்டிகள் லண்டன், பாரிசில் காணப்பட்ட காரணம் என்ன?
இளமுருகு ஸ்காபரோ
ஈழத்தில் கூட இன்று அந்த மண்ணின் யதார்த்த நிலைமை பின்னே தள்ளப்பட்டு இயக்க முரண்பாடுகள் முன்விகரமாயிருப்பதால் மாத்தயா குழு விடுதலைப்புலிகளுக்கும் அவர்களது 'போராட்டத்திற்கும்' எதிரான அணியாக செயல்பட்டு வருகின்றது. இத்தன்மைகொண்ட அணி ஈழத்தமிழர்கள். புலம்பெயர்ந்த அனைத்து நாடுகளிலும் பரவலாக இருப்பதைக் காணக்கூடியதாக இருக்கின்றது.

சுபமங்களாவில் மகரந்தன் என ஒருவர் எழுதிய கட்டுரைக்கு வரிந்து கட்டிக்கொண்டு முன்னால் பச்சை இலக்கிய விமர்சகர் பதிலெழுதியிருக்கிறாரே.. படித்தாயா முனிவா....
தேவா, ரொறன்ரோ
படித்தோம் ...படித்தோம். அந்த விமர்சகர் இதுவரை எழுதியவற்றில் உருப்படியான ஒரு கட்டுரை இதுதான். ஆனாலும் முழுப்பூசணிக்காயை சோற்றில் மறைப்பதுபோல புதிய சரித்திரமே எழுதி வரும் விடுதலைப்புலிகளை ஆதரிக்கும் கூட்டத்தைதான் இவர் சேர்ந்தவர் என்பதும் குழந்தை ரகசியம். பெட்டிசம் எழுதுவதுபோல இவர் எழுதிய கடிதத்தில் உண்மை சொல்ல வேண்டும் என்பதைவிட தேடகத்தை குத்தவேண்டும் என்ற காழ்ப்புணர்வுதானே முதன்மை படுகிறது. மேலும் அனாமதேய கட்டுரையை பிரசுரித்த கோமல் சுவாமிநாதனை விட இவ்விடயத்தில் பெரிய தவறு செய்தவர்கள் யாரும் இல்லை என்பதுதான் எனது அபிப்பிராயம். இராவணன், சஞ்சயன் போல ஒரு புனைபெயரில் எழுதிய மகரந்தன் யார்? தேடகத்தின் மீது 'உலகளாவிய வகையில்' அபகீர்த்தியை உருவாக்க இத்தகைய கடிதத்தை இவர் போன்ற ஒரு புலி ஆதரவாளரே எழுதியிருக்கலாமல்லவா?

வாழ்க்கையின் சோகங்களுக்கு இறைவனா மனிதனா காரணம் முனிவா?
கணேஷ், மொன்றியல்
சின்னச் சின்னத் தோல்விகளால் பின்னப்பட்ட பெரிய தோல்விதான் வாழ்க்கை. மனிதனுக்கும் பங்கில்லை. இறைவனுக்கும் பங்கில்லை.

கோவில்களைப்பற்றி தாயகத்தில் எழுதி வந்த கட்டுரையை படித்து மனம் புண்பட்டோம் இத்தகைய கட்டுரைகளை நெடுநாளைய எம்போன்ற தாயக வாசகர்களை வேதனைப்படுத்தியுள்ளது. முனிவரே
தாயகப்பிரியன்,மொன்றியல்
கோவில் என்பது ஒரு புனித ஸ்தலம். இங்கு பக்தி வியாபாரமாகுவது கவலைக்குரிய விடயம். எனினும் தீவிர மத உணர்வு கொண்டவர்களின் மனதை வடுப்படுத்தும் விடயங்கள் பத்திரிகைகளில் வெளிவரும்போது ஏற்படும் தாக்கத்தை நாங்களும் உணரவில்லை. தாயகத்தில் வெளிவரும் எந்த விடயமும் சமூகத்தின் நன்மைகருதியே (முனி பதில் தவிர) என்பதை உணர்வீர்களாயின் மனவேதனை தணிந்து கொள்வீர்கள்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## இடி மெலடீஸ்

அந்த நாலறை வீட்டில்
எவ்வளவெல்லாம் நடக்கிறது!
நரம்புக் கம்பிகளில்
வீணை வாசிக்கிறது..
சோணைகளில்
மத்தளம் அடிக்கிறது
நாடி நாளங்களில்
நாதசுரம் ஊதுகிறது
எல்லாம் ஒரு சேட்டை....
-இந்தக் காதலுக்கு!

## அறளை?

அந்த மனுஷன் என்றார்கள்
பொறுத்துக் கொண்டேன்
அண்ணை என்றார்கள்
அனுசரித்துப் போனேன்
(பெண்கள்) அனுதாபித்தார்கள்
ஆதங்கப்பட்டேன்
அகஸ்மாத்தாகக்
கண்ணாடி முன் நின்றேன்
ஆஹா! கண்டு கொண்டேன்!
நான்
வயதுக்கு வந்துவிட்டேன்

## சமன்பாடு


தனிமனிதனாயிருந்து பார்
சமூகம் உன் எதிரி
சமூகமாயிருந்து பார்
தனி மனிதன் உன் எதிரி

## நிறத்துவேஷம்

என்ன கர்வம்
உடம்பில்
அதுமட்டும் தான்
எழும்பி நிற்கிறது
வெண் மயிர்!

**சிவதாசன்**

## ஹலோ உம்மைதான்



பின்னாலே அலைவதும் தொல்லைகள் கொடுப்பதும் ஆணுக்கு
அழகில்லையே, அவள் வாய்பேசா இனமில்லையே

தரகரைக் காண்பதும் சாதகம் பார்ப்பதும் அறிவான
செயலில்லையே, அதை அறிஞானம் சொல்லல்லியே

அப்பாக்கள் சாதியைத் தான் கேட்கிறார்
நீ குரோஸ் பண்ணும் இனமில்லையே

அம்மாக்கள் பொருளோடு பணம் கேட்கிறார்
நீ உடல் விற்கும் மகனில்லையே

வெள்ளை நிறத்தோடு ஏன் கேட்கிறாய்
நீ பொருந்தாத கறுப்பல்லவா

நல்ல வடிவோடு பெண் பார்க்கிறாய்
நீ கண்ணாடி பார்க்கல்லியா

புதுசாக இறக்கிட ஏன் ஏங்கிறாய்
நீ பழசாகிப் போகல்லியா

பல்கலை பயின்றிட ஏன் போகிறாய்
உயர் குடியோர்க்கு விலை போகவா

நாக்கை நீ தொங்கத் தான் ஏன் போடுறாய்
நாய்காசு காறோடு ஏன் சாகிறாய்
ஏய் உன்னைத்தான்! நாய்க்காசு காறோடு ஏன் சாகிறாய்

**பவான்**

## ஜாக் பிறவேரின் கவிதைகள்

தமிழில்: க. கலாமோகன்

### எனது காதலியே உனக்காக

நான் குருவிச் சந்தைக்குச்
சென்றேன்
எனது காதலியே
உனக்காக நான் அங்கு
குருவிகள் வாங்கினேன்

நான் பூக்கடைக்குச் சென்றேன்
எனது காதலியே!
உனக்காக நான் அங்கு
பூக்கள் வாங்கினேன்

நான் இரும்புச் சந்தைக்குச்
சென்றேன்
எனது காதலியே!
உனக்காக நான் அங்கு
சங்கிலிகள் வாங்கினேன்
பாரமான சங்கிலிகள்

பின்பு நான்
அடிமைகள் சந்தைக்குச்
சென்றேன்
உன்னைத் தேடினேன்,
ஆனால் அங்கு நான்
உன்னைக் காணவில்லை
எனது காதலியே!

### இரவில் பாரிஸ்

மூன்று தீக்குச்சிகள்
ஒவ்வொன்றாக அந்த இருளில்
கொழுத்தப்பட்டன...
முதலாவது குச்சி
உனது முழுமுகத்தையும்
பார்ப்பதற்காக
இரண்டாவது
உனது விழிகளைப் பார்ப்பதற்காக
கடைசிக் குச்சி
உனது உதடுகளைப்
பார்ப்பதற்காக
இவைகள் அனைத்தையும்
ஞாபகப்படுத்த
உன்னை எனது மார்பில் எடுக்க
இருளொன்றே போதும்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இலங்கை, இந்திய உணவுப் பொருட்கள், கடலுணவு, மரக்கறி வகைகள் அனைத்தும்
மலிவுவிலையில் பெற்றுக்கொள்ள விரையுங்கள்

# துர்க்காஸ் சுப்பர்மார்க்கட்

## Tel:297 9444

## விசேட மலிவு விற்பனை

மிளகாய்த்தூள் 3.29/450 கி
6.99/900 கி

| | 5 கிலோ | 1 கிலோ |
|---|---|---|
| சம்பா அரிசி | 6.99 | 1.49 |
| குத்தரிசி | 6.99 | 1.49 |
| அரிசிமா | 6.99 | 1.49 |


மைசூர் பருப்பு, உழுத்தம்பருப்பு,
துவரம்பருப்பு, பயத்தம்பருப்பு
1 கிலோ $ 1.59
2 கிலோ $ 2.99

## THURKAS SUPERMARKET

*4080 Sheppard ave E (Kennedy/Sheppard)*

சீனி 1.39/2 கிலோ
பால் 2% $2.99
முட்டை(12) $1.39
5 றேசஸ் மா $10.99
சவர்க்காரம் .39

மற்றும் ஆட்டிறைச்சி, கோழி,
கோழிக்கால், ஈரல், கிட்னி,
மரக்கறி வகைகள்,
பழவகைகள் அனைத்தும்
மலிவு விலையில்...




# ATLANTIC AUTO CLINIC LTD

## 1960 LAWRENCE AVE EAST

**Car Certification**
**29.99**

## 755 8550

**CALL**
**MIKE or RAJAN**


Exhaust,starter,Shocks,Altenater,Clutch
Radio,Transmission,Air Conditon,
General Repair
பல வருட அனுபவம் மிக்கவர்கள்

| | |
|---|---|
| 4WHEEL ALLIGNMENT | 44.99 |
| BREAK SHOES | 29.99 |
| BREAK PADS | 24.99 |
| TUNE UP FROM | 34.99 |
| ENGINE SHAMPOO | 24.99 |
| FILTER 4 CYL | 16.99 |

உங்கள் வாகனங்களை
குறைந்த செலவில் சிறந்த முறையில்
கம்பியூட்டர் இணைப்புகளுடன்
திருத்திக் கொள்வதற்கு நகரில்
ஒரு சிறந்த ஸ்தாபனம்


Fuel Injections, Electronic
and Electric
திருத்துவதில் பல வருடம்
அனுபவம் உள்ளவர்கள்

**We use Quaker State Oil**




தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

# GOOD BYE BALDNESS




## முடி உதிர்பவர்களுக்கு ஒரு நற்செய்தி


ஒரு சிறு குமிழ்
உங்கள் கேசத்தை
வளரச் செய்கிறது

பரீட்சித்துப் பாருங்கள்
Try First
பலர் இச்சிகிச்சை மூலம் பயன் அடைந்துள்ளனர்
239 Carlton St
Toronto, Ont
Tel:922-0478

## சிறந்ததையே தெரிவு செய்யுங்கள்!
## Dr.ROBERT VITAMOL, BETTER THAN VIVA HORLICKS





VITAMOL சத்துள்ளதாகவும் மிகுந்த சுவையுள்ளதாகவும் இருப்பதால் விவா ஹோர்லிக்ஸை விட விட்டாமோலை பலர் விரும்புகின்றனர். விட்டாமோல் டாக்டர்.ருெபேட்டினல் தயாரிக்கப் பட்ட சத்துணவுப் பானமாகும். விட்டமின்கள், இரும்புச் சத்து, கல்சியம், தேன் கொண்ட ஒரே சத்துணவுப் பானம் இது. உடலின் சகல பகுதிகளுக்கும் தேவையான உணவு இது. உதாரணமாக கல்சியம் எலும்புக்கு அவசியமானது. விட்டமின்களும் இரும்புச் சத்தும் இரத்தக் குறைபாட்டைத் தடுக்க அவசியமானது. எனவே சிறந்ததைக் கொண்டு உங்கள் உடலுக்கு உணவளியுங்கள். ஒவ்வொரு போத்தல் விட்டாமோலிலும் அதிகம் பெறுங்கள். தரம், அளவு, விலை என்பவற்றை ஒப்பிடுங்கள். தரத்திலும் பெறுமதியிலும் சிறந்த விட்டாமோலைக் கேட்டு வாங்குங்கள். விட்டாமோல் குழந்தைகளுக்கும் வயதானவர்களுக்கும் பரிந்துரை செய்யப்படுகிறது.




### NERVOGEN NERVE FOOD


உடலின் கடுமையாக உழைக்கும் பகுதிகளான மூளை, சிறுநீரகம், ஈரல், இதயம் போன்றவற்றிற்கு சிறந்தது. சனட்டோஜனை விட சிறந்த புரதத்தைக் கொண்டிருப்பதுடன் சுவையானதும் கூட. சிறந்த மன வளர்ச்சிக்கு கேட்டு வாங்குங்கள்.

அமெரிக்காவிலும், கனடாவிலும் மேற்கிந்திய தீவுகளிலும் கிடைக்கும்.
Universal Foods & Merchandise Co,
(416) 535-3118, Toronto, Canada




### CHATAK: CURRY EXCELLENT

Chatak Madras Curry Powder *இன்றைய நிலையில் சிறந்த கறி பவுடராகும். 475 வருட காலமாக வரும் பாரம்பரியப்படி தயாரிக்கப்பட்டது. மற்ற கறி பவுடர்களை விடச் சிறந்தது*. Chatak Meat Seasoning, Fish Seasoning, Tandoori Chicken Mix *போன்றனவும் கிடைக்கும்.*




### DR.ROBERT'S GLUCOSE

குளுக்கோஸ் மரக்கறிகளிலும் பழங்களிலும் இயற்கையாகக் கிடைக்கிறது. டாக்டர் ருெபேட்டின் குளுக்கோஸ் இயற்கையான மூலப்பொருட்களிலிருந்து அதிஉயர் தரத்திற்கு தூய்மைப்படுத்திப் பெறப்பட்டது. இது உடனடியான சக்தித் தேவைகளுக்குரியது. மூளை, இரத்தம், ஈரல், தசைகள் போன்றவற்றிற்கு சிறந்தது. பால்குடிக்கும் குழந்தைகளுக்கும் வயதானவர்களுக்கும் சிறந்தது, ஏனெனில் இது உடலினல் உடனடியாக உறுஞ்சப்படுகிறது

அன்பளிப்புப் பொருட்கள், பொம்மைகள், இலங்கை உணவுப் பொருட்கள், மேற்குறிப்பிட்ட பொருட்கள் அனைத்திற்கும் தொடர்பு கொள்ளுங்கள்

BUDGET SUPERSAVINGS DISCOUNT
1340 Queen st west (East of lansdowne)
Tel:(416) 5370394

www.tamilarangam.net

# ஜோன் ஜெனே: 'கண்காணிக்கப்பட்ட' ஓர் இலக்கியக் குழந்தை

1986 இலே பிரெஞ்சு இலக்கியம் இருபெரும் இழப்புகளைச் சந்தித்தது. உலகப்புகழ் பெண்ணிலைவாதியான சிமோன் து போவுவார் (SIMONE DE BEAUVOIR) ஒன்று மற்றது ஜோன் ஜேனே (JEAN GENET) 1910 இலே பிறந்த ஜேனே பற்றி 1942 இல் ஜோன் கொத்தோ (JEAN COCTEAU, புகழ்பெற்ற பிரெஞ்சுக் கவிஞர்) எழுதுகையில் "பிரான்ஸின் மிகப்பெரும் எழுத்தாளர்" என வர்ணித்துள்ளார். இவரது இழப்பினையொட்டி பிறிஜிற் சாலினோ (BRIGITTE SALINO) வரைந்த படத்திலிருந்து (பார்க்க:17-23 ஏப்ரல், 1986, L'EVENEMENT DU JEUDI, பிரெஞ்சு வார சஞ்சிகை) சில பகுதிகளை அப்படியே மொழி பெயர்த்துத் தருகின்றேன்:

"ஜோன் ஜேனேக்கு, ஒருபோதுமே முகவரியென்று எதுவுமே இருக்கவில்லை. சிறைவாசம் என்றால் என்ன என்பதைத் தெரிந்திருந்த இவர், தனது வாழ்வு முழுவதையும் உத்தியோகபூர்வ ஒழுங்குகளைக் குழப்புவதிலேயே கழித்தார். சூட்கேஸ்கள் இல்லாத மனிதராகவும், துர்அதிர்ஷ்ட இரவுகளின் மனிதராகவும் இவர் இருந்தார். தனது கடைசிக காலங்களில் இன்னொரு நகரிலிருந்து இன்னொரு நகருக்கு மாறுபவராக இருந்தார். ஜோன் ஜேனே. எங்கு சிநேகிதர்கள் இருந்தனரோ அங்கெல்லாம் சென்றார்– அம்ஸ்ரர்டாம், லண்டன், பாரிஸ் அல்லது றபா. ஹோட்டல்களிலே தங்கினர். அங்கேயே தனது வாழ்வை நடத்தினர், பணம் தேவைப்பட்ட வேளைகளில் செபஸ்தியன்-போத்தன் வீதியிலுள்ள தனது பிரசுர நிறுவனமான காலிமாரிடம் (GALLIMARD) சென்று, ஓர் என்வலப்பைப் பெற்றுக்கொண்டு திரும்பினர்."

★ ★ ★

**இருத்தலியல் விசாரணைகள்**

**கௌந்தி**

பிரான்ஸில் வாழும் க.கலா மோகனது கவனத்தை ஜேனே 1989ல் ஈர்த்துக்கொண்டார். "பிரெஞ்சு இலக்கியத்தின் பயங்கரக் குழந்தை" (பார்க்க, வீரகேசரி, 26. 02.89) என்ற தலைப்பில் இவர் எழுதிய கட்டுரை, தமிழில் ஜேனே மீது அதிக தகவல்களைத் தரும் ஒரேயொரு கட்டுரையாக இருக்கும் என நான் கருதுகின்றேன். பிரஸ்தாப கட்டுரையில் "குற்றமும் அழகியலும்" என்ற மகுடத்தின் கீழ் எழுதப்பட்டவைகளை அப்படியே தருகின்றேன்: "சமூகத்தில் குற்றங்களென்று வரையறைப் படுத்தப்பட்டுள்ள நடிவடிக்கை களின் மீது ஜேனே வைக்கும் அழகியல் பார்வை 20 ஆம் நூற்றாண்டுப் பிரெஞ்சு இலக்கியத்தில் ஒரு தாக்கத்தை உண்டு பண்ணியுள்ளது. சமூகத்தின் "தடுக்கப்பட்ட யதார்த்தங்களில்" ஜேனே கலையின் நர்த்தனம் கண்டவர். ஆழ்மன மர்மங்களுடன் பின்னிப்பிணைந்து கிடக்கும்" குற்றத்தினுள் அழகு பற்றிய கருத்தோட்டம் 19ம் நூற்றாண்டில் ஜேர்மனியில் வாழ்ந்த சர்ச்சைக்குரிய தத்துவஞானியான பிரெடெரிக் நியெற்ஷேயினல் உதிரியாகக் கொண்டு வரப்பட்டுள்ளது. "ஒரு குற்றவாளியின் சட்டத்தரணிகள், அவனது நடவடிக்கையின் பின்னால் இருக்கும் பயங்கர அழகினை மிகவும் அருமையாகவே அவனது லாபத்துக்காகப் பயன்படுத்துகின்றார்கள்." என்று நியெற்ஷே உதிரியாகச் சொல்லிச் சென்ற கருத்திற்ஜேனே முழுமையான ஒரு அந்தஸ்த்தைத் தனது எழுத்துகளில் கொடுத்திருக்கின்றார். தாயினதும், தந்தையினதும் பின்னணிகளைத் தெரியாமலேயே வாழ்ந்துவிட்ட இவர் சமூகத்தின் சிதைந்து போன பக்கங்களில் சாகுமட்டும் உழன்றது ஓர் கொதிக்கும் உண்மை. இலக்கியம் அவரது அடையாளத்தைக் காட்ட ஓர் மூலதானமாகின்றது. சிறைகளிலும், சிவப்பு விளக்குப் பகுதிகளில் வாழும் மனிதர்களையும், அவர்களது நடிவடிக்கைகளையும் ஜேனே இலக்கியமாகிய விதம் புதுமையானது."

★ ★ ★

ஜேனே படைத்த இலக்கியங்களின் மீதான நுகர்வு எனக்கு உவப்பானவை. அன்னையும் பிதாவும் யார் எனத் தெரியாது, வீதியில் பிறந்து, L'ASSISTANCE PUBLIQUE எனப்படும் "சிறுவர் நன்னடத்தைப் பிரிவினால்" வளர்க்கப்பட்டு, அங்கேயுள்ள கொடுமையான தண்டனைகளுக்கெல்லாம் ஆளாகி, கள்வனாகிய (ஜேனேயின் திருட்டுகள் மீதான பட்டியல் புத்தகமாகியுள்ளது) இவர், பிரெஞ்சு இலக்கியத்தின் உள்ளங்கவர் கள்வனாக எப்படி மாறினர் என்பதையிட்டு நான் அதிசயமடைந்ததுண்டு. உலகப் புகழ்பெற்ற பிரான்ஸின் LOUVRE நூதனசாலையில் கூட ஓவியங்களைத் திருடச் சென்று பிடிபட்ட அனுபவம் ஜேனேக்கு உண்டு. தனது இருத்தலுக்காகவே ஜேனே திருடினர். L'Assistance Publique இனல் எடுத்து வளர்க்கப்பட்டோர் பலர் குற்றச் செயல்களில் இறங்குவதற்கு இவர்கள் பெற்ற தண்டனைகளும், இவர்களுக்கான சமூக அங்கீகரிப்பின்மைகளுமே காரணிகள்... ஜேனே நினைத்திருந்தால், ஓர்

**15ம் பக்கம் பார்க்க..**



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## ஜெயந்தீஸன் குட்டிக்கதைகள்



# பொன்

"பொன் நகை மாளிகை"யின் முதலாளி பொன்னம்பலம் தனது திருமணத்தின் போது ஒரு புரட்சி செய்தார். தங்கராணியின் கழுத்திலேதான் இந்தப்புரட்சி நடந்தது. இவர் அவளது கழுத்திலே கட்டிய தாலிதான் தமிழ் உலகிலேயே, முதல் தடவையாகக் கட்டப்பட்ட, அதிக நிறைகொண்ட தாலி. நான்கு பெண்கள் தாலித் தட்டைத் தூக்கிப்பிடித்தனர் என்றால் பாருங்களேன். திருமணத்துக்கு வந்த அனைவரும் தாலியைப் பற்றியே ஓகோவென்று புகழ்ந்து தள்ளினர். புகழுரையால் தங்கராணியின் நெஞ்சம்பூரித்தது. முகத்தில் ஒரு பெருமிதமும் ஏறிக்குந்தியது. தங்கராணிக்குக் கிடைத்த பாக்யம் தமக்குக் கிடைக்காதுபோயிற்றேஎனச்சில கன்னிப் பெண்கள் புளுங்கிக் கொண்டனர். ஹூம்! நகைக்கடை முதலாளிமாரைக் கொத்துவ தென்பது சுலபமான விஷயமா? பொன்னம்பலம் நகைக்கடை முதலாளியானபடியால், இவனது றெக்கோட்டை ஒருவரால் கூட உடைக்க முடியாது என்று அபிப்பிராயங்கள் தெரிவிக்கப பட்டன.

திருமணம் புரட்சிகர மானதால் "பொன் நகை மாளிகை" யின் வியாபாரத்திலும் புரட்சி ஏற்பட்டது. திருமணப் போட்டோக்கள் கடையினது ஒவ்வொரு மூலையிலும் கண்காட்சி பாணியில் தூக்கி விடப்பட்டன. தாலிகளுக்கான ஓடர்கள் வந்து மலைபோலக் குவிந்தன.

பொன்னம்பலத்தின் வியாபாரப் பகையாளியான செல்வராஜாவுக்கு இது எரிச்சலையூட்டியது. அவரது கடையைப் பெட்டைகள் எட்டிப் பார்ப்பதேயில்லை. இத்தனைக்கும் அவரோ ஒரு கட்டைப் பிரமச்சாரி. பொன்னம்பலத்தைப் பொன்னம் பலம்பாணியில் வீழ்த்த ஒரு திட்டம் போட்டார். சத்தியலட்சுமி என்னும் பெண்ணை உடனடியாகவே சிலோனிலிருந்து இழுப்பித்தார். தனது கடையிலுள்ள தங்கமனைத்தையும் உருக்கி தங்கராணிக்குச் செய்த தாலியைக் காட்டிலும் டபிள் மடங்கில் ஒன்றைச் செய்தார்.

தகவல் உடனடியாகவே பாரிஸ் முழுவதும் பரவியது. செய்தி அறிந்த தங்கராணி மயக்கம் போட்டு விழுந்தாள். விழித்து எழுந்ததும் தனது பிறண்ட்ஸ்க்குப் போன்பண்ணி, சத்தியலட்சுமி கண்டங்கறுப்பி எனச் சொன்னாள். இத்தனைக்கும், தங்கராணி ஒன்றும் ஜீனத் அமன் அல்ல. பொன்னம் பலத்தை காட்டிலும் இரண்டு மடங்கு பருமன், அவ்வளவுதான், பொன்னம்பலமும் செய்தி அறிந்தார். தனது கீர்த்திக்குக் களங்கம் வந்துவிட்டதே என்ற கவலையோடு வீடு வந்தால், தாலியைக் கழட்டி ஆத்திரத்துடன் அவர்முன் வீசி எறிந்தாள் தங்காணி. தான் சிலோனுக்கே திரும்பிப்போவதென முடிவெடுத்து விட்டதாகவும் மிரட்டினாள்.

ஒரு மாதம் ஓடியது.

செல்வராஜா சத்தியலட்சுமி திருமணம் இனிதே நடைபெற்று, எல்லோரும்செல்வராஜா பற்றியே பேச வெளிக்கிட்டனர். திருமணத்தின் போது அள்ளிய காசுகளை வைத்துத்தனது கடையை அவன் சோடித்தான். வியாபாரம் சூடுபிடித்தது. ஆனால், "பொன் நகைமாளிகை" தன் புன்னகையை இழந்தது. எப்படியாவது, செல்வராஜாவின் வியாபாரத்தை மண்கவ்வ வைக்கவேண்டும்என்று பொன்னம்பலம் முடிவெடுத்தார்.

ஒரு நாள் இரவு தங்கராணியிடம் 'இழந்த புகழைத் திரும்பவும் பெற ஒருதிட்டம்தீட்டியிட்டன்' என்றார். 'என்ன?' என்று அவதிப்பட்டாள் தங்கராணி.

'நான் திரும்பவும் கலியாணம் செய்யப் போறன்' என்றார்.

"சண்டாளா! என்னைக் கலியாணம் முடிச்சு ரெண்டு மாதம் கூட ஆகேல்லை. நான் வேறை ஒரு மாதம். அதுக்குள்ளை என்னை விட்டிட்டு இன்னொருத்தியைக் கலியாணம் செய்யப் போறியோடா?" என்று புலிபோல சீறினாள்.

"நான் சொல்லிறதை வடிவாக் கேளும். நான் உம்மைத் தான் திரும்பவும் கலியாணம் செய்யப்போறன். அவன் சத்திய லட்சுமிக்குக் கட்டினதைக் காட்டிலும் ரெண்டு மடங்கிலே ஒரு தாலி செய்து உமக்குக் கட்டப்போறன்" என்றதும், புலியாகச் சீறிய தங்கராணி பூனைபோல அவரது அணைப்புக்குள் அடங்கிக் கொண்டாள்.

கிறிஸ்தவ திருமணங்களில்
மணப்பெண்ணிற்கான தலைச்சோடனை,
அலங்காரப் பொருட்கள்
குறைந்த விலையில்
வாடகைக்கு பெற்றுக் கொள்ள
மாஜி 796 2672
நீங்கள் விரும்பிய விதங்களில் பூக்கொத்துக்கள்
செய்து தரப்படும்
Net, Colorful Flower Bouquet, Flower Basket



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# காள்ரனில் ஒரு களை(கட்டிய)விழா

## நமது நிருபர் இளவழகன்

***(கால்ற்றன் என்று இருந்தது காள்ரன் என்று மாறியது – SRI, SHRI ஆக மாறியதுபோல் ஒரு இதுங்க)***

கடந்த 22.1.94 அன்று காள்ரன் பல்கலைக்கழகத்தில் காற்ரன் தமிழ் மாணவர் மன்றத்தின் ஐந்தாவது ஆண்டு கலைவிழா விழாவினரால் (யார் இந்த விழாவினர், பின்னர் கவனிப்போம்) 'மொத்தத்தில சிறப்பாக நடைபெற்றது.

துண்டு பிரசுரத்தில் 5:30 க்கு ஆரம்பம் என்றிருந்தது. ஒரே அவசரம் இலக்கம் 7 பஸ் இன்னமும் ஒரு நிமிடத்தில் வரும் என்றது தொலைபேசி. தரிப்பிற்கு அவசர ஓட்டம். ஒரு நிமிடம் போதும். பஸ்போய்விட்டது. ஒரே துக்கம்! கலைவிழாவுக்கு பிந்தப்போகிறோமே என்று. அடுத்த பஸ்சில் மண்டபத்தை 5:20 க்கே அடைந்தாயிற்று. பஸ் ஓடுவது அவன்கள், விழா நடத்துவது நாங்கள். விட்டான்கள் சிங்கங்கள், பார்வையாளரை அறிந்த பங்காளர், பங்காளரை அறிந்த பார்வையாளர். இருசாராருமே சபையில் இல்லை. 6 மணிக்கு சுமார் 100 பேர்வரை கூடினர். 6:40 ற்கு விழா ஆரம்பமானது.

தமிழ்தாய்வாத்துடன் (ஏங்க முறைக்கிறீங்க? கால்ற்றன் என்பதை காள்ரன் என்று மாற்ற தமிழ் புலமை ஒன்று கூறியதாம். இரண்டு குற்றெழுத்துக்கள் அருகில் வரக்கூடாது என்று. அதுதாங்க நாங்களும் வாழ்த்தில் வேறு வழியின்றி ழ் ஐ சுட்டுவிட்டோம்) வாழ்த்து பாடல் வர பிந்தியதே விழா பிந்தியதற்கு காரணமாம். (கிட்டு கொண்டு சென்ற சமாதான ஒப்பந்தம் போல் இதுவும் ஒன்று?)

முரசொலி– தமிழர் தகவல் ஆசிரியர் திருச்செல்வம் (ஈழமுரசு ஞாபகமா? ஒதுக்குங்க அதெல்லாம் இங்க) Lighter தட்டி மங்கள விளக்கேற்றினர் பிரதம விருந்தினர் என்ற முறையில். அதனைத் தொடர்ந்து பொங்கல் வாழ்த்து, வரவேற்புரைகள் நடந்தன.

கலைநிகழ்ச்சிகள் வரிசையில் முதலில் இடம் பெற்றது வாத்திய இசை. ஒரு பெண்ணும் நான்கு ஆண்களும். பெண் காலாலே தாளம்போட சிவசோதி தலையாலே தாளம் போட்டார். பெண் போய் ஆண் வந்தார். புல்லாங்குழல் கொடுத்த மூங்கில்களே என்றது புல்லாங்குழல். அடுத்து வந்தது சின்ன கண்ணன் அழைக்கிறான் மொத்தம் இருபது நிமிடங்கள்.

அடுத்து இரு பாரத மண்ணிக்கவும் பரதப் பெண்கள் நடேசுவரருக்கு நடேச கௌரதம் ஆடினர். ரசித்து ஆடினார்கள், ரசித்து பார்த்தார்கள் ஆனால் ரசிக்கப்பட்டது வெவ்வேறு. மீண்டும் அளவான 8 நிமிடங்கள்.

பிரதமர் பேசினார் தமக்கு யாழ்ப்பாணத்தில் இருப்பது போன்று ஒரு பிரமையாம். (ஏங்க மட்டக்களப்பு, திருகோணமலை, மன்னார், வவுனியாவில் கலைகள் இருக்கவில்லையா? யாழ்ப்பாணத்தானை திருப்திப்படுத்திய பழக்கதோஷம் போலும்) அசம்பாவிதங்கள் இன்னமும் இல்லை என்று சந்தோசப் பட்டார். பொலிஸ் பாதுகாப்பும் நாடப்பட்டு இருக்கவில்லை (அதுதாங்க நம்ம 'திராவிடர்' பற்றி). அகதிகள் நிராகரிப்புக்கு, நாடு கடத்தல்கட்கு நம் 'திராவிடரின் செயல்களும் காரணமாம்' என்று அதிகாரிகள் சொன்னார்களாம். (அவர்களுக்கு மட்டும் கண் உள்ளதாங்க? ஏங்க நீங்க குருடா? ஸ்டார் சொன்னது என்கிறீங்க, அதிகாரிகள் சொன்னது என்கிறீங்க... சொந்தமாய் சொல்லுங்கப்பா) தயவு செய்து அந்த அதிகாரிகளிடம் செல்லுங்கள் அப்பாவிகளை பழிவாங்காது, திராவிடர்களை மட்டும் நாடுகடத்தும்படி. அதுதான் நியாயம். அது தான் யதார்த்தம். அதற்கான (தமிழ்) மக்கள் ஆதரவை திரட்டி அரசுக்கு கொடுங்கள் (அவனவன் மொழிப்பெயரால சுத்திக்கொண்டு போக உங்களை மட்டும் மாட்டி விடுறேன் என்று முறைக்கிறீங்களா? சரி வேண்டாம்)

உமாவும், சுமுவும் 'ஆடல் கலையே தேவன் தந்தது' என்று ஆடி முடிய கவிதாநிகழ்வுகாரர் 'தப்பு கணக்கு' போட்டனர். ஆரம்பமே அமர்க்களம். திருட்டு இசையென்ருலும் மிக திறமையாக கையாண்டனர். குருவிகளின் இசைகேட்டு சபையினர் குருவிகளை தேடினர். கவிதா மட்டும் இல்லாமல் அக் கதை சார்ந்த நிழல் நாடகமும் கவியுடன் ஒன்றியிருந்தது. ஒலியமைப்பு இங்கு முத்திரை பதித்தது. காதல்.. . .முறிவு.. வெளிநாடு.. மீண்டும் காதல்– விலங்கு என்று ஒரு சராசரி இளைஞனின் கதை.

அடுத்து நடந்தது ஒட்டாவா– கால்ற்றன் தமிழ் மாணவர் மன்றத்தின் (OSTSA விழாவினர்?) வில்லுப்பாட்டு கருப்பொருள் முத்திரைசந்தை பொன்னுத்துரை கண்டுபிடித்த AIDS நோய்க்கான மருந்து பற்றியது. கருப்பொருள் கலாச்சாரமாக அமையவில்லையாம்– அது எருமையில் மழைபெய்தது போலாம் அரசியல் இல்லையாம்– ஆபத்தாம் (பத்திரிகையாளருக்கும் பயம், பல்கலைகழக மாணவாகளும் பயம்– மெல்ல பேசுங்கள் மேகங்கள் கேட்டாலே நாணும்) அடுத்து வந்தது ஐந்து சோடியினரின் கோலாட்டம். ஏறக்குறைய அதே நபர்கள் மீண்டும் திரையிசை பாடலுக்கு ஆடினர் (ஆடியவர்கள் இலங்கை தமிழர் மற்ற அனைத்தும் தமிழகத்தில் இருந்து கையாடல். சொந்தமாய் ஏதாவது செய்யுங்கப்பா)

புருஷன் கோபம், குலமகள் கோபம், மகள் கோபம், அண்ணன் கோபம், தம்பி கோபம், குடிகாரன் கோபம், எடுபிடி கோபம் என்று அனைத்து நடைமுறைக் கோபங்களையும் நன்கு சித்தரித்தது

**13ம் பக்கம் பார்க்க..**



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# சுயம் இழந்து புதிய தேசியமாகும் தமிழர்

அருண்

தமிழ் இங்கு வாழும் என்று பட்டிமன்றங்களில், வாதாடு மன்றுகளில் கொக்கரித்துக் கொள்ளுகின்றோமே, இங்கு எத்தனை பேர் தமிழராக மீண்டும் இலங்கை சென்று வாழத் தயார்?

தமிழில் கலைகள் செய்கிறோம், தமிழ்க் கல்வி கற்பிக்கிறோம், தமிழினைக் கற்கிறோம், தமிழில் பத்திரிகைகள் வெளியிடுகிறோம், ஏன் தமிழிலேயே கதைத்தும் கொள்கிறோம் இப்படித் தமிழினைக் காபாந்து பண்ணிக் கொண்டிருக்கும் எம்மில் எத்தனை பேர் நாட்டில் பிரச்சனை தீர வேண்டும், அங்குபோய் மீண்டும்வாழ வேண்டும்என ஆவல் கொண்டுள்ளோம்?

அந்நிய தேசங்களில் குறிப்பாகக் கனடாவில் இங்கத்துப் பிரசைகளாகவே வேரூன்றிக் கொள்ளவே எத்தனை பிரயத்தனங்களை மேற்கொண்டிருக்கிறோம். தமிழே தெரியாத சந்ததிகளை உருவாக்குவதில் சந்தோசம் கொண்டு செயலாற்றுகின்றோம். தமிழர் பண்டங்களை எம் சந்ததியற்கு ஆங்கிலத்தில் அறிமுகஞ் செய்கிறோம். தமிழ் உச்சரிப்புகளை ஆங்கிலத்தில் எழுதி எம் மழலைகளை 'தமிழ்ப் பேச்சு' என்று மேடையில் ஏற்றி புளகாங்கிதம்கொள்கிறோம். தமிழ்ப் படங்களின் மொழி பெயர்ப்பாளராக அப்பாவும் அம்மாவும் பிள்ளைகளுக்கு சேவையும் செய்கின்றோம் - போதாதா நாம் தமிழர்களாக திரும்பிப் போய் வாழ்வதற்கான திட சங்கல்பம். இலங்கைத் தமிழர் என்று வந்த நாம் தமிழ்க் கனேடியர்கள் என்றுநிலைமாற கால்கோள் கொண்டு விட்டோம்.

ஒரு வேடிக்கை தெரியுமா, தமிழில் சேவை என பிரதிநிதித்துவம் கொண்டிருக்கும் அமைப்புக்கு குடிவரவு விண்ணப்பம் நிரப்பவென்று சென்ற ஆங்கிலந் தெரியாத தமிழருக்கு அங்கிருந்த தமிழ்ப் பெண்மணி ஆங்கிலத்தில் கேள்விகள் கேட்டு சம்பாசணை செய்து தமிழ் வளர்த்திருந்தார். - வாழ்க உங்கள் தமிழ்ப்பணி - இப்படி தமிழருக்கு (தங்களுக்கு) சேவை செய்யவென்று தமிழ் என்பதை மறவாமல் பெயருடன் சேர்த்து வைத்திருக்கும் காரியாலங்கள் சங்கங்கள், இயக்கங்கள், என்பவற்றில் இருந்து எத்தனை பேர் நாட்டில் மீண்டும் போய் வாழும் நினைப்புடன் இருக்கிறார்கள்?

பிரச்சனை தீரப்போகிறது என நிலை வந்தால் புலம்பெயர்ந்து ஆங்காங்கு வாழும் தமிழர்களில் மனவருத்தப்படப்போகிறவர்களே ஏராளம். அல்லாவிடில் ஒருக்கால் பிரச்சனையில்லாமல் போய்விட்டுத் திரும்பலாம் என எண்ணக் கூடிய தமிழரும் ஏராளமே- அந்த நிலை வருவதற்கு எங்கள் மனங்கள் ஏன் அவாக் கொள்வதில்லை, சமரசம் தோன்ற அறிகுறி தோன்றும் போதே ஒரு பாரிய தாக்குதலை ஏன் எங்கள் தமிழ் மனங்கள் வேண்டுதல் செய்கின்றது? அந்நிய தேசங்களிலே நிரந்தரமாய் தங்கிவிட நாங்கள் ஏன் சபதம் பூண்டுள்ளோம்? - எங்கள் நாட்டில் இல்லாத வனப்பா இந்த நாடுகளில்? எங்கள் நாட்டில் இல்லாத சுவாத்தியமா இங்கு? தமிழ் மொழி மறந்து நம் நாடு என்பது மறந்து, எங்கள் தேசத்தில் வாழ்ந்துவிட்டிருந்த காலம் மறந்து, அந்தக் காலங்களின் சுகமான நினைப்புகளை மறந்து இந்த இயந்திர உலகத்தின் பிரமிப்பில் பிரியப்பட்டுப்போனது ஏன் என்று எனக்கு புரியவே இல்லை.

இங்குவந்துவிட்ட பலருக்கு நம் நாட்டு நடப்புகள் பற்றி அக்கறை இல்லாமல் போய்விட்டது. பலர் நாட்டுச் செய்திகளிலிருந்தும் ஒதுங்கியே வாழ முனைகின்றனர். பத்திரிகைகள் வாசித்து எம் நாட்டு நிலவரங்களை அறிய அவகாசம் இல்லாதோர்போல பாசாங்கு செய்கின்றனர். பத்திரிகைகள் பலவும் கூட நாட்டு அவலங்களை அம்பலப் படுத்துவதில் தயக்கங் காட்டுகின்றன. போரினை போற்றிப் புகழ்வதும், மூடிமறைப்பதும் இங்குள்ள தமிழர்களுக்கு இலங்கை வாழ் தமிழரின் துயரங்களை அந்நியப்படுத்தும் செயல்களே. இதனால் இங்குள்ளோர் அங்கு வெற்றிகரமான போர் நடந்து கொண்டிருக்கின்றது, நடக்கட்டும் என்று தங்கள் அன்றாட கருமங்களில் மட்டும் கவனிப்பில் வைத்திருப்பர், இதனால் படிப்படியாக நாட்டுடனை தொடர்பு துண்டிக்கப்படுகிறது. இன்னும் சிலர் யுத்தமென்று தொடங்கியாயிற்று, இனி கைவிட்டால் என்னவது என்று எட்ட இருந்து கொண்டே வீராப்பு பேசுவார், இவர்கள் என்னதான் நினைக்கிறார்கள்? யுத்தமென்று தொடங்கினால் முழு நாடுமே அழிந்து தான் ஆக வேண்டும் என்கிறார்களா? அழிவுகளின் அவலங்களின் பெறுமானம் அறியாதோர் மீள நிர்மாணிக்கப் படுவதின் சிரமங்களை சிந்தியாதோர். இவர்களுக்கென்ன? இவர்கள் இங்கேயே தங்கிவிட சிரத்தை கொள்பவர்கள்.

இந்நாட்டுக் கடவுச்சீட்டு பெற்றுவிட்டதில் பெருமிதம் கொள்பவர்கள், எல்லாமாக எம் தேசத்தை அந்நியமாக்க முனைபவர்கள், கனேடியர் களாகவே மாறத்துடிக்கின்ற இப்போதைய



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

தமிழ்க் கனேடியர்கள்.

இங்கு வாழும் பலருக்கு தங்கள் ஊர் நிலை பற்றி அக்கறையே இல்லை. குடும்பம் எல்லாம் இங்கேதானே ஊரில் குண்டு விழுந்தது என செய்தி எட்டினால் ஆவலாய் விசாரிப்பார்கள் பின்பு எங்கள் அயலுக்கு அதிதூரத்தில்தான் குண்டு விழுந்தது என்றுவிட்டு ஆறுதல் அடைவது மட்டுமே இவர்களின் தமிழர் மீதான அக்கறை, வருடத்துக்கு ஒருமுறை ஊரவரின் ஒன்று கூடல் என்று போத்தல்களுக்காக ஒன்று கூடுகூவதுடன் தங்கள் ஊர்பற்றிய விசுவாசத்தை உறுதி செய்வர். பின்பு பழையபடி கனேடியர்கள் தான்.

இங்கு வதியும் உரிமை கிடைத்தவுடன் அதாவது திரும்பி அனுமதி உறுதிப்படுத்தப் பட்டவுடன் ஒருமுறை ஊரின் அல்லது நாட்டின் ஞாபகம் வரும். அங்கு கனடாக் கனவுடன் வாழும் ஒரு கட்டழகியை மணம் முடித்து கூட்டிவரவே. அத்தோடு சரி நாட்டுடனான தொடர்பு. இந்தியாவில் இருந்து எம் தமிழ்ப் பிரதேசம் சென்று வந்த இந்தியர் எம் நாட்டில் ஏற்பட்ட அனுபவத்தை எமக்கே சொல்வதற்கு காசும்கொடுத்து கரகோசமும் செய்துவிட்டுதமிழரின் கடமையை நிறைவேற்றிக் கொள்வோம். அங்கிருந்து அனுப்பப்பட்ட சந்தனக் காட்டின் முசுப்பாத்தியை (குரங்குக் கூட்டமெனப் பொருள்படும்) ரசித்துக்கொள்ளும் அளவிற்கு அதில் உள்ள மக்கள் அவலங்கள், அங்கவீனர்களானதின் காரணங்கள் மனதைத் தொடுவதில்லை. ஏனெனில் நாங்கள் கனேடியர்கள். அவர்கள் தமிழர்கள்.

கனேடியர்கள் என்ற தோரணையில் இங்கு நாம் செய்யும் வன்முறைகளால், இந்தியாவில் இருந்து வந்த பின்னணிப்பாடகர் "இலங்கையில் இருந்ததுபோல் இருக்க முற்படாதீர்கள் நாகரீகமாய் இருங்கள்" என்று எங்களுக்கு அறிவுரை சொல்லும் அளவில் நாங்கள் நடந்து கொள்கிறோம் (காசையும்கொடுத்து நல்ல அறிவுரை) இந்த வன்முறைகள் கலை நிகழ்ச்சிகள் போன்ற பல தமிழர் கூடும் இடங்களில் அதிகம் நடப்பது கவலைக்குரியது.

இத்தகைய கலை நிகழ்ச்சிகள் நடத்துவோர் தமிழர்களாகவே இலங்கையில் வாழ்ந்தவர்கள் அவற்றை கைவிடக் கூடாதென்பதற்காகவும், ஆத்ம திருப்திக்காகவும் இவற்றை நடத்துகின்றனர். கூடுகின்றனர். இவர்களதும் செயற்பாட்டின்படி இவற்றையெல்லாம் கைக்கொண்டு இங்கேயே தமிழர்களாக வாழ்ந்துவிடுவதே. இவற்றையெல்லாம் அப்படியே மீள இலங்கைக்கு கொண்டு செல்வதற்காகவோ இலங்கையில் வாழ்வோரிடமிருந்து தொடர்பற்று போய் விடக் கூடாதென்பதற்காகவோ அல்ல. இதுகூட இவர்கள் தலைமுறைக்கு மட்டுமே. அது கூட இக் கலைநிகழ்சிகள் நடக்கும் இடங்களில் தமிழர்களாலேயே மேற்கொள்ளப்படும் வன்முறைகளால் முறியடிக்கப்படப் போகிறது. ஏனெனில் இத்தகை வன்முறைகளால் இக்கலை நிகழ்ச்சிகள் நடத்துவோரும், இதற்குக் கூடுவோரும் ஒதுங்க ஆரம்பித்துள்ளனர்.

ஆக இங்கே தமிழர்களாக வாழவே பிரயத்தனங்கள் பலிக்காதபோது இவர்களெல்லாம் திரும்பி நாட்டுக்கா போகப் போகிறார்கள்? சிலர் திரும்பிப் போக நினைக்கிறார்கள் இவர்கள் தங்கள் பிள்ளைகளின் பழக்க வழக்கங்களில் அக்கறை கொண்டோர், தம்பிள்ளைகள் இங்கு சீரழியப் போகின்றனவே எனக் கவலை கொள்வோர், இவர்கள் கூட திரும்பமுடியாத துரதிஷ்டநிலை. காரணம் ஊரில் நிலவும் பயங்கரங்களின் காரணமான பயம்.

ஆக இங்கிருந்து எவரும் தமிழர்களாக திரும்பிப்போக இங்கும் சாத்தியமில்லை. இங்கிருந்து மீள அங்கே அழைத்து வாழ்விக்க அங்கும் சாத்தியமில்லை.

## காள்ரனில்...

'கோபப்பட்டவரே' என்ற நாடகம். எடுபிடியின் (சிவசோதி நீங்கள் மேடைக்கென்றே பிறந்தவர்) யதார்த்தத்தை நோக்கிய கோபம் தவிர்ந்த ஏனைய அனைத்தின் விளைவுகளும் அளவாக காட்டப் பட்டன தரமான முற்றான தயாரிப்பு தொடர்ந்து இடைவேளை.

இடைவேளையின் பின்னர் ஒட்டாவா பல்லைக்கழகத்தினரின் நாடகம் (TSU) (விழாவினர்?) தலைப்பு 'காரணம்'. எதற்கான காரணம்? அரசியலுக்கு பயம், கலாச்சாரம் பயன்படாது, அப்புறம் என்ன? தமிழ் பெண்கள் Dance க்கும் Gymக்கும் வராத காரணம் தேடினர். அவர்களுக்கும் காரணம் சரியாக தெரியவில்லை போலும். இறுதியில் ஏதே சொல்ல முனைந்தனர். சொன்னவருக்கே கேட்க முடியாத அளவிற்கு சபையில் சத்தம். வீட்டுக்குள் இருந்தவள் கண்ணகியாம், ஆடியவருடன் ஆடி பின் வீட்டுள் இருந்தவளை மணமுடித்தவன் கோவலனும். ஆனால் 'ஆடியவள் மாதவிதான்' என்று மட்டும் எவ்வாறு முடிவெடுப்பீர். இது ஒரு அவசர தயாரிப்பு.

பின்னர் அதிஸ்டலாப சீட்டிழுப்பு. சுரேஸ்– முதலாம் பரிசு (துவிச்சக்கரவண்டி), நிஷாகர்– இரண்டாம் பரிசு (மைக்ரோவேவ்) 3ம் பரிசு நபர் தோன்றவில்லை. அடுத்து CUTSA சார்பில் நன்றியுரை. (செயலாளரைப் பற்றியா சீ.. வெட்கமாய் இருக்கு. போங்க). இறுதி நிகழ்சி இசைநிகழ்ச்சி. 12 பாடல்கள் முடிந்தளவு சிறப்பாக பாடப் பட்டன. இவ் இசை நிகழ்ச்சிக்கும் முதல் நிகழ்ச்சிக்கும் இடையே சுமார் 15 நிமிடங்கள் தாமதம் ஏற்பட்டதே சபையில் விடுத்த வேண்டுகோளை குழு ஏற்றது. விளைவு பார்வையாளர் தினேஷ் 'சுருங்கனி' பாடினார் இடம், காலம் கணிப்பில் இது ஒரு பாராட்டதக்க விழா. மொத்தத்தில் யாவரும் திருப்தி

21ம் பக்கம் பார்க்க..



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# எப்பவும் வரும்



சிதம்பரம் ஞா.வடிவேலனார்

இந்தக்குமரிக்கு இந்த வடிவை இதுக்கெனக் கடவுள் இப்படிக் கொடுத்திருக்கெண்டு அவளைப் பார்க்கிற எல்லோருக்கும் ஒரு பொருமை.

பதினாறு வயதெண்டா ஒரு அது இருக்கத்தான் செய்யும் ஆனா, இவளுக்கு பதினைஞ்சு வயது தானே, எப்படியெடாலும் பதினாறை விட பதினைஞ்சுக்கும் கூட ஒரு அது இருக்கும் என்பது இவளைப் பார்க்கிற சாடையில விளங்குது.

ஆண் பூவரசம்கலர். இல்ல பண்டத்தரிப்பு நல்லெண்ண நிறம். மூக்கு முகம் எல்லாம் மினக்கெட்டுச் செய்ததுபோல உயரம் வந்து வளத்தியும் இல்ல கட்டையும் இல்ல சொல்லப்போனா புதிய சாமுத்திரிகா இலச்சணம் இவளிடம் இருந்து வரும் எண்டமாதிரியான வடிவு.

சின்னப் பெட்டையெண்டு இவளைக் கணிக்கப்படாது. ஏனெண்டா வயதுக்கு ஏத்த அறிவு. பருவத்துக்கு ஏத்த செய்கை கிணத்தடி தென்னங் கண்டுக்குதான். இவள் பெரிசான பிறகு முதல் முறை பாத்தனான் என்ர அம்மாவிட தம்பி மகள் அம்மாவுக்கு வீட்டு வேலையளுக்கும் கைகொடுக்கிறவள். மாவிடிக்கிறது, நெல்லுக்குத்திறது மாவரிக்கிறது மா வறுக்கிறது எல்லாம் இவளுக்கு அத்துப்பொடி. வீட்டில மாவிடிப்பு நடக்குது எண்டா எனக்கு சந்தோசம் காவிரிபோல கங்குகரையின்றி புரண்டோடும்.

அவளுக்கு தமிழில நல்ல அறிவு, சமயம் தண்ணி. மற்றும் பாடங்களும் பறுவாயில்ல என்னட்ட கேள்விகள் கேட்பாள். நான் குடுக்கிற பதில்களை கண்டு திகைப்பாள் நல்ல கெட்டிக்காரி,

"உங்களைப்போல தமிழில பண்டிதராய் வர ஆசை" என்பாள் நான் சொல்லுவன் பண்டிதராய் இல்ல பண்டிதையா வர ஆசை எண்டு சொல்லெண்டு. உடனே சிரிப்பாள் முத்துக்கள் எல்லாம் தாங்கள் உண்மையான முத்துக்கள் தாம் என்பதை எனக்கு சொல்லும்.

"தம்பி, இண்டைக்கு அரிசியை நனையப் போட்டிற்றன் இவள் ரேணுகா வீட்டுக்கு விலக்கு, நீ இடியன் ராசா."

அம்மா என்னட்ட பரிந்து கேட்க எனக்கு பாவமாய் போயிற்று. "சரியம்மா அப்ப ஆரு அரிக்கிறது. வறுக்கிறது உங்களால ஏலுமே. இவள் ரேணு சும்மா எண்டாலும் உதவி செய்யாளே!"

"அவள் வாறதெண்டு தான் சொன்னவள். இண்டைக்குத் தானே மூண்டு, காட்டுத் தறைக்க குளிக்கப் போயிட்டாள். வருவாள் சரி நான் போய் கூட்டியெண்டு வாறன் நீ சாக்குப்போட்டு உரலை நிறுத்தியிடியன் அவள் வந்தவுடனே அரிச்சுப்போடுவாள். நான் வறுத்துப் போடுவன்."

"இஞ்சேறுங்க மாமி அதுக்கிடையில ரெண்டு கொத்துக்கு கிட்ட இடிச்சிட்டார் பட்டுப் போல இடிச்சிருக்கு. மிசின் கூட தோத்துப் போயிடும்."

"ரேணு நீ அரியடி எனக்கு ஐஸ் வைக்காத எவ்வளவு கஷ்டப்பட்டு இடிச்சனான் தெரியுமே! உனக்கு அரிக்கிறதுக்கு சுகமில்லே,"

"ஓ! இவருக்கு என்னில இவ்வளவு கரிசனை எண்டு எனக்கு இப்பதான் தெரியுது"

"ஏன் உன்னில கருசனையில்லாமலா இண்டைக்கு இடிக்கிறன்"

"எட ராசா கதைக்காம சுறுக்கா வேலையைச் செய்யடா இரண்டு பேருக்கும் கதையெண்டாக் காணும்."

"இல்லையம்மா இவள் ரேணு...."

"என்ன நிப்பாட்டிட்டியள். சொல்ல வந்ததைச் சொல்லுங்களன். சொன்னாத்தானே சரிபிழை தெரியும் மாமி என்னவேன் நினைக்க போறா சொல்லுங்க"

"ஒண்டுமில்ல மாவை ஒருக்கா அரியடி"

"சிரிக்காத நீ சிரிக்கிறதால சூரியன்ர ஒளி உன்ர பல்லில பட்டு என்ர கண் கூசுது"

"ஏன் என்னைப் பாக்கிறியள் அங்கால பார்த்தெண்டு நின்று இடிச்சா கண் ஏன் கூசப்போகுது"

அவளுக்கும் தன்ர பல்லின்மேல் அவ்வளவு நம்பிக்கை. என்ர பகிடியை எண்ணிஎண்ணிச் சிரிச்சாள்

"யான் நோக்கும் காலை நிலன்நோக்கும். நோக்காகால் தான் நோக்கி மெல்ல நகும்"

"என்ன குறள் சொல்லிறியள் உங்களை நான் பார்த்தனானே? நீங்களே பார்த்திட்டு வள்ளுவனை வேற இழுக்கிறியள் நீங்க சரியான ஆள்"

"ஏனெடி நீ பெரிய வடிவுதானே உனக்கும் ஒரு எண்ணமடி"



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

"ம்மாமி! இவரப்பாருங்க!
"எட இடியடா எனக்குத் தெரியும் இரண்டுபேரும் சேர்ந்தா வேலையொண்டும் நடக்காது எண்டு.
"அம்மா அந்த வெத்திலையத்தாம்மா"
"மாமி குடுக்காதையுங்க, பல்லுக்கறுத்துப் போகுது.
"நமக்கென்ன நாய் ஆசைப்படுகுது பல்லுக்கறுக்கட்டுமெண்"
"இஞ்சேருங்க எனக்கும் கொஞ்சம் நாறப்பாக்கு இஞ்சே"
"நான் கடிச்சிட்டன் சும்மாவிடு"
"பரவாயில்லே தாங்க. நான்தானே போடப்போறன்."
"என்ன இரண்டு பேரும் கிழவனும் கிழவியும் போல வெத்திலே சப்பியண்டு, ஒரே கதையாக்கிடக்கு"
"அம்மா! ரேணு மாதிரிப் பெட்டதானே எனக்கு கடிதம் தந்ததெண்டன்"
"ஆரடா! சொல்லன்"
"எண! வளசரவாக்கத்தில ஒரு பெட்ட தந்ததெண்டன்."
"ஓமெடா! ஓ அதற்கு"
"இல்லேயண, ரேணுவையும் நம்பமுடியாது"
"ஓ! படிக்கப் போற இடம் வழிய அவளவையளப் போல பெடியளே மடக்கிறது தானே எனக்கு வேலே. மாமி இவரை என்னோடை கதைக்க வேணும் எண்டுங்க"
"எட நாயே அவள இந்தா முகம் கறுக்க வைச்சிட்டாயே, உனக்கு என்ன கதைக்கிறது எண்டு தெரியாது. போடா அங்கால பரதேசி அம்மா! நீ இவன்ர கதையை விடு இது ஒரு லூசு இப்படித்தான் என்ன கதைக்கிறது எது கதைக்கிறது எண்டு தெரியாது."
"இல்லமாமி! இவர் ஈஈ ஆஆ..."
"சரி அழாதையம்மா விடு எடேய் வேற கதை கதையடா."
"சரி சென்னைக்கு இந்தத் தவனை போகேக்க ரேணுவையும் கூட்டிக்கொண்டு போறன் சமைக்க உதவியாயிருக்கும் வேற நோட்ஸ் எடுக்க உதவி அங்கையும் ரேணு படிக்கலாம் தானே! என்ன சரியா ரேணு"
"நான் வந்தா மாமிக்கு யாரு துணை"
சரி ஒரு வரியத்தால மாமியை கூப்பிடுறதுதானே.
"என்னத்துக்கு மாமிக்கு பேரனைக் காட்டப் போறியளோ"
"என்னடி சொன்னனீ மண்டு"
"ஓ! இப்படியான ஆக்கள்தான் பெரியாக்கள்."
"சரி! நீ வரத் தேவையில்ல. விடு கதையை நான் இருந்த மாதிரியிருப்பன் நீ மாமியை கட்டிப்பிடிச்செண்டு இரு"
"ம்மாமி பாருங்க இவர"
"சரி ரேணு உடையவன்ர சொல்லத்தானே கேட்க வேணும் அவன் சொல்லிற மாதிரி நட நானும் இப்படித்தான் மாமி, மாமி யெண்டு மாமியை கட்டிப் பிடிச்செண்டிருப்பன் இவருக்கு கோபம் பொத்துக்கொண்டு வரும், உரிச்சுக்கழட்டி இவனைப் போலதான அவர் இவனைப் பார்க்க தெரியேலயா? என்ர மாமி பிறகு சொன்னு "தங்கச்சி, உடையவன் சொற்படிதான் நடக்கவேணும் அவன் எங்கவா எண்டாலும் மறுக்காம போகவேணும் இதைத் தான் உடையவன் சொற்படி காலேக்கிளப்படி" என்று அந்தக்காலத்தில் சொல்லிறவை. நீ அவன் கேட்கிற இடத்துக்குப் போ. என்னைப்பற்றிக் கவலைப்படாதே எனக்குத்தானே வயசு போச்சு அப்படி எனக்கு சொன்னவா. அது போல நீயம்மா அவன்ர சொல்லுத்தான் கேட்கவேணும் அவனுக்கெண்டு இருக்கிற, அவனைத்தானே பார்க்க வேணும். இஞ்சையும் என்ன யாழ்ப்பாணம் முன்னைப் போலயா இருக்கு. சீர் நில சீரான பேந்து இங்கு வந்து நிரந்தரமாய் இருக்கலாம் தானே. மற்றது, அவன் நீயும் நானும் இங்க இருக்க மனம் முழுவதையும் இங்கதான் விட்டிற்று இருப்பான் படிக்கமாட்டான். நீயும் அவனோடை கூட மாட இருந்தா ஒரு மாதிரி படிச்சு முடிச்சிடுவான்.
டடக், டக் டடடக் டும் டிடும், டீம்..
"ஐயோ செல் தம்பி பங்கருக்கு ஓடு தங்கச்சி ரேணு"
"ஐயோ!"
இரத்தம் ஒரு ஆறு செய்கிறது.

யாவும் கற்பனை

## ஜோன் ஜெனே..

விதிவிலக்காக இருந்திருக்கலாம். விமர்சனமாக இருப்பதே அவரின் தெரிவாய் அமைந்தது. திருட்டு: இது ஓர் விமர்சனமும் கூட.

★ ★ ★

ஜெனே, உயிருடன் இருக்கையிலேயே, இவர் மீதான ஆய்வுகள் உலக மொழிகள் பலவற்றிலே நடந்துள்ளன. பிரெஞ்சுத் தத்துவஞானியும், "இருத்தலியலின்" தந்தையுமான ஜோன்–போல் சார்த்திர் (JEAN PAUL SARTRE ) புனித ஜேனே–நடிகனும் தியாகியும்" (saint Genet: commedien et Martyr) என்ற "பாரிய" ஆய்வு நூல் ஒன்றை எழுதியுள்ளார். "இந்த நூலை நான் முழுமையாக வாசிக்கவில்லே. அவர் எழுதியவை எனக்குச் சலிப்பைத் தந்தன" என்கின்றார் ஜேனே. சார்த்திர் மீதான ஜேனே உறவுகள் பல விரிசல்களைக் கொண்டன. "பலவருடங்களுக்கு முன்பேயே அவரது அரசியல் சிந்தனைகள் போலிச் சிந்தனைகள் என்பதை நான் விளங்கிக் கொண்டேன். எனது அர்த்தத்தில் சார்த்திரிய சிந்தனையென்று எதுவுமே இல்லே. அவரது நிலேப்பாடுகள் அவரது புத்திஜீவிதத் தீர்ப்புகளில் இருந்து வருவன, அவரால் உருவாக்கப் பட்ட பூதங்களுடனேயே மோதிக் கொள்கின்றன" என்கின்றார் ஜேனே. தான் "பிரெஞ்சுப்பிரஜை" என ஒரு போதும் சொன்னதில்லே. நிறவாதம், இனவாதம் இவைகளுக்கு எதிரான ஆர்ப் பாட்டங்களின் கூட்டாளியான இவர் "அமெரிக்க கரும்புலிகளை" ஆதரித்தார். அமெரிக்க சாம்ராஜ் யத்துள் நுழையும் உரிமை ஜேனேக்கு மறுக்கப்பட்டிருந்தது. "குடியுரிமைகள் மறுக்கப்பட்ட" ஜேனேயினது வாழ்வு ஓர் எதிர்ப்பியக்கம். "வெள்ளேயரின் சட்டதிட்டங்களுக்கு எதிரானது" என்கிறார். ஹோமோ செக்ஸுவலாகவே வாழ்ந்தவர், இவரது எழுத்துகளிலே படம் விரிக்கும் கலேயழகு ஆழமான தேடல்களின் அறுவடைகளே, இவை

27ம் பக்கம் பார்க்க..



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

மகாவம்சமும்

மறைக்கப்பட்ட உண்மையும்

# கண்ணகி வழிபாடும் கஜபாகு மன்னனும்

ஸ்ரீசங்கபோதி

இலங்கையின் சமூக பண்பாட்டு, அரசியல் உருவாக்கத்தில் தமிழருடைய பங்களிப்பு காலத்திற்கு காலம் கணிசமான செல்வாக்கு செலுத்தியிருந்தாலும் அவை வரலாற்று பதிவுகளில் இருந்து மறைக்கப்பட்டும், திரிபுபடுத்தப்பட்டும் முக்கியத்துவம் குறைக்கப்பட்டு திசை திருப்பப் பட்ட சம்பவங்கள் ஏராளம், அவற்றில் கஜபாகு மன்னனும் கண்ணகி வழிபாடும் ஒன்றாகும்.

இலங்கை வரலாறு பற்றி ஆய்வு செய்வதற்கு எமக்கு இருக்கின்ற முக்கிய ஆவணங்களாக சரித்திர குறிப்புகள், கல்வெட்டுகள், பழைய நாணயங்கள், கட்டிட இடிபாடுகள், இலக்கிய குறிப்புகள், வாய்மொழி வாக்கியங்கள் இருக்கின்றன ஆனால் பேரினவாத பேராசிரியர் பரணவிதானவின் வழிவழியாக வந்த வரலாற்று ஆசிரியர்கள் வரலாற்று திரிபு வாதத்தை கி.பி.5ம் நூற்றாண்டில் எழுதப்பட்ட இலக்கிய குறிப்பான மகாவம்சத்தையும், அதன் தொடர்ச்சியான சூளவம்சத்தையும் ஆதாரமாக கொண்டே முற்றுமுழுதாக வரலாற்று பின்புலத்தை ஆராய்கின்றபோக்கு காணப்படுகின்றது. சிங்கள பௌத்தரை முதன்மைப்படுத்தி அங்கு வாழ்ந்த ஆதித்தமிழரான இயக்கரையும், நாகரையும், அவர்கள் வழிவந்த தமிழ் குடியினரையும் இலங்கையின் வரலாற்றில் இருந்து மறைக்க என்றே எழுதப்பட்ட மகாவம்சத்தினூடே தமிழர் வரலாற்றை காணமுற்பட முடியாது.

ஆனாலும் இலங்கையின் வரலாறு என்று தனது நூலில் H.W.கொடிறின்றன் பின்வருமாறு குறிப்பிடுகிறார். "கலையும் மதப்பற்றும் தொடர்ந்து வந்த காலவொழுக்கிற்கு கஜபாகு அல்லது யானைக்கை என்ற பட்டப்பெயர் பெற்ற காமினி (கி.பி 2ம் நூற்றாண்டு) மாற்றத்தை அளிக்க கூடியவனாக இருந்தான். பண்டைக்கால ஏட்டில் இடம் பெறாத இவ்வரசன் மக்கள் வழிவந்த கதைகளில் இடம் பெற்றுள்ளான். நடுக்கால வரலாற்றின்படி இவன் தந்தையார் காலத்தில் சோழ மண்டலக் கரையோரத்தில் காவிரிக் கரையில் வேலை செய்ய 12 ஆயிரம் மக்கள் அனுப்பப்பட்டனர் என்று தெரியவருகிறது.

ஒருநாள் இரவு தன் தலைநகரில் கஜபாகு உலாவி வரும்போது தன் மகனை யாரோ கவர்ந்து சென்றமை குறித்து அழுத ஒரு விதவையின் ஓலத்தை கேட்டான். தன் தந்தை காலத்தில் நடந்ததை அறியாத இம்மன்னன் தன் படை வீரரை கூட்டினான். எனினும் துணையின்றி தானே தனித்து தான் எண்ணி முடிக்க உறுதி கொண்டான். இராசாவலி இக்கதையை பின்வருமாறு கூறும்.

"இவ்வரசன் நீலன் எனும் சூரன் ஒருவனை தன்னோடு கொண்டு சென்று அவன் மூலம் சோழமன்னன் தன்னுடன் தமது தந்தையின் காலத்தில் கொண்டு சென்ற மக்களின் இருமடங்கினரை அனுப்புவதற்கு சம்மதிக்கும் அளவிற்கு வீரசாகசங்களை செய்து காட்டினான் பண்டை நாளில் எங்கள் குலத்து மன்னன் விண்ணவர் நகரம் சென்று அசுரரோடு நடந்த போரில் கொண்டவன் என்று கூறிய சோழன் பின்பு கஜபாகுவின் வேண்டுதலுக்கு சம்மதித்து இருபத்திநாலாயிரம் மக்களை அவனிடம் அனுப்பினான். அவர்கள் அரசனால் பல்வேறு மாவட்டங்களிலும் குடி வைக்கப்பட்டனர்."

மேற்கூறிய ராசாவலியில் இருந்து அறியக்கூடியது என்னவெனில் சிங்கள மன்னர்களில் இவ்வளவு துணிச்சலுடன் சோழமன்னனிடம் சென்று தம் மக்களை திருப்பி கொண்டுவந்த கஜபாகு பற்றி மகாவம்சம் போன்ற பழைய நூல்கள் அதிகம் பேசிக்கொள்ளாததற்கு காரணம் கஜபாகுடன் சென்றவன் ஒரு தமிழன். அவனை சுருக்கமாக நீலன் என வரலாறுகளில் குறிப்பிட்டாலும் அவளது இயற்பெயர் நீலவர்ணன். இவனே இரண்டாம் நூற்றாண்டில் வட இலங்கையில் வளங்கொண்ட ஆட்சியாக வளர்ந்த வெடி அரசன் ஆட்சியின் வாரிசு. இவர்களுடைய வட புலத்தின் ஆட்சியும் அவர்களின் அழிவுற்ற நிலையில் நெடுந்தீவில் இன்னும் இருக்கும் வெடி அரசன் கோட்டையும் மாற்றம் கண்டதும் சோழர் காலத்திலேதான்.

கி.பி 1ம் நூற்றாண்டுகளில் இலங்கையில் ஆட்சி புரிந்த சிங்கள மன்னர்கள் பலவீனமானவர்களாக இருந்தார்கள். குறிப்பாக கஜபாகுவின் தந்தை வங்க நாகதீசன் ஆட்சி மிகவும் தளர்ச்சியடைந்ததாக இருந்தது. இதனால் வடபுலத்தில் முகுழி நாகர் வழிவந்த வெடிஅரசன் என்போன் தனது வீரத்தினாலும், திறமையினாலும், விடாமுயற்சியினாலும் இலங்கையில் வடக்குப் பகுதிகளையும் தீவுப்பகுதிகளையும் இணைத்து ஒரு அரசை நிறுவி தம்பியர் நால்வரையும் பிராந்திய ஆட்சியாளர்களாக வைத்து

**26ம் பக்கம் பார்க்க...**



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# ஒரே ஜாதகம் இருவருக்கு அமையுமா?

**சிவப்பிரகாசம்**

"ஒரே நேரத்தில் பிறந்தவர்களின் வாழ்வு ஒரே மாதிரியாகவா இருக்கிறது. சோதிடம் என்பது பொய் என்பதற்கு அதுவே சான்று" என பலர் சொல்வதைக் கேட்டிருக்கிறேன். சோதிடம் பற்றிய தவருன விளக்கமே இப்படியான அபிப்பிராயங்களுக்கு காரணம். ஒரே கைரேகை எப்படி அமைவதில்லேயோ அதுபோல ஒரே ஜாதகம் இருவருக்கு அமையாது. இந்த விஷயத்தை ஒரு சோதிடருக்கு சொல்ல முனேந்த போது அவர் சிரித்துவிட்டு இரண்டு ஜாதகங்களே என்முன் போட்டார். இரண்டினதும் கிரகநிலேயும் நவாம்சமும் ஒன்ருகவே இருந்தது. ஜாதகத்தின் மீதிப்பகுதிகள் எங்கே என்று கேட்டேன். அவருக்குப் புரியவில்லே. அதைப் புரிந்து கொள்வது அவரின் தொழிலிற்கு தேவையும் இல்லேயாம். இலங்கையில் சுமார் இரண்டு மணித்தியாலத்துள் பிறக்கும் குழந்தைகளுக்கு சிலவேளேயில் ஒரே கிரகநிலே அமைய வாய்ப்பு உண்டு. அதேநேரம் சுமார் 12 நிமிடத்துள் பிறக்கும் குழந்தை களின் நவாம்சமும் சிலவேளே ஒன்ருக இருக்கலாம். துவதாம்சம் என அழைக்கப்படும் சக்கரம் சுமார் 10 நிமிடத்துள் பிறக்கும் குழந்தைகளுக்கு ஒன்ருக அமையலாம். ஆனல் ஜாதகத்தின் மீதிப்பகுதிகள் ஒன்ருக வரும் சாத்தியங்கள் மிகமிக அருமை. ஷஷ்டியாம்சம் என்ற சக்கரம் சுமார் 2 நிமிடங்களுக்குள் பிறந்தவர் களுக்கு ஒன்ருகலாம். உருத்திர பூர்வ நாடியாம்சம் என்பது சுமார் 24 செக்கனுக்குள் பிறந்தவர் களுக்கே ஒன்ருகலாம். அதையும் கூறிட்ட நாடியாம்சத்தில் 6 செக்கனுக்குள் பிறந்தவர்களுக்கே ஒன்ருகலாம்.

இவை எல்லாவற்றையும்விட கிரகஸ்புடங்கள் ஒரே கணத்தில் பிறந்து முதற்சுவாசம் செய்யும் குழந்தைகளுக்கு மட்டும் ஒன்ருக முடியும். இவ்வாருக ஒருபோதும் அமையாது என்பது இந்து சோதிட முடிவு. குழந்தை பிறந்த நேரத்தை நிமிடத்தில்தான் வைத்திய சாலேகளில் தருவார்கள். அப்படி யாஞல் எப்படி செக்கனில் மாறுபடும் துல்லியமான சாதகத்தை கணிப்பது? இது சிக்கலான கேள்வி மட்டுமல்ல சிக்கலான விஷயம் கூட, இதற்கு ஒரு வழி இருக்கிறது. குறித்த நாழிகைக்கு (நேரத்துக்கு) சாதகத்தை எழுதிவிட்டு அதன் பின் பிள்ளேயின் இயல்பு பெற்ருேர் சகோதரர் போன்ற மற்றய விபரங்களே கேட்டு அதற்கமைய பிறந்த நேர விதற்பரைகளே (செக்கன் களே) அறிவதுதான் அந்தக் காலத்தில் கைக்கொள்ளப் பட்ட முறை. நான் மேலே குறிப்பிட்ட விஷயங்களே கணிப்பது மிகவும் கடினமானது மட்டுமல்லாமல் நாட்கள் செலவாகும் என்பதால் சாதாரண வர்களுக்கு அவை கணித்து எழுதபபடுவதில்லே. அன்றைய காலத்தில் அரசர்களுக்கும் ஜமீந்தர் களுக்கும் கணிக்கப் பட்டது. அரசர்கள் போர்களில் தாம் வெல்லக்கூடிய சாத்தியக்கூறுகள் அறியவும் அரச குடும்பத்துக்கு அமையக்கூடிய அழிவுகளே அறியவும் அன்று முதல் சோதிடர்களின் தயவை எதிர்பார்ப்பது வழக்கம். அண்மைக காலங்களில் அமெரிக்க தலேவர்களே சில விஷயங்களுக்கு சோதிடர்களே நாடினுர்கள் என எங்கேயோ படித்த ஞாபகம்.

கிறிஸ்தவர்களின் சுவிசேஷங்களின் படி மோசஸ் (TEN COMMANDMENTS படத்தில் வருவாரே) காலத்துக்கு முன்பே அத்தேசங்களில் அரசர்கள் சோதிடத்தை தமது ஆலோசனேயின் அங்கமாக அங்கீகரித்திருப்பது தெரிய வருகிறது. ரோம் நாட்டுச் சரித்திரப்பிரகாரம் ஆஸம் என்ற ராஜகுமாரன் 21 வது வயதில் பலதேசங்களே வெற்றிக்கொண்டு சக்கரவர்த்தி ஆகுவான் என சொல்லப்பட்ட நம்பமுடியாத விஷயம் அப்படியே நடந்ததாம். தைமூர் என்ற சக்கரவர்த்தி பல உள்நாட்டுப் பிரச்சனேயாலும் அயல்நாட்டு படையெடுப்பாலும் செய்வதறியாது திகைத்து நின்ற சமயம் ஒரு நாளே குறிப்பிட்டு அதன்பின் வெற்றிக்குரிய நிலேயை அப்துல்லா லிசாம் என்ற சோதிடர் கூற அது அப்படி நடந்தது. பிரான்சு தேசத்து அரசனுகிய 14 வது லூயிஸ் கணித்து எழுதப்பட்ட ஜாதகம் அவ்வரசனின் நிலேமையை அப்படியே எடுத்துக் கூறுவதாக சரித்திர ஆய்வு கூறுகிறது.

இவ்வாருன துல்லிய ஜாதகங்களே பஞ்சாங்கத்தை உபயோகித்து கணிக்க முடியாது. பஞ்சாங்கம் என்பது சாதாரண உலக வழக்கத்திற்கு தேவையான அண்ணளவுடன் கணிக்கப் படுபவை, கிரகங்களின் நிலேமை கள் செக்கனுக்கு செக்கன் வேறுபடும். கிரகங்களின் வேகங்களும் அவ்வாறே. சோதிட நூல்களின் படி ஜாதகங்கள் கணிக்க ஸ்புட முறையையும் பஞ்சாங்கம் கணிக்க சார முறையயும் கூறியுள்ளார்கள், ஆனல் வசதி கருதி ஜாதகம் கணிக்க பஞ்சாங்கத்தையே பலரும் உபயோகிக்கின்றனர். சார (பஞ்சாங்க) கணிதம் என்பது அண்ணளவாக்கப்பட்ட ஸ்படத்தின் மறுதலேயே. மிகத் துல்லியமாக ஸ்புட முறையில் ஏன் ஜாதகம் கணிக்க முடியாது என்று கேட்டால் கணிப்புக்கு செலவாகும் நேரமே தடையாக உள்ளது. ஆனல் இந்தக் கம்பியூட்டர் யுகத்தில் எதுமே இயலாது என்று கூறமுடியுமா?



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# அவசரகாலச் சட்டம், அரசுக்கு புறம்பான அமைப்புகள், ஜனநாயகம்

சார்ல்ஸ் அபேசேகர

தலைவர்- இனங்களுக்கிடையே நீதிக்கும் சமத்துவத்திற்குமான இயக்கம்

தமிழாக்கம்: செ. லோகநாதன் நன்றி யுக்திய ஜனவரி 23 1994

அரசுக்கு புறம்பான அமைப்புகளை (NGO) ஏதோ ஒருவகையில் அரசாங்கத்தின் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரும் நோக்கத்துடன் அவசரகாலச் சட்டமொன்று அண்மையில் பிரகடனம் செய்யப்பட்டது. இவ் அவசரகாலச் சட்டத்தின் படி அதில் வரைவிலக்கணம் கூறப்பட்டுள்ள வகையைச் சார்ந்த அரசுக்கு புறம்பான அமைப்புகள் சமூக சேவை பணிப்பாளரிடம் தம்மை பதிவு செய்து கொள்ளல் வேண்டும். அமைப்பின் யாப்பு, முடிவுற்ற வருடத்திற்கான அறிக்கையும் கணக்குகளும், எதிர்வரும் வருடத்தின் உத்தேச வேலைத திட்டம் என்பனவற்றையும் அவருக்கு அறிவிக்க வேண்டும் இதன் பின்னர் ஒவ்வொரு வருடமும் மார்ச் 31ம் திகதிக்கு முன்னர் நிறைவுற்ற வருடத்துக்கான கணக்குகளைச் சமர்ப்பிக்க வேண்டும். நிதியாகவும்சேவையாகவும் அமைப்பினால் செய்யப்பட்ட சகல செலவுகளையும் பற்றிய விபரங்களைச் சமர்ப்பிக்க வேண்டும். அமைப்பிடமிருந்து நிதி பெறும் சகல நபர்களதும் பெயர் முகவரி உட்பட சகல விபரங்களையும் வழங்க வேண்டும்.

அரசுக்கு புறம்பான அமைப்புகளின் நடவடிக்கைகளைப் பற்றி விசாரணை செய்வதற்காக முன்னாள் ஜனாதிபதி பிரேமதாசா அவர்களால் 1990 ஆண்டும் டிசம்பர் மாதம் ஆணைக்குழு ஒன்று நியமிக்கப்பட்டது, மூன்று வருட விசாரணைகளுக்குப் பின்னர் இவ் ஆணைக்குழு தனது அறிக்கையை கடந்த டிசம்பர் மாதம் 11ம் திகதி ஜனாதிபதி அவர்களிடம் கையளித்தது. அவ் அறிக்கை இன்னும் வெளியிடப்படவில்லை ஆனால் நகல் அறிக்கை என அழைக்கப்படும் ஒன்றிலிருந்து சில மேற்கோள்கள் பத்திரிகைகளில் வெளிவந்தன. அது எவ்வாறாயினும் இவ் ஆணைக குழுவின் இரண்டு பிரதான சிபார்சுகளை உடனடியாக செயல்படுத்துவதற்காக டிசம்பர் மாதம் 24ம் திகதி அரசாங்க வர்த்தமானியில் அறிவிக்கப பட்டது.

இப் பின்னணியின் கீழ் எழும் முதலாவது கேள்வி அரசுக்கு புறம்பான அமைப்புகளை கட்டுப்படுத்துவதற்கான சட்டத்தைச் செயல்படுத்த அவசரகால நிலமை பாவிக்கப பட்டது என்பதாகும் சாதாரண சட்டத்தை இயற்ற நீண்ட காலம் எடுக்கும்என்பதே இது தொடர்பாக அரசாங்கம் கூறிய ஒரே ஒரு காரணமாகும். ஜனாதிபதி செயலகத்தில் வெளியிடப்பட்ட பத்திரிகை அறிக்கையிலேயே இக்காரணம் கூறப்பட்டுள்ளது இக் காரணத்தை முன்வைத்ததன் மூலம் ஜனநாயக மரபுகள் பற்றி தாம் அக்கறை கொள்ளப்போவதில்லை அவற்றை நிராகரிக்கிறோம் என்பதனையே அரசாங்கம் வெளிக்காட்டுகிறது.

ஜனநாயக கொள்கைகளுக்கு மதிப்பளிக்கும் அரசாங்கமாக இருந்திருந்தால் முதலாவதாக ஆணைக் குழுவின் அறிக்கையை வெளியிட்டிருக்கும். அதன் பின்னர் அவ் அறிக்கையின் உள்ளடக்கம், சிபார்சுகள் தொடர்பாக பொதுமக்கள் மத்தியிலே விவாதமும் உரையாடல்களும் இடம்பெறுவதற்கு வாய்ப்பு அளிக்கப்பட்டிருக்க வேண்டும் அதன் பின்னர்தான் செயல்படுத்த வேண்டியவைகள் பற்றி தீர்மானிக்க வேண்டும் அதன் பின்னரும் நீதிமன்ற விசாரணைகளுக்கு இடமளிக்கக் கூடியவாறான சட்டத்தை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்க வேண்டும். ஜனநாயக ரீதியாக செயல்படுதல் என்பதன் அர்த்தம் இதுதான். அதாவது மக்கள் மத்தியில் விவாதத்தை ஏற்படுத்தவும் தீர்மானம் எடுக்கும் சக்திக்கு உயிரூட்டுதலும் ஆகும். சட்டம் இயற்றும் நிறுவனம் என்ற ரீதியில் பாராளுமன்றத்திற்கு இருக்கும் அதிகாரங்கள் அவசரகாலச் சட்டத்தின் மூலமாக மீறப்படுகின்றன.

அரசுக்கு புறம்பான அமைப்புகளை கட்டுப்படுத்துவதற்காக அவசர காலச் சட்டத்தைப் பாவிப்பதன் மூலம் இவ் ஜனநாயக மரபுகளை அரசாங்கம் முற்றாக அகற்றியுள்ளதோடு ஏதேச்சாதி காரியாகவும் செயல்படுகிறது.

அவசரகாலச் சட்டம் என்றால் என்ன? நாட்டின் பாதுகாப்புக்கும் பொது மக்களின் அமைதிக்கும் சாதாரண சட்டத்தால் கட்டுப்படுத்த முடியாதவாறு அச்சுறுத்தல் ஏற்படும்போது அதற்கு முகம் கொடுப்பதற்காக அவசரகாலச் சட்டத்தை செயற்படுத்த அரசுக்கு அதிகாரம் உண்டு. ஆனால் அவ் அதிகாரத்துக்கும் சட்டரீதியான வரையறைகள் உண்டு. அவசரகாலச் சட்டத்தின் கீழான ஒழுங்கு விதிகளைக் கூட நான்கு துறைகள் தொடர்பாகவே அரசாங்கத்தால் செயல்படுத்த முடியும். அவையாவன, 1.நாட்டில் பாதுகாப்பை ஏற்படுத்தல் 2.பொது மக்கள் அமைதிக்கு பங்கம் ஏற்படா வண்ணம் பார்த்துக் கொள்ளல் 3.கிளர்ச்சி அல்லது வன்முறை நடவடிக்கைகளை அடக்குதல் 4. பொதுமக்களின் அன்றாட வாழ்க்கைக்கு அவசியமான சேவைகளுக்கு தடை ஏற்படாதவாறு நடாத்துதல் என்பவைகளாகும், ஆனாலும் இந்நான்கு துறைகளுடன் சம்பந்தம்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இல்லாதவற்றுக்கும் அவசர காலச் சட்ட விதிகளை நிறைவேற்றுவதும் அரசாங்கத்தின் வழக்கமாகிவிட்டது. இதற்கு முன்னர் அயடின் கலந்த உப்பு வியாபாரம் தொடர்பாகவும் அவசரகாலச் சட்ட விதிகள் காணப்பட்டன. வன பாதுகாப்புக்காகவும் அவசரகாலச் சட்டம் காணப்பட்டது. அரசாங்கம் தமது வசதிக்காக சட்டத்துக்கு விரோதமான முறையில் ஒழுங்கு விதிகளை அமுல்படுத்துவதாகவே தெரிகிறது.

இதற்கமையவே அரசுக்கு புறம்பான அமைப்புகளைப் பதிவு செய்தல் அவற்றை மேலதிக கண்காணிப்புக்குள்ளாக்குதல் என்பவற்றுக்காக இயற்றப்பட்டுள்ள அவசரகால ஒழுங்கு விதிகளையும் நாம் கேள்விக்குட்படுத்த வேண்டும்.

அரசாங்கம் இச்சட்டத்தைக் கொண்டுவருவதற்கான அவசர நிலமை ஒன்று தோன்றியுள்ளதா என்பது அடுத்து எழும்பும் கேள்வியாகும்.

தனது அறிக்கையைச் சமர்ப்பிக்க ஆணைக்குழுவிற்கு மூன்று வருடங்கள் பிடித்தன. சரியான முறையில் சட்டம் இயற்றுவதற்கு இன்னும் மூன்று மாதங்களை அரசாங்கத்தால் கழிக்க முடியாத நிலமை இன்று தோன்றியுள்ளதா? அரசுக்கு புறம்பான அமைப்புகளின் நடவடிக்கைகளைப் பார்க்கும்போது அவ்வாறான நிலமை இருப்பதாக தெரியவில்லை. ஆனால் அரசு இவ்வாறு செயல்படுவதை விளங்கிக் கொள்வதற்கு அரசியல் பூமியில் ஏதாவது பின்னணி உண்டா என ஆராய்ந்து பார்க்க வேண்டும்.

அரசுக்கு புறம்பான அமைப்புகள் தொடர்பான விசாரணை ஆணைக்குழுவை நியமிப்பதற்கு முன்னர் கூறப்பட்டவற்றினாலும் அவ் ஆணைக்குழுவை நியமித்த கஸெட் அறிக்கை மூலமாகவும் அவ்வாறான அமைப்புகளின் நடவடிக்கைகள் தொடர்பாக இருபிரதான விடயங்கள் தொடர்பாக சந்தேகம் இருப்பதாக கூறப்பட்டது. ஒன்று அரசுக்கு புறம்பான அமைப்புகள் அரசாங்கத்தின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் ஏற்படும் வகையிலும் பயங்கரவாதத்திற்கு துணைபோகக் கூடிய விதத்திலும் தமது நிதியை பாவிக்கின்றன. இரண்டாவது, அரசுக்குப் புறம்பான அமைப்புகள் சிங்கள இனத்தின் இன அடையாளத்திற்கு மாறானதும் தேசிய கலாச்சாரத்தை அழிக்கக் கூடியதுமான கருத்தியல்களை பரப்புகின்றன. மூன்றாவது அவ்வாறான அமைப்புகள் பல பௌத்த சமயத்தின் இருப்புக்கு அச்சுறுத்தல் ஏற்படும் வகையில் பல்வேறு பொருள்ரீதியான ஊக்குவிப்புகளை வழங்கி பௌர்த்தர்களை ஏனைய சமயங்களுக்கு திருப்ப செயல்படுகின்றன என்பனவாகும். இம்மூன்று குற்றச் சாட்டுகளும் நீண்டகாலத்துக்கு முன்பிருந்தே அரசுக்கு புறம்பான அமைப்புகள் மீது சுமத்தப்பட்டன.

ஆனால் இன்று இது தொடர்பாக புதுமையான நிலமை தோன்றியுள்ளது.

நான் ஏற்கனவே கூறியவாறு இவ் ஆணைக்குழுவின் அறிக்கை இன்று எம் முன்னால் இல்லை. ஆனால் அதிலிருந்து சில பகுதிகள் பத்திரிகைகளில் வெளிவந்தன. இவை எவற்றிலுமோ அரசுக்குப் புறம்பான அமைப்புகள் பயங்கரவாதத்திற்கு உதவக் கூடியவாறு அல்லது சிங்கள இன அடையாளத்திற்கு உதவக் கூடியவாறு அல்லது சிங்கள இன அடையாளத்திற்கோ கலாச்சாரத்திற்கோ தீங்கு ஏற்படக்கூடியவாறு செயல்படுவதாக குறிப்பிடபடவில்லை. அறிக்கையில் அவ்வாறு இருந்திருந்தால் பத்திரிகைகளில் பிரச்சாரம் செய்யப்பட்டிருக்கும் என்பதில் எவ்வித சந்தேகமும் இல்லை. பத்திரிகைகளில் அவ்வாறு குறிப்பிடபடாததில் இருந்து அரசுக்குப் புறம்பான அமைப்புகள் அந்நோக்கத்துடன் செயல்படுகின்றன என்னும் சந்தேகத்தை உறுதிப்படுத்தக்கூடிய சாட்சியங்கள் ஆணைக் குழுவிடம் இல்லை என்பதே தெரிகிறது. இம்முடிவுக்கு வருவதற்கு நியாயமான காரணம் எம்மிடம் உண்டென்பதே எனது கருத்தாகும்.

அரசுக்குப் புறம்பான அமைப்புகள் பௌத்தர்களை ஏனைய சமயங்களுக்கு திருப்புவது தொடர்பாக எனில், ஆணைக்குழு அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளதாகவும் அவற்றைக் கட்டுப்படுத்தவேண்டும் என ஆணைக்குழு நம்புவதாகவும் பத்திரிகைகளில் வெளிவந்தன. அகில இலங்கை பௌத்த சம்மேளனம், சிங்கள ஆரக்ஷக சங்விதானய, இன்னுமொரு பிக்கு சங்கம் ஆகியவை அரசுக்குப்புறம்பான அமைப்புகளை கட்டுப்படுத்துவதற்காக அவசர காலச் சட்டத்தை இயற்றியதற்காக தமது மகிழ்ச்சியைத் தெரிவித்தது இதனாலாக விருக்கலாம்.

இவ் விடயங்கள் அனைத்தினதும் பின்னணியில் இருந்து பார்க்கும்போது அரசுக்குப் புறம்பான அமைப்புகளைக் கட்டுப் படுத்துவதற்காக அரசாங்கம் நடவடிக்கை எடுப்பது சிங்கள பௌத்த சக்திகளை அரசாங்கத்தின் பக்கம் வென்றெடுப்பதற்கான இன்றைய அரசியல் கருத்திட்டத்தின் ஒரு சித்திரம் என்ற முடிவுக்கு வருவது நியாயமானதாகும். அவ்வாறே தம்மால் கட்டுப்படுத்த முடியாத சுதந்திரமான நிறுவனங்களை பொறுத்துக்கொள்ள முடியாத அரசின் சுபாவத்தையும் இது எடுத்துக் காட்டுகிறது.

ஆயினும் இப்பின்னணியையும் தாண்டிச் செல்லும் முக்கியமான கோட்பாட்டுப் பிரச்சனை ஒன்று எழுகின்றது. அரசாங்கத்துக்கும் அரசுக்கு புறம்பான அமைப்புகளுக்கும் இடையே ஜனநாயக சமூகத்தில் நிலவேண்டிய தொடர்பு பற்றியது. குடிமக்கள் ஒன்று சேர்ந்து சட்டத்துக்கு விரோதம் இல்லாதவாறு தமது விருப்பத்திற்கு அமைய செயல்படுவதற்கான உரிமை இது பற்றி பின்னர் எழுதலாம் என எதிர்பார்க்கிறேன்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# ஆசியான் இந்தியா: புதிய உறவுகள் ஆரம்பம்!

இந்தியாவில் மேற்கொள்ளப்பட்டு வரும் பொருளாதார சீர்திருத்தங்கள் வெளிநாடுகளில் இந்தியா தொடர்பான ஒரு புதிய பார்வையை ஏற்படுத்தியுள்ளன. இந்தியாவின் சமீபத்திய திறந்த பொருளாதாரக் கொள்கைகளும், பாரிய சந்தை வசதியும் வெளிநாடுகளின் கவனத்தை வெகுவாகவே ஈர்த்துள்ளது. இந்தவழியிலேயே 'ஆசியான்' (ASEAN) நாடுகள் என்றழைக்கப்படும் தென் கிழக்காசிய நாடுகளின் ஒன்றியமும், இந்தியாவும் மிகநெருக்கமானதொரு பொருளாதார, அரசியல், பாதுகாப்பு உடன்பாட்டுக்கு வந்துள்ளன. இது சமீபகாலங்களில் ஆசியாவில் ஏற்பட்டுவரும் அரசியல், பொருளாதார மாற்றங்களில் முக்கியமானதொன்றாகும்.

ஆசியான் எனப்படும் தென் கிழக்கு ஆசியநாடுகளின் ஒன்றியத்தில் இந்தோனேசியா, மலேசியா, பிலப்பைன்ஸ், சிங்கப்பூர், புருணை ஆகிய நாடுகள் அங்கம் வகிக்கின்றன. வல்லரசுகளுக்கிடையிலான பனிப்போர் நடந்து வந்த நீண்ட காலமாக ஆசியான நாடுகளுககும, இந்தியாவுக்கும் சுமுகமான உறவோ அன்றி நெருங்கிய பொருளாதாரத் தொடர்புகளோ இருந்ததில்லை. வல்லரசுகளுக்கிடையிலான பனிப்போர் காலகட்டத்தில் இந்தியாவின் தன்னிறைவு சோசலிசக் கொள்கைகளும், கிழக்கைரோப்பிய நாடுகளுக்கும் இந்தியாவுக்குமிடையில் இருந்த நெருக்கமான தொடர்புகளும் ஆசியான் நாடுகளுக்கும் இந்தியாவுக்குமிடையில் இடைவெளியை ஏற்படுத்தின. ஆசியான் நாடுகள் இந்தியாவை அரசியல் ரீதியாக சந்தேகித்தன. பொருளாதார ரீதியாக முக்கியமற்ற இடம் என அலட்சியப்படுத்தின. இராணுவ ரீதியாக இந்தியா தமக்கு அபாயம் ஏற்படுத்தலாம் என அஞ்சின. ஆனால் இப்போது இவை அனைத்தும் ஒரு முடிவுக்கு வந்துள்ளன. இந்தியாவின் அரசியல், பொருளாதாரக் கொள்கைகளில் ஏற்பட்டிருக்கும் மாற்றமே இந்த புதிய ஆரோக்கிய நிலைக்கான காரணம் என டோக்கியோவிலுள்ள ஜப்பான் சர்வதேச ஆய்வு நிலையத்தைச் சேர்ந்த இந்தியாவுக்கான ஆய்வாளர் சது பி.லிமே கூறுகிறார் எது எப்படியிருந்தபோதிலும் இந்தியாவுக்கும், ஆசியான் நாடுகளுக்குமிடையில் ஒரு புதியபாதை ஆரம்பமாகிறது என்பது இவரது கருத்து. பொருளியல் ஆய்வாளர்களின் கருத்துப்படி இந்த இரு பிரதேசங்களுக்குமிடையில் ஏற்பட்டிருக்கும் உறவு ஆசியாவின் பொருளாதார வளர்ச்சியை விரைவுபடுத்துவதுடன் மேற்குலகுடனான பொருளியல் இடைவெளியையும் குறைக்கும். அது மட்டுமல்ல ஆசியாவில் மிகுந்த விரைவாக அதிகரித்து வரும சீனாவின் பொருளாதார ஆளுமைக்கு ஏற்ற ஒரு மாற்றீடாக அமையும் எனவும் கருதப்படுகிறது. சிங்கப்பூரிலுள்ள தேசிய பல்கலைக்கழகத்தின் அரசியல் விஞ்ஞான பேராசிரியரான பில்வீர் சிங் கருத்துக் கூறுகையில் "சமீபவருடங்களில் சீனாவுக்கும் ஆசியான் நாடுகளிற்குமிடையிலான அரசியல், பொருளாதார உறவுகளின் அபரிமித வளர்ச்சியும், சீனாவின் இராணுவ பல விஸ்தரிப்பும் 21ம் நூற்றாண்டின் முதல் தசாப்தங்களின் போது இந்தப் பிரதேசங்களில் சீனாவையே ஆளுமை செலுத்தச் செய்யும். இதனை தடுக்க வேண்டுமானால் இந்தியா தென்கிழக்காசியாவில் உள்ள அனைத்து நாடுகளுடனும் அதுவும் குறிப்பாக சீனாவுடன் நெருக்கமான உறவு கொண்டுள்ள சிங்கப்பூருடன் நல்லுறவுகளை வளர்த்துக் கொள்ள வேண்டும்" என்கிறார். இதுபோலவே "தென்கிழக்காசிய நாடுகளுக்கு இந்தியா, சீனாவுக்குப் பதிலான ஒரு பொருளாதார மாற்றீட்டு மையம்" என்பது ஹொங்ஹொங்கிலுள்ள பொருளாதார நிபுணரான ரஞ்சன் போலின் கருத்து "அதிகரிக்கும் லஞ்சஊழல்கள், அதிகரிக்கும் பணவீக்கம், அளவுக்கதிகமான வேகத்திலான பொருளாதார வளர்ச்சி இவற்றினால் சீனா நிலைதடுமாறும் இந்த நேரத்தில் இந்தியாவோ குறையும் பணவீக்கம், பொருளாதார மீள்வளர்ச்சி, உறுதியான சென்மதிநிலைக் கொடுப்பீடுகள் என தன்னை செழுமைப்படுத்துகிறது" என்பது ரஞ்சன் போலின் கருத்து.

ஆசியான் கூட்டமைப்பு நாடுகளின் மொத்த மக்கள் தொகை 325 மில்லியன். 1970 ஆண்டின் பின்னர் இந்த நாடுகள் திறந்த பொருளாதார முறையை அறிமுகப்படுத்திய பின்னர் இப்பகுதிகளில் அபரிமிதமான பொருளாதார வளர்ச்சியை அடைந்திருக்கின்றன. ஆனால் சமீபகாலங்களாக சிங்கப்பூரிலும் இதர ஆசியான் நாடுகளிலும் அதிகரித்துவரும் உற்பத்திச்

## சுழலும் உலகம்



தி. உமாகாந்தன்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

செலவுகள் இந்த நாடுகளின் பொருளாதாரவளர்ச்சிக்கு பெரும் அச்சுறுத்தலாக இருக்கின்றன.

இந்தியாவின் மக்கள் தொகை 870 மில்லியன். 1991 ஆண்டிலிருந்து இந்தியாவில் பொருளாதார சீர்திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டன. திறந்த பொருளாதார முறை அறிமுகப்படுத்தப்பட்டது. தென்கிழக்காசிய நாடுகளின் உயர் அதிகாரிகளும் வர்த்தகர்களும் இந்தியாவின் வளர்ச்சியை பயன்படுத்திக் கொள்ள விரும்புகின்றனர். இந்தியாவின் குறைந்த ஊதியத் தொழிலாளர்கள் மாத்திரம் அவர்களைக் கவரவில்லை. பெரும் கொள்வனவுச் சக்தியை தன்னிடம் கொண்டிருக்கும் 200 மில்லியன் மக்கள் தொகை கொண்ட இந்திய நடுத்தர வர்க்கமும் இவர்களைக் கவர்ந்துள்ளது.

இந்தியாவுடன் ஒரு நெருக்கமான பொருளாதாரக் கூட்டுறவை ஏற்படுத்திக் கொள்வதன் நோக்கமாக சிங்கப்பூர் பிரதமரான ஜோ சொக் ரொங் புதுடில்லிக்கும் மற்றும் இந்திய நகரங்களுக்கும் சிங்கப்பூர் உயர் அதிகாரிகள் மற்றும் வர்த்தகர்கள் கொண்ட ஒரு குழுவுடன் விஜயம் செய்கிறார். இந்த விஜயம் இரு தரப்பு தொடர்புகளையும் அதிகமாக்கும் என சிங்கப்பூர் அரசாங்கம் கருதுகிறது. இவரது விஜயத்தின் போது பெங்களூரில் ஒரு தகவல் தொழில் நுட்ப பண்ணை (INFORMATION TECHNOLOGY PARK) யினை தொடங்குவதற்குரிய ஆரம்பகால கட்டவேலைகளை ஆரம்பித்து வைப்பார். பல கம்பியூட்டர் உருவாக்க நிறுவனங்கள் நிறைந்த பெங்களூரில் அமைக்கப்பட விருக்கும் இந்த நிறுவனம் பல்வேறு வெளிநாட்டு கம்பியூட்டர் நிறுவனங்களின் கவனத்தை ஈர்த்துள்ளதுடன் இந்த வெளிநாட்டு நிறுவனங்கள் இந்திய கம்பியூட்டர் நிறுவனங்களுடன் கூட்டாக செயல்படவும் விரும்புகின்றன.

157 மில்லியன் அமெரிக்க டொலர்கள் முதலீட்டில் ஆரம்பிக்கப்படவிருக்கும் இந்த நிறுவனம் இந்திய சிங்கப்பூர் நிறுவனங்களின் ஒரு இணைந்த முதலீடாகும். இது 1995 இன் இறுதிப்பகுதியில் செயல்பட ஆரம்பிக்கும் என எதிர்பார்க்கப் படுகிறது. புதுடெல்லியில் நடைபெற்ற வைபவம் ஒன்றில் பேசுகையில் சிங்கப்பூர் பிரதமர் கோ இந்தியாவே கிழக்கு நாடுகளுக்கான பொருளாதாரப் பாலத்தை அமைத்துக் கொடுக்கு மென தாம் நம்புவதாகக் கூறியுள்ளார். இந்த வைபவத்தில் கலந்துகொண்ட இந்தியப் பிரதமர் நரசிம்மராவ் இந்திய அரசு தனது தென்கிழக்காசிய நாடுகளுடனான உறவை அகலப்படுத்தவும், ஆழப்படுத்தவும் விரும்புவதாகக் குறிப்பிட்டுள்ளார். "மாறிவரும் உலக பொருளாதார அரங்கிலே ஆரோக்கியமான கட்டமைப்ப ,க்களைக் கொண்ட உறுதியான உறவுகள் எப்போதுமே வரவே ற்கப்பட வேண்டியவை அவற்றை முன்னிலைப்படுத்த நாம் எப்போது மேதயாராக இருக்கிறோம்" எனவும் இந்தியப் பிரதமர் கூறியுள்ளார்.

ஜப்பான் சர்வதேச ஆய்வு நிலையத்தைச் சேர்ந்த லி மேய் குறிப்பிடுவதுபோல இந்தியாவின் இராணுவச் செலவீனங்களில் ஏற்படுத்தப்பட்டிருக்கும் குறைப்புக்களும், கடற்படையை நவீனமயப்படுத்துவதை இந்தியா தாமதப்படுத்தத் தீர்மானித்திருப்பதும், சிங்கப்பூருடனான இணைந்த இந்திய இராணுவ ஒத்திகைகளும், பரிமாற்றங்களும், மலேசிய இந்தோனேசியா போன்ற நாடுகளுடனும் இந்தியா மேற்கொள்ளும் இதையொத்த நடவடிக்கைகளும் இந்தப் பிராந்தியத்தில் இந்தியா கொண்டுள்ள இராணுவ அக்கறை குறித்த ஆசியான் நாடுகளின் கவலையை நீக்கி, சந்தேகத்தை அகற்றியுள்ளது. இவரது கருத்தின்படி இந்தியாவுக்கு இந்த உறவு முக்கியமானது ஏனெனில் இதன் மூலம் இந்தியா தனது பொருளாதார மற்றும் பாதுகாப்பு எல்லைகளை ஆசியா பசிபிக் எல்லைகளுக்கு விஸ்தரித்து கொள்ள முடியும்.

இந்தியாவின் புதிய அரசியல் - பொருளாதாரக் கொள்கைகள் சர்வதேச நாடுகளிடையே இந்தியாவுக்கு ஒரு புதிய அங்கீகாரத்தையும், அந்தஸ்த்தையும் கொடுக்க ஆரம்பித்திருப்பதன் ஒரு வெளிப்பாட்டம்சமே இந்த புதிய அம்சம் எனக் கருதப்படுகிறது.

## காள்ரனில்..

பிற்குறிப்பு


வந்தவர்களுக்கு புரிந்த, பலவற்றில் ஒன்று CU தமிழ் மாணவர்களின் பண்பு. நிச்சயமாக அந்த கலைஞர்களுக்கு பொருத்த மானவர்கள் அல்ல இந்த பார்வையாளர். மாரித்தவளைகள் போல ஒவ்வொரு அரங்கு வசனங்கட்கும் ஒவ்வொரு குதர்க்கம் கூறினர், பண்புகெட்ட முறையில் அல்லது நமது தேசப்பண்பில். இவர்களில் மிகப்பெரும்பாலோனோர் CU தமிழ் மாணவர்களே. 3ம் பரிசுக்குரியவர் வராதபோது ஒரு 'மிருகம்' கூறியது "அவன் கார் அடிச்சு செத்துப்போட்டான்" என்று. பங்காளர் சிலரும் பார்வையாளராக மாறிய போது இதையே செய்தனர். யாழ்ப்பாண 'கல்விமான்'களுக்கே சபையில் இருக்க தெரியாவிட்டால் வேறுயாருக்கு தெரியும்? இதையும் அதிகாரிகள் யாராவது சொல்ல வேணுமென்று அர்த்தமா? எங்கள் பட்டப்படிப்புகள் சீதனம் வாங்கவும் உயர்பதவிகள் அடையவும் பயன்படலாம். ஆனால் பண்பை அடையாளம் காட்ட மாட்டாது. படித்தவர்கள் இருவகையினர் ஒன்று கொம்பியூட்டர் போன்றது. மற்றது கொம்பியூட்டரை கண்டுபிடிப்பவரை போன்றது. முடிந்தால் விழாவினர் நாடகம் பழகும் போது நீங்கள் எப்படி பார்வையாளராக இருப்பது என்று பழகுங்கள்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# சிவப்பிரகாசம்




பேஸ்மண்டில் இருந்து புகை கமகம என வந்துகொண்டிருந்தது. ஏதோ சாம்பிராணிப் புகை என்று எண்ணிவிடாதீர்கள். "கனகலிங்கம் சுருட்டு" அனுபவித்துக் கொண்டு இருந்தேன். "அப்பா, உந்தச் சுருட்டை விடுங்கோ. வீடெல்லாம் மணக்குது" என மக்கள் கேட்டாலும் நான் ஏன் அதை விடவேண்டும். சுதந்திரமாக தோட்டம் துரவெல்லாம் சுருட்டோடை திரிஞ்சிட்டு இங்கை இவங்களுக்குப் பயந்து எல்லாத்தையும் விடவேண்டும் எண்டால் என்ன நியாயம்? நாகரீகமான நாட்டிலே நாகரீகமாக நடக்க வேணுமாம். இப்படி எனக்குப் புத்தி சொல்லிறவங்கள் எல்லாம் அப்படியே நடக்கிருங்கள்? அங்கையிருந்து வந்து அதே அச்சோடுதானே இருக்கிறம். பிறகென்ன நான் மட்டும் சுருட்டுப் பிடிக்கப்படாது என்று. நாளைக்கு நடக்கிற கலைவிழாவிலை கவிதை ஒன்று வாசிக்கச் சொல்லி எனது பழைய மாணவர்கள் கேட்டிருந்தார்கள். கவிதை எழுதுவதற்கு இப்போ யோசித்துக் கொண்டிருக்கிறேன். பழைய காலத்து வெண்பா, விருத்தம் என்றால் கொஞ்சம் மினக்கெட வேணும். இதென்ன புதுக் கவிதைதானே. கவித்துவத்தைக் காட்ட விடியல், இருத்தல் என சில சொற்களைப் போட்டும் யதார்த்தத்தைக் காட்ட கிடுகு பழஞ்சோறு பனங்கொட்டை எண்டு.. யமாய்ச்சிடமாட்டேனு நான். அந்தக் காலத்து வாத்தியாரெல்லோ!

"அப்பா கணபதிப்பிள்ளை ரெலிபோன் பண்ணினவர், மகளுக்கு கலியாணமாம். திகதி மறந்து போச்சு. ஆனுல் தைப்பூசத்தில் அன்று எனக் கதைத்தவர்" எனது இளையவள் அது.

எனக்கு சிரிப்பாக இருந்தது. இங்கை ஒவ்வொரு கோவில் ஒவ்வொரு நாளிலை தைப்பூசம் நடத்தும். அதை வைச்சு எப்படி திகதியை அறிவது. இப்பதான் ஞாபகம் வருது. புடவைக்கடை தொங்க வைத்திருந்த முதல் பணத்தை MULTI- BRANCH TEMPLE SUPERMARKET ல் போட்டால் இலாபம் பல மடங்கு வரும் என எனது பொருளாதார ஆலோசகர்கள் கூறியிருந்தார்கள். அது மட்டுமல்ல பல புரட்சிகளைக்கூட சிபார்சு செய்திருக்கிருர்கள். பல கிளைகள்... FAX ல் அர்ச்சனை, அபிசேஷகம் TAKE OUT and DELIVERY இலவசம்... இப்படிப் பல. காசு பண்ண வந்த கனடாவிலே கடவுளை விற்பது தவறென நான் நினைக்கவில்லை. உண்மையான பக்தியுடன் மக்கள் வாழும் நம்ம நாட்டிலேயே காப்பாத்த கடவுள் வரவில்லை. இத்தனை மைல் தாண்டி இந்தக் குளிருக்குள் அவர் வர நினைக்க மாட்டார் என்பது என் போன்றவர்களின் வலுவான நம்பிக்கை.

"ட்ரிங்..ட்ரிங்.." போன் கோல் எனக்குத்தான் போல இருந்தது.

"ஹலோ யார் வாத்தியாரே... எங்கடை பழைய மாணவர் சங்கத் தலைமைப் பதவிக்கு உங்களைப் பிரேரிக்கலாம் என நினைக்கிறம். அதுதான் உங்கடை விருப்பத்தை கேட்கிறம்."

பதவி தானுக தேடி வரும் போது தட்டிக்கழிக்க மனம் வருமா? என்ருலும் அதைக் காட்டிக் கொள்ளாது "தம்பி உங்களுக்குத் தெரியும்தானே எனக்கு பதவி அவ்வளவு பிடிக்காது எண்டு. ஆனு நீங்கள் விரும்பினு உங்களுக்காக வேணுமெண்ருல் வாறன்."

"இல்லை வாத்தியார். இந்தப் பதவியை எப்படியும் தட்டிப்போட வேண்டும் எண்டு வந்த பிறக்கிருசிமார் மும்முரமாய் நிக்கினம். இவங்கடை கையிலை போனுல் என்ன நடக்கும் என்று தெரியும்தானே. அந்தக்காலத்து அரசியலை என்ன செஞ்சி வைச்சவங்களெண்டு தெரியும் தானே." என்னுடைய மூத்த மருமகனும் ஒரு சட்டத்தரணி. எப்படியும் கனடாவிலை பேமஸ் ஆக்க நானும் முயற்சி செய்து கொண்டு இருக்கிறன். இந்தப் பொடியள் விடமாட்டாங்கள் போல கிடக்கு.

"தம்பி இந்தக் காலத்து சட்டத்தரணிகள் ரொம்ப கெட்டிக்காரங்கள். அவங்களிலை ஒரு ஆளைப் போடுங்கோவன்."



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

"வாத்தியார் உங்கடை அட்வைஸ் வேண்டாம். வாறியளோ? இல்லையோ?" என பணிவாக. பதவி என்பது எப்போதும் பணம் காய்க்கும் விருட்சம். ஒட்டிக் கொள்வது எப்போதாவது பயன்படும். இந்தச் சின்னப பொடியளை என்ன மாதிரி "தூக்காட்டுவது" என எனக்குத் தெரியும். ஊருவிட்டு ஊரு வந்த பின்னும் ஊருக்கொரு சங்கம், ஊரிலை உள்ள ஒவ்வொரு பள்ளிக்கூடங்களுக்கு ஒரு சங்கம் இன்னும் சில காலத்தில் ஊருக்கு ஒரு கோவில், ஆனால் தமிழினத்துக்கு என்று சொல்லிக்கொள்ள ஒரிரு சங்கம்தான். இவ்வாறெல்லாம் பிரித்து வைத்திருப்பது என் போன்ற வியாபாரிகளுக்கும் எவ்வளவோ உதவியாக இருக்கிறது. பொருளாதாரம் வளர்கிறது.

பிரிவுகள் எப்போதும் சிலர் லாபம் அடைய உருவாக்கி விட்டு பின் சமயத்தையும் மொழியையும் சாட்டுவதுதானே. சாதிப்பிளவு, மொழிப்பிளவு ஊர்ப்பிளவு எல்லாத்துக்கும் சூட்சுமம் இதுதான்.

இன்றைக்கும் ஒரு கலியாணவீட்டுக்கு போக வேண்டும். அவசரமாக வெளிக்கிட்டாச்சு. குளிரோ பனியோ RECESSION–DEPRESSION என்னவென்றாலும் தடல்புடலான கலியாணங்களுக்கு குறைவில்லை. ரொரன்ரோ ஸ்காபரோ திருமண மண்டபம் எல்லாத்தையும் ஐயர்மார் குத்தகைக்கு எடுத்திட்டாங்களாம். அதனால் பிராம்ரனில் கலியாணத்தை வைக்கினமாம். பிராம்ரனில் உள்ள ஹோல்களையும் குத்தகைக்கு எடுக்க எனது நண்பரான ஐயருக்கு அட்வைஸ் பண்ணியிருக்கிறேன். தொழில் முறையில் நாங்கள் எல்லாம் ஒரே வர்க்கம்தான். திருமண மண்டபம் அமர்க்களப் படுகிறது. எல்லோருடைய கண்களும் என் பக்கம்தான் திரும்பியது. அதாவது என்னோடு வந்த இளைய மகளைப் பார்த்து. தெரியாத பெடியங்கள்கூட "வாத்தியார் வாத்தியார்" என்று வழிந்தார்கள். "செந்தூரப்ப ாண்டி"யில் வருவாளே யுவராணி. அந்த ஜாடைதான் என் மகள். ஆராவது யூனிவசிட்டியில் படிக்கிற பெடியனைப் பாத்து கட்டிக் கொடுக்க வேண்டியதுதான். "grand pa, grandpa" என்று பேரப்பையன் பின்னாலே.

இவன் நேரங்கெட்ட நேரத்திலே கூப்பிடுவான். நல்ல வேளை எவரும் கவனிக்கவில்லை. யாராவது விபரங் குறைந்த விமர்சகர்கள் காதில் விழுந்தால் "அந்த" நியூஸ்பேப்பரில் ஒரு பக்கம் வேஸ்ட் ஆகிவிடுமே என்ற என் கவலை இவனுக்கு எங்கே புரியப்போகிறது. மெதுவாக அவனை வெளியில் கூட்டிச்சென்று "டே கண்ணு, என்னடா விஷயம்" அழாக்குறையாக நான்.

"அந்த ஐயருக்கு பக்கத்திலை COW பொம்மை வைச்சிருக்கு எதுக்கு?"

ஆமா நானும் கவனித்தேன். மரத்தால் செய்த பசு மாடு ஒன்று கும்பத்துக்கு முன்னாலே இருந்தது. என்னுடைய ஐம்பத்தாறு வருட அனுபவத்தில் காணாத புதுமை. எதற்கும் ஐயரையே கேட்டுவிடுவோமே.

"ஐயா மரத்தால் செய்த பசுமாட்டை வைப்பதன் ஐதீகம் என்ன?"

"எங்கடை நாட்டிலை பசுக்கன்று திருமணததுன போது மணமகளா முன்பாக கொண்டுவருவது தெரியும்தானே. கனடாவிலே அது கஸ்டமான காரியம் என்பதால் மரச்சிலையில் பசுவை ஆவாகனம் பண்ணி செய்வது சாஸ்திர சம்மதம்"

"ஒகோ அப்படியானால் ஐயருக்கு பதிலாக ஐயர் பொம்மையை வைத்துவிட்டு அதில் ஐயரை ஆவாகனம் பண்ணி ஸ்பீக்கரில் மந்திரத்தை ஒலிக்க வைத்து திருமணம் செய்வதும் ஏற்றுக் கொள்ளக் கூடியதுதானே" ஐயர் முறைத்துப்பார்க்க மெதுவாக நடுவிவிட்டேன். எனது தலையில் குட்டிக்கொண்டேன். எப்போதும் "இடக்கு முடக்கான" வாதம் எனக்குப் பழகிவிட்டது.

"அங்கை பாரப்பா அவவை, தினத்துக்கு வரேக்கையாவது எங்கடை முறைப்படி சீலை உடுக்காமல் இந்த உடுப்போடை.. . கனடாவுக்கு வந்து எங்கடை சனம் எல்லாத்தையும் மறந்து போச்சு," பக்கத்தில் நின்ற என் சம்சாரம் காதுக்குள் சொல்லி மனவருத்தப்பட்டாள், உண்மை தான். நானும் கவலைப்பட்டேன், இந்த விஷயத்தில் எனது இரண்டு பொம்பிளைப் பிள்ளைகளையும் பார்க்க பெருமையாக இருந்தது. "பஞ்சாபி" அணிந்து தமிழ் பண்பாட்டின்படி வந்திருந்தார்கள். எனது "கோட்சூட்டில்" இருந்த தூசை கவனித்த மனைவி மெதுவாக தட்டி விட்டாள்.

கலியாண வீடானாலும் கோவில் திருவிழா என்றாலும் நாம் தவற விடுவதே இல்லை. எமது அந்தஸ்தை காட்ட அது போன்ற சந்தர்ப்பங்கள் கிடைக்குமா என்ன. என்னை விசரன் என்று நீங்கள் நினைக்கிறீர்கள் போல் இருக்கிறது. இடைக்கிடை கண்ணாடிக்குள் தம்மைப் பார்ப்பவர்கள் அப்படி நிச்சயமாக எம்மைக் கூப்பிட மாட்டார்கள்.

காருக்குள் ஏறி அமர்ந்ததும் டாஸ்போட்டில் இருந்த முருகக்கடவுள் கண்ணில் தெரிந்தது. மனதில் ஏதோ மாதிரி இருந்தது. உள்ளே இருந்த பாரத்தை மனைவியிடம சொன்னேன்.

"எங்கடை நலத்துக்காக இப்படியெல்லாம் பண்ணுறமே.. கடவுள் தண்டிச்சிட்டாரென்றால்... ."

"சும்மா போங்கோ.. இந்தக் கலிகாலத்திலை கடவுளாவது தண்டிக்கிறதாவது. காசுதான் கடவுள். சுயநலம்தான் பக்தி. எங்கடை வங்கி டிப்போசிட்தான் புண்ணியம்."

சம்சாரம் சொன்னது அறிவுரையோ அறியாமையோ எதுவானாலும் அது எனக்கு தேவவாக்கு.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# ஈழம் ஒரு தொடர்கதை 2

## அத்தியாயம் 14

### சின்னத்தம்பி வேலாயுதம்

சுதந்திர இந்தியாவில் தமிழக அரசியற் போக்கை அறிந்து கொள்வதன் மூலம் ஈழ அரசியற் போக்கை விளங்கிக் கொள்ள முடியும். இந்தி ஆட்சி மொழியாகவும் மாநில மத்திய அரசுகளின் தொடர்பு மொழியாகவும் இருக்க வேண்டுமென்ற கோரிக்கை வலுத்தபோது திராவிட மாநிலங்களான தமிழகம், ஆந்திரா, கர்நாடகம் கேரளம் ஆகிய தென் மாநிலங்களில் ஏற்பட்ட கொந்தளிப்புகள் மிகவும் சாதுரியமாகக் கையாளப்பட்டது சுதந்திர இந்தியாவின் சிறப்புக்களில் ஒன்றாகும்.

உத்தியோக மொழி விடயத்தில் காங்கிரஸின் செயற்கமிட்டி இருதடவை கூடி இரு தடவையும் சமமான வாக்குகளைப் பெற்றதும், இரண்டாவது மாநாட்டில் தலைமை தாங்கிய பாரதப் பிரதமர் நேரு தனது வாக்கை அளித்து ஆங்கிலத்தைத் தொடர்பு மொழியாக்கியதை இந்திய வரலாற்றுப்புத்தகம் ஒன்றில் வாசித்த ஞாபகம் உண்டு. அதிலே நேரு மறுபக்கமாக கையை உயர்த்தியிருந்தால் இந்திய ஒருமைப்பாடு அப்போதே கேள்விக் குறியாகியிருக்கும் பின்வந்த காலங்களில் இத்திணிப்புக்கு எதிரான போராட்டம் சக்தி இழக்கவில்லை ஆனாலும் அது படிப்படியாக செயலிழந்தது.

அதன் முதலாவது கட்டம் தான் 1962 அக்டோபரில் நடைபெற்ற சீன இந்திய எல்லை யுத்தமாகும். அண்டை நாடுகளின் அச்சுறுத்தலுக்கு முகங் கொடுக்க வேண்டுமாயின் இந்திய ஒருமைப்பாடு பேணப் படவேண்டுமென்ற காரணத்தால் நேரு அவர்கள் 1963 ஆரம்பத்தில் இந்திய அரசியலமைப்பில் 16 வது திருத்தச் சட்டத்தைக் கொண்டு வந்தார். அதன்படி பாராளுமன்றம் உட்பட்ட சகல அரச பதவிகளுக்கும் தேர்வு செய்யப் படுவோர் "இந்தியாவின் இறைமைக்கும் ஒருமைப்பாட்டுக்கும் விசுவாசமாக இருப்பேன்" என சத்தியப் பிரமாணம் செய்தல் வேண்டுமென்பதே அது. இந்தத் திருத்தம் குறிப்பாகப் பிரிவினை கோரிய திராவிட முன்னேற்றக் கழகத்தை நோக்கியே செய்யப்பட்டது.

திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைவர் அறிஞர் அண்ணாத்துரை அவர்களும் இந்திய ஒருமைப்பாட்டை நேசித்தாரோ இல்லையோ நேருவால் கொணரப்பட்ட திருத்தச் சட்டத்தை ஏற்றுக் கொண்டதுடன் அதுவரை காலமும் தி.மு.க வின் பிரதான கொள்கையாக இருந்த 'பிரிவினை" கோரிக்கை கைவிடப்பட்டது. இதிலே அண்ணா அவர்கள் புத்திசாதுரியமாக நடந்து கொண்டார் என்பதா அல்லது அடிபணிந்தார் என்பதா? இந்திய மொழிப்பிரச்சனையில் இரண்டாவது கட்டம் இது எனலாம். இதிலே அண்ணா அவர்கள் திருத்தச் சட்டத்தை எதிர்த்திருப் பாரேயானால் விளைவுகள் வித்தியாச மானதாக இருந்திருக்கும். 1963 அறிஞர் அண்ணாவின் ராஜ தந்திர அணுகு முறை அவரை 1967ல் தமிழக முதலமைச்சராக்கியது.

சுதந்திர இந்தியாவில் தமிழகத்தின் முதல் முதலமைச்சராக சக்கரவர்த்தி ராஜகோபாலாச்சாரியார் (ராஜாஜி) அவர்களும் பின் காங்கிரசுடன் முரண்பட்ட ராஜாஜி சுதந்திரக்கட்சியை ஆரம்பிக்க, காமராஜர், பக்தவத்சலம் அறிஞர் அண்ணா, கருணாநிதி, எம்.ஜி ராமச்சந்திரன் ஜெயலலிதா ஆகியோரும் முதலமைச்சர் பதவியிலுள்ளனர். இதிலே சம்பந்தப்பட்ட கட்சிகள் பற்றி பின்னரும் ஒருதடவை பார்ப்போம்.

இப்போ சில முக்கிய வினாக்களுக்கு விடைகளை அறிய முயற்சிப்போம் முதலாவதாக பிரிவினைக் கோரிக்கையை முன்வைத்துப் போராடிய கட்சி அதை வாபஸ் வாங்கிய போது பதவிக்கு வந்தது மிக முக்கியமாக நோக்கப்படவேண்டும். அடுத்தது தாய்த்தமிழகம் அன்று நான்கு கோடி மக்களுக்கும் அதிகமாக வாழ்ந்த ஒரு பெரும் நிலப்பரப்பாக இருந்தும் பிரிவினையைக் கைவிடும் போது சேய் தமிழர்கள் தத்தமது நாடுகளில் பிரிவினையை கோருவதை ஊக்குவிப்பது எந்தவகையில் என்பது. அதிலும் தாய் தமிழர் இலங்கை, மலேசியா சிங்கப்பூர், பிஜி, மொறீஸியஸ் எனப் பல நாடுகளிலும் வாழ்ந்த போதும் இலங்கையில் மட்டும் பிரிவினை கோருவது பற்றியது. மலேசியத் தமிழர்கள் மிக விரைவாக மலே மொழியில் கல்வி கற்று மாறி வருகிறார்கள். ஏன் அவர்கள் ஆகக்குறைந்தது பிரிவினை இல்லாவிடினும் தமது அடிப்படை உரிமைகளுக்காகப் போராடக் கூடாது? அங்கு மலே மொழி உத்தியோக மொழியாகவும் இன உணர்வுப் பிரசாரங்கள் தடுக்கப் பட்டுமுள்ளன. ஆனால் கனடாவில் ஆங்கில பிரெஞ்சு மொழியினர் பூர்வீக குடிகளல்லாத போதும் குடியேற்ற நாட்டில் தமது மொழிக்காகச் சண்டை பிடிக்க முடியுமாயின் ஏன் மலேசியத்தமிழர் தமது அழிவை நிறுத்திக் கொள்ளப் போராட முடியாது? இங்கே மலேசியத் தமிழர்களைப் போராடும்படி நான் தூண்ட



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

வில்லே. அடுத்துச் சிங்கப்பூரில் தமிழர்கள் நிலை எந்த நிலேயிலுள்ளது? மொறீஷியசையும் பிஜியையும் மற்றும் மேற்கு ஐரோப்பிய நாடுகளுக்குப் புலம் பெயர்ந்த இன்றைய தமிழரையும் மறந்து விடுங்கள்.

தமிழர்களின் பிரிவினைக் கோரிக்கைக்கும் பின்னல் இருக்கக் கூடிய அரசியல் பற்றிய பலம், பலவீனம் பற்றிய விடயங்களேயே நாம் இங்கு கருத்துக்கெடுக்க வேண்டும் ஏனெனில் தமிழ் மொழி அழிந்து வருமே எனும் அச்சம் ஏன் தமிழருக்கு ஏற்படவேண்டும் குறிப்பாக தென்னிந்திய திராவிட இனங்களுக்குள் தமிழர் மட்டும் மிதமிஞ்சிய மொழிப்பற்றைக் கொண்டிருக்கிருர்கள் என்று நாம் கருதமுடியுமா? சுதந்திர இந்தியாவில் தமிழகம் மட்டுமே பிரிவினையில் முன்னணி வகித்த காரணமென்ன? மிக அண்மைக்காலத்தில் நடிகர் ராமராவ் தெலுங்கு தேசம் கட்சி ஆரம்பிப்பதற்கான வலுவான காரணங்களே வைக்கவில்லேயென்பதுடன் தேசிய அரசியலில் அடிபட்டுபோனுர். கன்னடத்திலும் அவ்வப்போது சிலுசிலுப்புகள் தோன்றி மறையும். இந்த மூன்று மாநிலங்களிலும் நடிகர்கள் கட்சி ஆரம்பித்து ஆட்சியைப் பிடிக்கும் வாய்ப்புகள் இருந்தன. ஆனல் மலேயாளம் பேசும் கேரளா வித்தியாசமானது. மொழி பற்றிய கூக்குரல்கள் இல்லாது மொழியைப் பேணக் கற்றுக் கொண்ட மக்கள் அவர்கள். இடது சாரிகளால் ஆளப்பட்டதும் ஒரு காரணமாக இருக்கிறது.

சிலவேளேகளில் தமிழர்கள் இன உணர்வுப் பேச்சுகளால் கவரப்படுதவற்கும் அது இல்லாத அரசியலே வெறுப்பதற்கும் தமிழிலுள்ள சங்ககாலம் முதலான இலக்கியங்கள் ஒரு காரணமாகவிருக்க வேண்டும் இந்த இலக்கியங்கள் மூலம் பெறப்படுகின்ற தரவுகள் மூலம் தமிழ் மக்கள் தங்கள் அரசியற் போக்கை நிர்ணயிக்கின்றனர் என்றும் கூற முடியாதுள்ளது. ஏனெனருல் காமராஜரை தோற்கடித்து அறிஞர் அண்ணவை பதவியலமர்த்துவதற்கும் கருணுநிதியைத் தோற்கடித்து எம். ஜி. ஆரைப் பதவியில மர்த்துவதற்குமான காரணிகள் முரண்பட்டவை. ஒன்று தமிழ் மற்றது ஊழல் பற்றியது.

தமிழ் இலக்கியங்களில் சொல்லப்படுகின்ற வீரத்துக்கும் தமிழ் நாட்டுத் தேர்தல்களுக்கும் சம்பந்தமேயில்லே. ஆனல் திராவிடமுன்னேற்ற கழகம் தமிழ் நாட்டில் வேரூன்றுவதற்குக் காரணம் அதன் புகழ் பெற்ற "அடுக்கு வசனப்" பேச்சுக்கள் தான். இது ஒரு வகையில் உணர்வுகளேத் தட்டியெழுப்பிப் பலனே அறுவடை செய்யும் யுக்தி மட்டுமேயொழிய இத்தகைய உணர்வைத் தூண்டும் பாங்கு தான் தமிழை வளர்க்கும் என்பது தவருன கணிப்பாகும். ஒரு மொழியின் வளர்ச்சிக்கு அதன் பொருளாதார வலுவே மிக முக்கியமான விடயமாகும். இரண்டாவதாக "மதம்" என்கிற போதனைக்குரிய விடயங்கள் மொழியைப் பரப்ப உதவுகிறது. மிகப் பெரும்பான்மையான மக்கள் தொகுதிக்குள் சங்கமிக்கும் வேறு ஒரு மொழி சார்ந்த மக்களின் இரண்டாவது மூன்ருவது பரம்பரையினர் அவர்கள் வாழும் நாட்டின் மொழி கலாச்சார விழுமியங்களுடன் இசைவாக்கம் பெறுவது தவிர்க்க முடியாததொரு விதியாகும்.

தமிழகத்தைப் பொறுத்த வரை தி.மு.க பிரிவினைக் கோரிக்கையை கைவிட்ட போது இன்னெரு பிரிவினைவாதக்கட்சி தி.மு.க வின் வெற்றிடத்தை நிரப்பவில்லே பிரிவினையைக் கைவிட்டதற்காக தமிழகம் மேலதிக உரிமைகள் எதையும் பெற்றுக் கொள்ளவுமில்லே. இதிலிருந்து ஒரு தி.மு.க வின் அரசியல் வீரசாகசமேயன்றி உண்மையில் தமிழக மக்களுடைய தேவையாக அது இருக்கவில்லே. அதனுல்தான் பிரிவினைக்கோரிக்கையை 1963ல் கைவிடவும் 1967ல் அண்ணு முதலமைச்சராக்கப்பட்டார். இதே ஆண்டு அறிஞர் அண்ணு பிரதமர் இந்திரா காந்தியுடன் பேசி பிரிவினைக் கோரிக்கையைக் கைவிட்ட நன்றியறிதலுக்காக சென்னே மாநிலம் என அழைக்கப்பட்ட தமிழகத்தை தமிழ்நாடு (TAMIL NADU) எனப் பெயரை மாற்றுவித்துப் பெற்றுக் கொண்டார்.

இந்த "இனவாத அரசியல்" தமிழர்கள் மத்தியில் மிக மலினமானதாக இருப்பதுடன் ஊழல், அதிகார துஷ்பிரயோகம், அதிகார வெறி போன்ற இன்னேரன்ன விமர்சனத்துக்குரிய பிறவுக்கும் கவசமாக இருக்கின்றது. தமிழகத்தில் காமராஜர் ஆட்சியை அண்ணு, கருணுநிதி, எம்.ஜி.ஆர் போன்ற பலரும் போட்டி போட்டுப் புகழ்ந்தனர். நெடுமாறன் அவர் பெயரில் கட்சியே தொடங்கினுர். ஆனல் அத்தகைய ஊழலற்ற ஆட்சியை செய்த காமராஜருக்கெதிராக இனவாதம் தானே வென்றது.

பின்னர் இனவாதிகள் தமிழ் பற்றிய இன உணர்வுகளே, விட்டு வெறும் பதவி மோகத்தில் புது டெல்லிக்குக் கால் பிடித்துக் கைபிடித்து தமிழக அரசியலிலேயே முன்பு இல்லாத ஒரு ஊழல் சமூகத்தைக் கட்டியெழுப்பியதுதானே மிச்சம். 1967ல் அண்ணு வென்ற போதும் 1969ல் காலமானதால் மிகக்குறுகிய காலத்தில் ஆட்சி செய்ததால் ஊழலற்ற நற்பெயருடன் மறைந்தார். பின் வந்த கலேஞர், எம்.ஜி.ஆர் ஆகிய இருவரும் புது டில்லியுடன் கூட்டுச்சேர்ந்த காக்கா பிடிப்பதுமாக இருந்ததும் ஈழத்தமிழர் அரசியலில் தங்கள் போட்டிகளே சாதித்தும் பின்னர் வரும். தமிழகத்தின் பலவீனமே புதுடில்லியின் பலமானது

தொடரும்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

## மகாவம்சமும்...

நெடுந்தீவில் இருந்து ஆட்சி செய்தனன். அவனது மனைவி நீலகேசியின் மகனே கஜபாகுவுடன் சோழதேசம்சென்ற நீலன் இலங்கையில் வடபகுதியில் அடையாளங் காணக்கூடிய தமிழர் ஆட்சியை முதல் முதலில் நிறுவியவன் வெடியரசன் என்ற உண்மை சிங்கள ஆட்சியாளர் களதும் 'தமிழ் வரலாற்று ஆய்வாளர்களாலும் மறைக்கப பட்டது என்பது தமிழர் வரலாற்றின் கறை படிந்த அத்தியாயம் எனலாம்.

நெடுந்தீவு வெடியரசன் கோட்டையை ஆய்வுக்குட படுத்துவதற்கு சென்ற இலங்கை தொல் பொருள் ஆராட்சி திணைக்களம்தமிழர் வரலாறு பற்றி அதிசய மிக்க செய்திகள் கிடைக்க கூடும் என்ற பயத்தினால் புத்தளம் பொன்பரப்பியில் மேற்கொண்ட ஆய்வை இடைநிறுத்தியது போல் எதுவித அகழ்வு வேலையும் செய்யாது இடைநிறுத்தினர். (இதுபற்றி பின்னர் பார்ப்போம்)

இந்திய வல்லாதிக்கம் என்றுமேவடக்கில் சுதந்திர ஆட்சி நிலவுவதற்கு ஆதரவாக இருந்ததில்லை. முத்து வாணிபத் தினாலும் சங்கு இராட்சத ஆமை ஒட்டு வாணிபத்தினாலும் செல்வ செழிப்புடன் வாழ்ந்து வரும் வெடியரசனின் ஆட்சி சோழனது திறைசேரி வருவாயிலும்குறைவை ஏற்படுத்தியது. இதற்காக வெடியரசன் ஆட்சியை வேர் அறுக்கும் நோக்குடன் சோழ மன்னன் கரிகால் பெருவளத் தானின் வாணிபத்தில் முக்கியம் பெற்று இருந்த மாணாக்கர் அவனிடம் இருக்கும் நாகமணியை கண்ணகி கால்சிலம்பிற்கு பெற்று வரும்படி மீகமன் எனும் கப்பல் தலைவனை அனுப்புவதற்கு முன் வெடி அரசன் மேல் சினங் கொண்டிருந்த சிங்கள மன்னனுடன் நட்பு பூண்டு அவனிடம் இருந்து வெடிஅரசன் ஆட்சியை ஒடுக்குவதற்கு கப்பல் கட்டுவதற்கான தேக்கமரங்களும், போர் புரிவதற்கு தனது படை வீரர்கள் சென்றால் தமது காவிரி அணை கட்டும் வேலை தடைப்படும் என்றும் அதற்காக சிங்கள மக்கள் 12 ஆயிரம் பேரையும் கொண்டு சென்றனன்.

மாணாகர் தாமுமந்த மதிவல்லோர்
முகநோக்கித்
தேனாருஞ் சோலைசூழஞ் தென்
இலங்கை அரசனுக்குத்
தானாகக் கட்டி வைத்த
பாகுடங்களுள்ளதெல்லாம்
யானாக அறியவிங்கே
இயம்பிடுங்கள் நீங்களென்றார்

(கண்ணகி வழக்குரை 119)

சோழ சிங்கள கூட்டினால் மீகாமனுடைய படை வெடியரசனிடம் நாகமணி வாங்கும் நோக்கில் ஒருபோருக்கு திட்டம் தீட்டியதும் மீகாமன் படைகள் வெடியரசன் கடல் எல்லையில் போருக்கு ஆயத்தமாகி சூழ்ந்து கொண்டு தம் எண்ணத்தை தூதன் மூலம் தெரியப்படுத்தினார். அதற்கு சம்மதிக்காத வெடியரசனும் போருக்கு ஆயத்தமானான். இதனை யாழ்ப்பாண இராட்சிய மன்னன் ஐந்தாம் செகராசசேகரன் இயற்றிய கண்ணகி வழக்குரை காப்பியம் பின்வருமாறு கூறுகிறது.

மீகாம னிதுரைக்க வெடியரசன்
மிகவெகுண்டு
நீகாவ லாகிவந்த நீடுகப்ப
லாயிரமும்
தீகாவ லாகிவிட்டுச் செயமுற்று
விட்டிலனேன்
பேயாழி யுயிரையுண்ட
பெரியோனைப் பிழைத்தே
னென்றான்.

நாக மணிக்கான யுத்தம் என்ற இவ்யுத்தத்தில் மிகவும் வலிமை மிக்க வீரநாராயணனையும் படைவீரர்களில் அதிகம்பேரையும் இழந்த வெடியரசன் இளையவனான தன் மகன் நீலனையும் ஏனைய மூன்று தம்பிமார்களையும் தம் குடிமக்களையும் இழக்க விரும்பாத நிலையில் தமது நாக வம்சத்தின் சின்னமாக இருந்த நாக மணியை கொடுத்து யுத்தத்தை முடிவுக்கு கொண்டு வந்தனன்.

எனினும் சோழப் படைகளின் அச்சுறுத்தல் தொடர்ந்தும் அப்பகுதியில் நீடிக்கலாம் என்ற எண்ணத் தினாலும், கண்ணகிக்கு மனமுவந்து மணி கொடுக்காதால் ஒருவகை வெப்ப நோய் பரவி மக்களில் பலர் இறக்க முற்பட்டதாலும் சிங்கள மன்னர்கள் எப்படி தமது அரண்களை மாற்றி கொண்டார் களோ அப்படி வெடியரசனும் மட்டக்களப்புக்கு தனது ராசதானியை மாற்றி கொண்டனன்.

இவற்றை வைத்து வடபுலத்தை ஆராய்ந்து கொண்டால் வெடியரசன் தங்களை விஸ்ணு புத்திரர்கள் என்று அழைத்து கொண்டதும் விஸ்ணுவின் அம்சமாகிய ஐயனார் கோவில் கட்டி தங்கள் ஆதிக்கத்திற் குட்பட்ட தீவுப்பகுதி சுழிபுரம் ஆகிய இடங்களில் வழிபட்டதும் பழைமை மிக்க புன்னாலை கிருஸ்ணன் கோவிலை வீரநாரா யணன் கட்டி வழிபாடு செய்து வந்ததும் இன்னும் பலபகுதிகள் அவர்கள் பெயரால் இன்னும் வழங்கப்படுவதும் வீரநாராயணண் பிட்டி மருவு வீரப்பிட்டி, பின் வேரப்பிட்டி என்பன பழைய மன்னர்கள் வாழ்ந்த அறிகுறி களுடன் இருப்பதும் அவர்கள் தங்களுக்காக அமைத்த பூங்கா இராசாவின் தோட்டம் என்று வழங்குவதும் நீலனை இவ்யுத்தத்தில் ஈடுபடுத்தாது மறைத்து வைத்திருந்த இடம் நீலன்காடு என வழங்கி வருவதும் இப்பகுதி இன்றுவரை ஒரு கடல்பாதுகாப்பு மையமாக பேணப்படுவதும் இலங்கையில் ஆதிகால வரலாற்று ஆய்வின் திருப்பு முனையாகும்.

வெடியரசன் வீகாமன் யுத்தத்தில் ஈடுபடாது மட்டக் களப்பிற்கு தமது குடிகளுடன் வெடியரசன் மதன் நீலனே தமது மனோ வலிமைகளையும் மந்திர வலிமைகளையும் பெருக்கி கஜபாகுவுடன் சோழ நாடு சென்று வீர சாகசம் புரிந்தவன் ஆவான். இவன் வெற்றியோடு மட்டக களப்பில் வந்திறங்கிய இடம் இன்னும் இவன் பெயரால் துறை நீலாவணை என

www.tamilarangam.net

அழைக்கப்படுகிறது.

வசையுண்ட வெண்மையினுல்வட கிழக்காகபோன நீலன் தந்தை காலத்தில் மீகாமனுல் கொண்டு செல்லப்பட்ட வம்ச உரிமையாக நாகமணியை தமதாக்கவேண்டுமென்றநோக்கில் கஜபாகுவுடன் சோழதேசம்சென்று பின் கண்ணகிக்கு கோவில் எடுத்த சேரன் செங்குட்டுவன் விழாவில் கலந்து தன் நோக்கம் நிறைவேற கண்ணகி காற் சிலம்பையும் கொண்டு வந்தனன். இதனை ராசாவலி நீலனும் கஜபாகுவும் இலங்கை வரும் போது "இருபத்திநாலாயிரம் பேரையும், பத்தினித் தெய்வத்திற்கு பூண்ட சிலம்புகளையும் வலகம்பாகு மன்னனின் காலத்தில் எடுத்து செல்லப்பட்ட ஐய கலச் சின்னத்தையும்எடுத்துசென்றனர்"

இங்கே ஒரு பெரிய உண்மை வெளிப்படுகிறது. சிங்கள மன்னன் கஜபாகுவிற்கு கண்ணகி வழிபாட்டில்ஏற்பட்ட பற்றுதலுக்கு நீலனே காரணம் என்பதும் நீலன் என்பவன் ராசாவலி கூறுவது போல் சூரன்தான், ஆனுல் தந்தை கடன் தீர்த்த தமிழ் மைந்தன் என்பதும் மட்டக்களப்பில் இன்று வரை கண்ணகி வழிபாடு பெருவழக்காக இருப்பதும், மந்திர சக்தியை நம்புவோர் மட்டக்களப்பு மாந்திரிகர்களே இன்னும் நாடுவதும் வெடியரசன் வம்சத்தினர் தொடர்ந்து மட்டக் களப்பில் ஆட்சி செய்து வந்ததும் யாழ்ப்பாணம் கண்டிக்கு முறையே தேச வழமை, கண்டியச்சட்டம் போற்று மட்டக்களப்பில் முக்குவ வழமை சட்டம் காலத்தால் முந்தியதாக இருப்பதும் போன்ற செய்திகள் இவற்றை உறுதிப் படுத்துகின்றனர்.

இவற்றை விட இன்னும் அதி முக்கியமான செய்தி என்னவெனில் நீலனும் கஜபாகுவும் இலகுவானதும் அப்போது புழக்கத்தில் இருந்ததுமான குதிரிமலையின் ஹிப்புரொஸ் துறையையோ பாலாவி மண்டபத்தின் மாந்தை துறையையோ பாவிக்காது இந்தியாவில் இருந்து திருவடிநிலையில் வந்திறங்கி தந்தையின் ஆளுகையில் உள்ள பிரதேசத்தில் கல்வளைப் பிள்ளையார் கோவிலுக்கு வடதிசையில் உள்ள அங்கண் அம்மைக் கடவையில் மதுரையை எரித்த கண்ணகிக்கு முதல் கோவிலை நிர்மாணித்தனர். எனவே பலவேறு வரலாற்று மூலகங்களின் மூலம் தெளிவுபடுகின்ற உண்மை மகாவம்சத்தில் மறைக்கப் பட்டிருப்பது புலனுகிறது.

---

**ஜோன் ஜெனே..**

தத்துவமயமானவை. ஐரோப்பிய ஜேனே தனிமனித சுதந்திரத்தினை வாதிக்கத் தயங்கியவரல்லர். "ஐரோப்பிய உலகம் என்னைக் காலால் போட்டு உழக்கியது, ஆனுல் அது என்னை வெல்லவில்லை" என்கின்றூர்.

★ ★ ★

தனிமனித குற்றங்களும், நிறுவனமயப்படுத்தப்பட்ட அமைப்புகளின் (அரசு, இயக்கங்கள், தேவாலயங்கள், மிகப்பெரும் நிதி நிறுவனங்கள்) குற்றங்களும் ஒன்றல்ல. நிறுவனமயப்படுத்தப்பட்ட அமைப்புகளின் குற்றங்கள் மட்டும் தண்டனைகளுக்குத் தப்புகின்ற போது இவைகளது குற்றங்கள் முடிமறைக்க தனிமனிதர் தண்டிக்கப் படுகின்றனர். குற்றம் மீதான வியாக்கியானங்களும், இதற்கெதிரான சட்ட திட்டங்களும் சமூகங்களது கட்டமைப்பினது அத்திவாரங்களைப் பரிசோதிக்க வேண்டும் என்பதையே எமக்கு மறைமுகமாக உணர்த்துகின்றன. சட்டங்களில் இருந்தே குற்றங்கள் தோன்றுகின்றன எனில், இந்தக் குற்றங்களை உருவாக்கும் சட்டங்களைத் தண்டிப்பது அவசியம்.

சமூக எதிர்ப்பியக்கவாதிகளைத் தனிமைப்படுத்துவதைத் காட்டிலும், இவர்களது உயிரின் ஓலங்களைக் கேட்க எமது செவிகளைக் கொடுத்தால் சில அடிப்படை உண்மைகளை நாம் விளங்கிக் கொள்ளலாம்.

ஜேனேக்கு ஓர் அஞ்சலி செய்யு முகமாகவே, விசாரணைக்குள் அவர் மீது சில எழுதினேன். இவர் மீதும், இவர் போன்ருேர் மீதும் நாம் காத்திரமான ஆய்வுகளைச் செய்தல் தீர்வு தரா அரசியல் தீர்வுகளைச் சொல்லுவதைக் காட்டிலும் மேலானதென்பது எனது இருத்தல் சிந்தனையின் ஓர் அடக்கமான அபிப்பிராயம்.

---

# ஜே.வி.பி..

சிசில் வைத்தியரட்னவைப் போன்ற பொலீசிலும் பிரதிப் பொலிஸ் அதிபராகவிருந்த பிரேமதாச உடுகம்பொலவும் ஜேவிபியை அழிப்பதில் எவ்வித அனுதாபமும் இன்றி செயல்பட்டதோடு ஜேவிபியினரே மீதியடையும் அளவுக்கு ஜேவிபி மீது பதில் பயங்கரத்தை கட்டவிழ்த்து விட்டார்.

தொடரும்

பிழைதிருத்தம்

ஜனவரி 28,1994 தாயகம் இதழ் 22 பக்கம் 3 வது கலத்தில் "ஜனுதிபதி பிரேமதாசாவின் சவாலை ஏற்று இந்தியா சமாதானப் படையைத் திருப்பி அழைக்கவில்லை. தனது வெட்டிப் பேச்சு மூலம் தானே இக்கட்டான நிலமைக்குள்ளானுர். பிரேமதாச அவர்களைத் துரத்தவேண்டும் என ஜேவிபி கூறியது" என்பதை தயவு செய்து,


"ஜனுதிபதி பிரேமதாசவின் சவாலை ஏற்று இந்தியா சமாதானப்படையைத் திருப்பி அழைக்கவில்லை. தனது வெட்டிப் பேச்சு மூலம் தானே இக்கட்டான நிலமைக் குள்ளானுர். பிரேமதாச கூச்சல் போட்டதற்காக இந்தியப்படைகள் திரும்பப் போவதில்லை, அவர்களைத் துரத்தவேண்டும் என ஜேவிபி கூறியது" எனத் திருத்தி வாசிக்கவும் தவறுக்கு வருந்துகிறேம்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# கணவன்



**வ.ந.கிரிதரன்**

பல்கனியிலிருந்து எதிரே விரிந்திருந்த காட்சிகளில் மனம் ஒன்ருதவனுகப் பார்த்தபடி நின்றிருந்தான் சபாபதி. கண்ணிற் கெட்டியவரை கட்டங்கள்.. உயர்ந்த, தாழ்ந்த, அகன்ற, ஒடுங்கிய கட்டங்கள்... டெஸ்மண்ட் மொறிஸ் கூறியது போல மனிதமிருகங்கள் வாழ்கின்ற கூடுகள், நகரங்கள் மனித மிருகங்கள் வாழுகின்ற மிருக காட்சிச்சாலே என்று அவர் குறிப்பிட்டதில் தவறேதுமிருப்பதாகத் தெரியவில்லே. பார்க்கப் போனுல் இன்றைய மனிதனின் அடிப்படைப் பிரச்சினைகளிற்கு ஒரு வகையில் நகரங்களும் காரணமாயிருக்கலாம். மிருகங்களை கூண்டுகளில் அடைத்து வாழ நிர்ப்பந்திக்கும் போது அவற்றின் இயல்புகளில் ஏற்படும் மாற்றங்கள் பல, நகரத்தில் செறிந்திருக்கும் கட்டடக் கூண்டுகளிற்குள் அடைப்பட்டுக் கிடக்கும் மனித மிருகங்களிலும் காணப்படுகின்றனவாம், நகரத்தில் இருந்து கொண்டு தானே இன்றைய மனிதன் சக மனிதன்மேல் அதிகாரத்தைப் பிரயோகிக்கின்ருன். X=Y, Y=Z ஆகவே X=Z என்ற வகையான கணித சாத்திரத்திற்குரிய தர்க்க நியாயத்தின்படி பார்க்கப்போனுல் இன்றைய மனிதனின் பிரச்சினைகளிற்கு முக்கிய காரணம் நகரத்து மனிதன் என்றல்லவா ஆகி விடுகின்றது. இது பற்றியெல்லாம் சிந்திக்கும் மனநிலேயில் சபாபதி இருக்கவில்லே.

வழக்கத்தை விட குளிர் இந்த வருடம் அதிகம். இன்னும் பனிமழை பொழியத் தொடங்கவில்லே. டொரன்டோ வந்த புதிதில் இவனிற்கு குளிர்காலம் நெருங்கும் போதே தலேயிடி தொடங்கி விடும் ஊர் ஞாபகம் தோன்றிவிடும் 'கசோரினு' பீச்சில்' ஒரு முறை மூழ்கி எழுவேண்டும் போலிருக்கும். நவாலி மண்கும்பிகளிற்கருகில் சாய்ந்தபடி விரிந்து கிடக்கும் வயல்வெளிகளே, தொலேவில் தெரியும் காக்கைதீவுக் கடற்கரையை, கல்லுண்டாய் வெளியைக் காற்றிலாடும் பனைப் பெண்களே ரசிக்க வேண்டும் போலிருக்கும். வருடம் செல்லச் செல்ல டொரண்டோ இவனிற்குப் பழகி விட்டது. குளிர் காலமும் ஸ்னேவும் முன்புபோல் இவனே இப்பொழுதெல்லாம் அதிகம் பயப்படுத்துவதில்லே. பழகி விட்டன. இப்பொழுதெல்லாம் நேரத்துடனேயே இருட்டி விடுகின்றது. நாலரை ஐந்து மணிக்கெல்லாம் இருள் கவிந்து விடுகின்றது. இலேசான இருளில் தூங்குவதற்குத் தயாராகயிருக்கின்றது கட்டடக்காடு. உயர்ந்து, நீண்டு தொலேவில் சீ. என். கோபுரம் இவ்வளவு தொலேவிலும் வடிவாகத் தெரிகின்றது. வழக்கமாக இவற்றையெல்லாம் ரசிக்கும் மனதிற்கு ஒரு கிழமையாக விடுமுறை. பானுவைப் பற்றித்தான் மீண்டும் மீண்டும் குமைந்து போய்க் கிடக்கின்றது. பானுமதி இவனது இல்லாள். இல்லாள் இல் வருவதற்கு இன்னும் ஒரு மணியாவது செல்லும். இந்தப் பிரச்சினைக்கு எப்படியாவது இன்று முடிவொன்றைக் கண்டு விடவேண்டும். மனதிற்குள் தீர்மானித்தவனுக உள்ளே செல்கின்ருன். சென்றவன் 'டக்கிளா'வையும் 'மார்காீட்டா'வையும் எடுத்து அளவாகக் கலந்து பிரிட்ஜிலிருந்து ஐஸ் கட்டிகளே எடுத்துப் போட்டபடி மீண்டும் பல்கனிக்கு வருகின்ருன். ஊரிலிருந்த காலத்தில் இவனது பிரியமான மதுபானங்கள், உடனிறக்கிய பனங்கள்ளும், 'குரங்கும்(நம்மூர்ச் சாராயம்தான்)' குரங்கென்று பெயர் வைத்த மகராசிற்கு வாயில சக்கரையை அள்ளித் தான் போட வேண்டும். நமது மூதாதையர் யார் என்பதில் சந்தேகப் படுபவர்களின் சந்தேகத்தைத் தீர்த்து வைத்து விடும் வல்லமை மிக்கது அந்தக் குரங்கு. இந்நாட்டுக் குடிவகைகளில் இவனிற்கெதுவுமே பிடிக்கவில்லே. எவ்வளவு குடித்தாலும் 'குரங்கின்' அந்தக் 'கிக்' இவனிற்கு இப்பொழுதெல்லாம் வருவதில்லே ஒருவேளே இவனிற்கு வயசாகி விட்டதன் அறிகுறியாகயிருக்கலாம் ஆனுல் இந்த 'டக்கிளா' (மெக்ஸிகோவின் புகழ் பெற்ற மதுவகை) மட்டும் ஓரளவிற்கு



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net


# ஏ.ஆர்.கே மார்க்கட்

## 31-35 St.Dennis Dr

(Don Mills/Eglinton)

## (416) 421 3429

இலங்கை இந்திய உணவுப் பொருட்கள்,
மரக்கறி வகைகள்,
கடலுணவு வகைகளை மலிவு விலையில் பெற ...
தமிழ், ஹிந்தி வீடியோப் படங்கள்
வாடகைக்குப் பெற...

**★ பால், பழங்கள், உடன் மரக்கறிகள், இறைச்சி மீன் வகைகள் ★ கனடிய உணவுப் பொருட்கள்**

★ Frozen seafood

CD, Audio **மலிவு விற்பனையில்**

பழைய, புதிய தமிழ் வீடியோ
படங்கள் வாடகைக்கும்
விற்பனைக்கும்
(ஒரிஜினல் பிரதிகள் மட்டும்)

# A.R.K MARKET




தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இவனுக்கு பிடித்தமானது.

'டக்கி'ளாவின் அறிமுகம் இவனிற்குக் கிடைத்தற்குக் காரணமே 'கிட்டார்' அடிக்கப் போனது தான். 'கிட்டார்' அடிப்பதற்கும் 'டக்கிளா'விற்கும் என்ன சம்பந்தமென்று மூக்கில் விரலை வைத்து விடாதீர்கள். 'கிட்டார்' அடிப்பது என்பது ரெஸ்டாரண்டில் கோப்பை கழுவதற்குரிய பரிபாசை. அவ்வளவுதான் கனடா வந்த புதிதில் இவன் செய்த முதல் வேலை 'கிட்டார் அடி'தான். கிரேக்கனுடைய ரெஸ்டாரன்ட் வேலை செய்வதில் கவுண்டமணி அடிக்கடி கூறுவதுபோல் இவன் ஒரு மாடு மாதிரி. கிரேக்கர்களிற்கு மாடு மாதிரி வேலை செய்பவர்களை நல்லாப் பிடிக்கும், மாடு மாதிரி வேலை வாங்கவும் நல்லாப் பிடிக்கும். அதேசமயம் நீங்கள் மட்டும் நன்கு வேலை செய்து விடுகிறீர்களென்று வைத்துக் கொள்ளுங்கள்... அவர்களை மாதிரி உங்களைக் கவனிக்க வேறு யாராலுமே முடியாது.

இவன் ஏற்கனவே கனடா வருவதற்கு முன்பு கிரேக்கக் கப்பலொன்றில் வேலை செய்திருந்தான். கிரேக்கர்களைப் பற்றிச்சிறிது அறிந்திருந்தான். க.பொ.த. (சாதாரணம்) பரீட்சை எடுத்த காலத்தில் பௌதிகத்தில் ஆர்க்கிமிடிசு போன்ற கிரேக்க விஞ்ஞானிகளைப் பற்றிச் சிறிது படித்திருந்தான். மனித சமுதாய நாகரீக வளர்ச்சியில் கிரேக்கர்களிற்கு முக்கியமான பங்கொன்று உண்டு. ஒரு காலத்தில் கொடிகட்டி வாழ்ந்த இனம், நம்மவரைப் போல கிரேக்கர்களிற்குப் பிடித்த இன்னுமொரு விடயம் பழம் பெருமை பேசுவது, அதுவும் நம்மவரைப் போல் தான். ஆர்கிமிடிசு பற்றியோ பிளேட்டோ பற்றியோ கூறிவிட்டால் உடனடியாக மகிழ்ந்து விடுவார்கள். கிரேக்கர்களைப் பற்றிய அறிவு சபாபதிக்குக் கிரேக்கர்களுடன் வேலை செய்யும் போதெல்லாம் கை கொடுக்கத் தவறுவதேயில்லை. இவனது 'கிரேக்க' அறிவிலும், வேலைசெய்யும் பண்பிலும் அகமகிழ்ந்து போன ரெஸ்டாரண்ட் சொந்தக்காரனை பீட்டர் வேலை முடிந்து வீடு செல்லும் சமயங்களில் இவனிற்குத் தன் கையாலேயே மதுவகைகளிலொன்றை அதற்குரிய 'கொக்டெயிலுடன்' அளவாகக் கலந்து கொடுப்பான். வேலைக்களைப்பு நீங்க அதனைச் சுவைத்தபடி இவன் அரிஸ்டாட்டில் பற்றிக் கூறுவதை ஆர்வமாகக் கேட்பான். "ஆங்கிலேயன்கள் தான் எல்லாப் பிரச்சனைகளிற்கும் காரணம், உங்களுடைய நாட்டை மட்டுமல்ல எங்களைக் கூடக் குட்டிச்சுவராக்கியவர்கள் இவர்கள் தான்" என்று அடிக்கடி பீட்டர் கூறுவதுண்டு. அந்த ரெஸ்டோரண்ட் அனுபவம் இன்று இவனிற்குக் கை கொடுக்கின்றது.

ஒரு மிடறை விழுங்குகின்றான். நெஞ்சிற்கு இதமாகவிருக்கின்றது. மீண்டும் பானுமதியின் நினைவுகள். பிரச்சினை இதுதான். இவனிற்கும் பானுமதிக்கும் திருமணம் முடிந்து ஒரு வருடம் தான். ஒரு வருடமாக ஏற்படாத பிரச்சினை ஒரு கிழமையாக ஏற்பட்டு விட்டிருந்தது, அதற்குக் காரணம் போனகிழமை இவன் காதுகளில் விழுந்த ஒரு கதைதான். நண்பனொருவன் வீட்டில் நடந்த சிறு 'பார்ட்டி'யொன்றில் அடிபட்ட கதைதான் இவன் நெஞ்சில் பிரச்சினைத் தீயை வளர்த்து விடக் காரணமாகயிருந்தது. குடிபோதையில் நண்பர்கள் அண்மைக் காலமாக ஏஜண்டுகள் என்ற பெயரில் ஒருசிலர் பண்ணும் திருவிளையாடல்களைப் பற்றிக் கதைத்துக் கொண்டிருந்தார்கள். தாய்லாந்திலும், சிங்கப்பூரிலும் சீரழிந்து கொண்டிருக்கும் அப்பாவிப் பெண்களைப் பற்றிக் கண்ணீர் விட்டுக்கொண்டிருந்தார்கள். நண்பர்களிலொருவன் ஏஜண்ட் வேலை செய்பவன், 'ஏஜண்ட்'மாரைப் பற்றித் தரக் குறைவாகக் கதைக்கும் ஏனைய நண்பர்களைப் பார்த்துச் சீறினான் "எல்லா இடங்களிலும் கிறிமினல்கள் இருக்கத்தான் செய்கிறான்கள் அதற்காக எல்லா ஏஜண்ட்மாரைப் பற்றியும் கூடாமல் கூறுவது தவறு" என்பது அவனது வாதம் உண்மைதான். ஏஜண்டமாரென்று ஒருத்தரும் இல்லையென்றால் இன்று கனடாவில் நம்மவரின் சனத்தொகை பெருகியிருக்கப் போவதில்லை தான். ஊசித் துளைகளிற்குள்ளும் தலையை நுளைத்து விடும் ஒட்டகங்கள் அல்லவா நம்முடைய ஏஜண்டுகள். சபாபதி கூட ஏஜண்ட் ஒருவன் மூலமாக வந்தவன் தான் 'எல்லா மட்டத்திலும் கிறிமினல்கள் இருப்பதைப் போல் தான் ஏஜண்ட் காரர் விசயத்திலும் இருக்கின்றது' என்பது தான் அவனது எண்ணம், இன்று நம்மவர் சீரழிந்து கொண்டிருப்பதற்குக் காரணமே நாட்டு நிலமை தான், நாட்டு நிலைமைதானே எல்லோரையும் ஓடஓட விரட்டி வைக்கிறது. அதனால் தானே பிரச்சனைகளும் நாட்டு நிலமை மட்டும் சீராகட்டும் தற்போது நடைபெறும் சீரழிவுகள் அரைவாசியாகக் குறைந்துவிடும் என்று நண்பனொருவன் கூறிக் கொண்டிருந்தான். அதுவரையில் சபாபதிக்குப் பிரச்சினையே ஏற்படவில்லை. அதன் பிறகு ஏஜண்ட் ஒருவனைப் பற்றி அவர்கள் கதைக்கத் தொடங்கியதும் தான் பிரச்சனை ஆரம்பமாகியது.

ரொராண்டோவில் மனைவி பிள்ளைகளென்று வாழும் ஏஜண்ட் ஒருவனைப்பற்றிய கதை அது. அந்த ஏஜண்ட் தான் இவன் மனைவி பானுமதியையும் கூட்டி வந்தவன். சந்தேகத் தீ விசுவரூபமெடுத்து விட்டது. அந்த ஏஜண்டுடன் ஒரு மாதமளவில் பானுமதி சிங்கப்பூரில் நின்றிருக்கின்றாள். நினைப்பதற்கே சங்கடமாகியிருந்தது. இவனையே பைத்தியமாக்கும் அழகு பானுமதியினுடைய அழகு. மதமதர்த்த உடல்வாகு. எவ்வளவு தான் நெகிழ நெகிழ ஆடைகள் அணிந்தாலும் அவளால் திமிறித் துடிக்கும் அழகுகளை ஒளித்து வைக்கவே முடிந்ததில்லை. இவனது சந்தேகம் சுவாலைவிட்டுப் படர்வதற்குக் காரணமே அவளது அந்தப் பேரழகுதான் மீண்டும் ஒரு மிடறை விழுங்கினான். உள்ளே சென்ற மது



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இலேசாக வேலை செய்யத் தொடங்கியது.

'கேட்டு விடுவோமா? மனதை அரித்துக் கொண்டிருக் கின்ற சந்தேகத்தைக் கேட்டு விடுவோமா? எப்படி கேட்பது காறித் துப்பி விடமாட்டாளா? கேட்காவிட்டால் இவனிற்கு மண்டை வெடித்துவிடும் போலிருந்தது. என்ன செய்வது? அவளும் தான் மாடு மாதிரி தொழிற்சாலையொன்றில் வேலை செய்கின்றாள்.. களைத்து வரும் அவளிடம் எப்படிக் கேட்பது? எவ்வளவிற்கு அடக்க முயன்றானோ அவ்வளவிற்கு மன உளைச்சல் அதிகரித்துக் கொண்டேயிருந்தது.

கிறிஸ்டினா அடிக்கடி கூறுவாள். "யாரைத் திருமணம் செய்தாலும் இந்தியன் ஒருவனை செய்வே மாட்டேன்."

"ஏன் கிறிஸ்டினா இந்திய ஆண்களை மாதிரிப் பொறுமை சாலிகள் ஒருத்தருமேயில்லை அது உனக்குத் தெரியுமா?"

"சும்மா பொய் அளக்காதே, சபாபதி உங்களுடைய ராமாயணம் பார்த்திருக்கின்றேன். உங்களு டைய கடவுள் ராமனே மனைவியை நம்பாமல் சந்தேகப்பட்டுத் தீக்குளிக்க வைக்கவில்லையா?" கிறிஸ்டினா இவனுடன் கிரேக்க ரெஸ்டோரண்டில் 'வெயிட் ரஸ்'ஸாக வேலை பார்த்தவள். சிலர் நிறத்திமிர் பிடித்தவர்கள். அதிகம் கதைக்க மாட்டார்கள். இவள் அவர்களில் சிறிது வித்தியாச மானவள் அவளைப் பொறுத்த வரையில் சிறிலங்காவோ, பாகிஸ்தானோ, பங்களாதேசோ, இந்தியாவோ .... இப்பகுத களிலிருந்து வருபவர்கள் எல்லோருமே இந்தியர்கள் தான். இந்த விசயத்தில் இவள் நிறவெறி பிடித்தவர்களிலிருந்து சிறிது வேறுபட்டவள். நிறவெறி பிடித்தவர்களிற்கு இப்பகுதி மக்கள் யாவருமே 'பாக்கி'கள் அவ்வளவு தான் வித்தியாசம்.

"சபாபதி! உங்களுடைய ராமனைப் பார், கடவுளென்று வைத்துக் கொண்டாடுகிறீர்கள். சொந்த மனைவியையே அவனால் நம்ப முடியாமலிருக்கின்றது அவன் என்ன காரணம் சொன்னாலும் சீதையைத் தீக்குளிக்க வைத்தது. தவறு"

"ராமன் உண்மையில் மனைவியைச் சந்தேகிக்கவில்லை அவனிற்குத் தெரியும் அவள் உத்தமி என்பது உலகிற்கு அவளது நேர்மையை வெளிப்படுத்தத் தான் அவன் அப்படிச் செய்தான்"

"அப்படிச் செய்வதைத் தான் பிழை என்கின்றேன். கடவுளின் அவதாரமான ராமனே இப்படிச் செய்வது மக்களையும் மனைவியைச் சந்தேகிப்பது சரியான செயலென நம்பச் செய்து விடுகின்றது."

"அதிலென்ன தவறு..."

"அதுதான் தவறென்கின்றேன். திருமணமென்பது சாதாரண விடயமொன்றல்ல, வாழ்க்கை முழுவதும் ஒருவரையொருவர் நம்பி, வாழும் ஒரு வகையான உறவு. இதற்குப் பரஸ்பர நம்பிக்கை மிகவும் அவசியம், ஒருவர் உரிமையை மற்றவர் மதிக்க வேண்டும் சீதை விரும்பியா இராவணனிடம் போனாள்? ஊர் சந்தேகப்படுவதாக வைத்து, ராமன் சீதையை எவ்வித சந்தேகமுமின்றி ஏற்பதாக இருந்திருந்தால் ராமாயணத்தை எனக்குப் பிடித்தி ருக்கும். எங்களைப் பார், திருமணம் செய்யும் மட்டும் நாங்கள் மனம் போனபடி வாழ்கின்றோம். முடித்த பிறகோ கடந்தகாலத்தைப் பற்றிக் கவலைப்படுவதில்லை. ஆனால் இந்தியர்களான நீங்களோ.. நீங்கள் எத்தனை பேருடனும் செல்வீர்கள் உங்களிற்கு உங்கள் மனைவி மட்டும் பத்தினியாகயிருக்க வேண்டும்."

கிறிஸ்டினாவின் குரல் காதில் ஒலிக்கின்றது. அருகிலிருந்து அவளிற்கேயுரிய சிரிப்பு கதைப்பது போலிருக்கின்றது. இன்னுமொரு மிடறை விழுங்குகின்றான் சபாபதி மனது இன்னமும் இலேசாகி உடைகின்றது. 'பானுவிடம் கேட்பதற்கு என்ன தகுதி எனக்கிரு க்கின்றது? கேட்பதற்குரிய தார்மீகமான காரணம் தான் ஏதாவதிருக்கின்றதா? மனைவி என்றரீதியில் அவள் எனக்கென்ன குறை வைத்தாள்? அவளிடம் என் சந்தேகத்தைக் கேட்பது புருஷன் என்ற என் ஸ்தானத்திற்கு மாசு கற்பித்து விடாதா? ஒரு மனைவியைச் சந்தேகப்படுவதே தவறான செயலென்றால்.. சந்தேகப் படுவதற்குரிய தகுதியாவது எனக்கிருக்கின்றதா?

சபாபதிக்கு வெறி ஏற ஏற பழைய நினைவுகள் சில படம் விரிக்கின்றன. நெஞ்சுப் புற்றுக்குள்ளிருந்து வெளிவந்தாடும் நினைவுப் பாம்புகள்.. அப்பொழுது அவன் இளமையின் ஆரம்ப படிக்கட்டில் காலடிவைத்திருந்தான். கப்பலில் வேலை செய்யத் தொடங்கியிருந்த சமயம், தாய்லாந்து அழகிகளிற்கும் தென்னமெரிக்க அழகிகளிற்கு மிடையில் உள்ள வித்தியாசங் களைக் கணக்கிட்டுக் கொண்டிருந்த காலம். அவன் எப்பொழுதாவது பானுமதியிடம் தனது கடந்த காலத்தைப் பற்றிக் கதைத்திருக கின்றானா? ஒரு சமயம் நாளைக்கு கப்பலில் வேலை செய்பவர்கள் சிலரின் இதுபோன்ற லீலாவிநோ தங்களைக் கேட்டுவிட்டு, சந்தேகப்பட்டு இவனிடம் வந்து பானுமதி விளக்கம் கேட்டால் எப்படியிருக்கும்?

"எங்களைப்பார் திருமணம் முடிந்தபிறகு நாங்கள் கடந்த காலத்தைப் பற்றிக் கவலைப்படு வதில்லை ஆனால் இந்தியர்களான நீங்களோ....."

'கிறிஸ்டினா அன்று நீ சொன்னதன் பொருளை என்னால் உணர முடியாதிருந்தது ஆனால இன்று.... சபாபதி மிஞ்சியிருந்த கடைசிப் பகுதியையும் விழுங்குகின்றான். விண்விண்னென்று வலித்துக் கொண்டிருந்த தலையிடிக்கு என்ன நேர்ந்தது? பானுமதி வரும் நேரமாகி விட்டது. வேலை முடிந்து களைப்புடன் வரும் மனைவிக்குச் சூடாக ஒரு கப் 'காப்பி' போட்டுக் கொடுக்கக் கூடாதா? சபாபதி களைத்து வரும் மனைவியை வரவேற்பதற்குத் தயாராகின்றான். கிறிஸ்டினா மட்டும் இதனைக் கண்டிருந்தால் நிச்சயமாக இந்தியக் கணவர்களைப் பற்றிய தனது கருத்தை மறுபரிசீலனை செய்திருப்பாள்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# ஜே.வி.பி.யின் வரலாற்றுக் கதை

வசந்த திசாநாயக, பற்றிக்பெர்னன்டோ
சரத் த சில்வா, ரஞ்சித் குமார

தமிழாக்கம்: செ. லோகநாதன்

## அரசாங்கம் தீர்க்கமான தாக்குதலுக்கு தயாராகிறது

ஜேவிபிக்கு எதிராக மட்டுப்படுத்தப் பட்ட தாக்குதல்களைத் தொடுக்கும் அதேவேளையில் ஜேவிபியை இசையச் செய்வதற்கே அரசாங்கம் கணிசமான அளவு காலம் முயற்சித்தது. ஜே.ஆர் ஜெயவர்த்தனவின் ஆட்சி காலத்தின் இறுதி அரைப்பகுதியில் ஜேவிபியை அழிக்கும் அவசியமும் அதனை அழிப்பதற்கான வேலைத்திட்டமும் உருவாக்கப்பட்ட போதிலும் சாதகமான பெறுபேறுகளை அளிக்கக் கூடிய விதத்தில் அவ் வேலைத்திட்டத்தை செயல்படுத்த முடியவில்லை. சில பிரதேசங்களில் மட்டுமே கடுமையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

அக்காலத்தில் இராணுவ கேர்னல்களில் ஒருவராகவிருந்த பிரிகேடியர் லக்கி அல்கம அவர்களாலேயே ஜேவிபிக்கு எதிராக கடும் நடிவடிக்கைகள் எடுக்கப்பட்டன. அவர் ஜேவிபியின் குரூர நடவடிக்கைகளையும் விஞ்சி பதில் குரூர நடவடிக்கைகளை மேற்கொண்டதோடு மக்களைத் தனது பக்கம் வென்றெடுப்பதற்காக ஜனஹமுவ எனப்படும் மக்கள் சந்திப்புக்களை நடாத்தியும் இரட்டை உபாயங்களை பாவித்து முதலாவதாக எம்பிலிப்பிட்டிய பிரதேசத்திலும் இரண்டாவதாக தெற்கிலும் கடுமையாக ஜேவிபியை ஒடுக்கினர். ஆனால் பிரேமதாச பதவிக்கு வந்த பின்னர் இப் பிரதேசங்களில் மீண்டும் முன்னர் நிலவியதையும் விட மோசமான முறையில் ஜேவிபியின் நடவடிக்கைகள் அதிகரித்தன.

பிரேமதாசவின் ஆட்சியின் கீழ் ஜேவிபி மீது முழுஅளவிலான தாக்குதல்களைத் தொடுக்கும் அவசியம் பாதுகாப்பும் படையினருக்கும் பாதுகாப்பு அமைச்சர் ரஞ்சன் விஜேரத்னவுக்கும் இருந்த போதிலும் ஜனாதிபதி பிரேமதாச கணிசமான காலம் அதற்கு இடமளிக்கவில்லை. ஒரு புறம் கபட எண்ணத்துடனாக இருக்கலாம், ஜேவிபி குறித்து கள்ளக் காதலைக் காண்பித்த அவர் மறுபுறம் எவ்வாறாயினும் ஜேவிபியை பேச்சுவார்த்தைக்கு அழைத்து வன்செயல்களை கைவிடுவதற்கான தூண்டுதல்களை ஏற்படுத்த முயற்சித்தார். இதனால் பாதுகாப்புபடையினர் ஜேவிபி மீது முழு அளவிலான தாக்குதல்களைத் தொடுக்க இயலாது போயிற்று. ஆயினும் தமக்குக் கிடைத்த வரையறைக்குள் உச்ச ஆற்றலை பயன்படுத்தி தாக்குதல்களை மேற்கொண்டனர். இதனிடையே இத்தாக்குதல்களை எதிர்க்கவும் ஜனாதிபதியால் முடியவில்லை.

1989 ஆகஸ்ட் மாதம் அளவில் பாதுகாப்பு படைகளில் சேவையாற்றுவோரை அவற்றிலிருந்து இராஜினாமாச் செய்யுமாறும் அவ்வாறு இராஜினாமாச் செய்யாதவர்களின் குடும்பத்தவர்களுக்குக் கூட கடுமையான தண்டனை விதிப்பதாகவும் "தேசபக்த மக்கள் ஆயுதப் படை அணியின் ஒருங்கிணைந்த ஆணையிடும் தலைமையகத்தால்" அறிவிக்கப பட்ட பின்னர் அங்கும் இங்குமாக இராணுவத்தைச் சார்ந்தோரின் குடும்பங்களை கொலை செய்வது ஆரம்பமாகியது. இதன் பின்னர் பாதுகாப்புப் படையினர் மற்ற அனைவரையும் விட ஜேவிபியை அழிப்பதில் ஆர்வம் காட்டினர். பாதுகாப்புப் படையினரின் அரசாங்கம் மீதான அழுத்தங்கள் வரவர அதிகரிக்கத் தொடங்கின. அரசாங்கத்தின் பின்வரிசை பாராளுமன்ற உறுப்பினர்களும் கூட ஜேவிபியை அடக்குவதற்கு கடுமையான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு ஒரே குரலில் கூறினர். ஒரு புறம் ஜேவிபியின் நடவடிக்கைகள் பாய்ச்சலில் வளரும் போது மறுபுறம் ஆயுதப்படைகளதும் தமது கட்சியினரதும் கடுமையான அழுத்தங்களைக் கொண்ட கோரிக்கை காரணமாக இறுதியில் ஜனாதிபதி பிரேமதாச 1989 ஜூன் 22ம் திகதி மீண்டும் அவசரகாலச் சட்டத்தை பிரகடனம் செய்ததோடு பாதுகாப்புப் படையினருக்கு செயல்படுவதற்கான பூரண அதிகாரத்தையும் வழங்கினர்.

ஜேவிபியை அடக்குவதற்கான பொறுப்புகள் கையளிக்கப் பட்டதும் அதனை உறுதியான மனோதிடத்துடன் பொறுப்பேற்றதும் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் ரஞ்சன் விஜேரத்னவாகும். அவர் ஜனாதிபதி பிரேமதாசாவைப் போலன்றி ஆரம்பத்திலிருந்தே கடுமையான நடவடிக்கைகள் மூலமாக ஜேவிபியை அடக்கவேண்டும் என்னும் கருத்தைக் கொண்டிருந்தார். ஜேவிபிக்கு எதிரான நடவடிக்கைகளின் போது அவர் எவ்வளவு தூரம் உறுதியான நிலைப்பாட்டில் இருந்தார் என்பதாயின் ஜனாதிபதி பிரேமதாசவால் கூட இவர்மீது அழுத்தங்களை பிரயோகிக்க முடியாதிருந்தது.

அவசரகாலச்சட்டத்தை பிரகடனம் செய்து ஜேவிபி மீதான



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

தாக்குதல்களை அதிகரித்த அரசாங்கம்நாட்டில்சமாதானத்தை நிலை நாட்டவும் நிலைமையை வழமைக்குக் கொண்டு வரவும் ஒன்று சேருமாறு செப்டம்பர் 19ம் திகதி ஜேவிபிக்கும் தேசபக்த மக்கள் இயக்கத்திற்கும் மீண்டும் அழைப்பு விடுத்தது. ஆனால் இவ் அழைப்புக்கு சாதகமான பதில் ஏதும்கிடைக்கவில்லை ஜேவிபியை எவ்வாறாயினும் இசையைச் செய்தலே பிரேமதாசவின் அவசியமாகவும் இருந்தது. 1989 ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 05ம் திகதி அரசாங்கக் கட்சி பாராளுமன்ற உறுப்பினர் மத்தியில் பேசும்போது ஜனாதிபதி பிரேமதாச ஜேவிபி பற்றி நீண்ட உரை ஒன்றை நிகழ்த்தினார். அன்றைய ஜனாதிபதி ஜே.ஆர். ஜெயவர்தனவுக்கு 1983ம் ஆண்டு டிசம்பர் 08ம் திகதி விஜேவீரவால் அனுப்பிவைக்கப்பட்ட கடிதத்தில் ஜேவிபி ஜனநாயக வழியில் இருந்து மாறியதற்கான காரணங்கள் நீண்ட அளவில் விபரிக்கப்பட்டுள்ளன எனக் கூறிய ஜனாதிபதி "அதனால் என் கண்கள் திறந்துவிட்டன" எனவும் கூறினார். 1977ல் இருந்து 1983 வரை ஜேவிபி ஜனநாயக வழியில் சென்றது எனவும் தேர்தலை ஒத்திவைப்பதற்கான சர்வஜன வாக்கெடுப்பு குறித்து அது தனது எதிர்ப்பை ஜனநாயகரீதியாக நீதிமன்றம் மூலமே காட்டியது எனவும் ஜேவிபி மீது தடைவிதித்தது தொடர்பாக ஆரம்பத்திலிருந்தே தான் எதிராக இருந்ததாகவும் கூறி சகல பாவங்களையும் ஜே.ஆர் மீது சுமத்திய பிரேமதாச தான் ஒரு பாவமும் அறியாத சுற்றவாளி என தன்னைக் காட்டிக் கொண்டே ஜேவிபியை தனது பக்கம் இசையைச் செய்ய முயற்சித்தார். ஆனாலும் ஜேவிபி பிரேமதாசவின் கோரிக்கையை செப்புக் காசுக்குக் கூட கணக்கெடுக்கவில்லை.

பிரேமதாச என்ன செய்தபோதிலும் ரஞ்சன் விஜேரத்ன தான் பாதுகாப்பு அமைச்சராக பதவி ஏற்ற நாள் தொடக்கம் மேஜர் ஜெனரல் சிசில் வைத்தியரட்ன போன்ற இராணுவ அதிகாரிகளுடன் சேர்ந்து ஜேவிபியை தோற்கடிப்பதற்கான மூல உபாயங்களை உருவாக்கத் தொடங்கினார். ஜேவிபி போன்ற ஒன்றுக்கு முகங் கொடுப்பது எவ்வாறு என்பது தொடர்பாக எவ்வித அனுதாபம் அற்றதும் சூட்சுமமானதுமான அவருக்குரிய வேலைத்திட்டம் ஒன்று மேஜர் ஜெனரல் சிசில் வைத்தியரட்னவிடம் இருந்தது. ஜேவிபியை நிச்சயமாக தோற்கடிக்கலாம் என்பது அவரது திடமான கருத்தாகும். இதனாலேயே ரஞ்சன் விஜேரத்னவும்ஜேவிபியை யுத்த ரீதியாக தோற்கடிக்கும் நடவடிக்கைகளை மேற்கொள வதற்காக சிசில் வைத்திய ரத்னவைத் தேர்ந்தெடுத்தார்.

பாதுகாப்பு படையினரதும் ஆளும் கட்சி பாராளுமன்ற உறுப்பினர் களதும் வலியுறுத்தல்கள் காரணமாக ஜேவிபிக்கு எதிராக கடுமையான நடவடிக்கைகளை மேற்கொள்ள இணங்கிய ஜனாதிபதி, ரஞ்சன் விஜேரத்னவின் சிபார்சுக்கேற்ப கொழும்பை பாதுகாப்பதற்கான பொறுப்பை ஏற்குமாறு மேஜர் ஜெனரல் சிசில் வைத்தியரட்னவிடம் கோரினார். ஒரு நிபந்தனையை விதித்தே ஜெனரல் வைத்தியரத்ன அப்பொறுப்பை ஏற்பதாக விருப்பம் தெரிவித்தார். அதாவது அவரது தலையீடு இன்றி வேறு எவரும் இணைந்த நடவடிக்கை பிரிவுக்கு (OPS combine) நேரடியாக ஆணை இடமுடியாது. இணைந்த நடவடிக்கைப் பிரிவு எவரது தலையீடுமின்றி தனது பூரண அதிகாரத்து உட்பட்டதாக இருக்கவேண்டும் என்பதே அவ் நிபந்தனையாகும். இவ் இணைந்த நடிவடிக்கைப் பிரிவுக்கு ஆணையிடும் அதிகாரம் முன்னர் பாதுகாப்புச்செயலாளர், இணைந்த நடவடிக்கை ஆணையிடும் சபை, இராணுவ தலைமைகள் ஆகியவற்றிடம் இருந்தது. பொறுப்பு வாய்ந்தவர்களுடன் கடிதப் பரிமாறல்கள் இடம்பெற்று சிலவாரங்களின் பின்னர் அவர் கோரிய அதிகாரங்களுடன் இணைந்த நடவடிக்கைப் பிரிவுக்கு ஆணையிடும் பொறுப்பு ஜெனரல் வைத்தியரத்னவுக்கு வழங்கப் பட்டது. ஆகஸ்ட் 04 ம் திகதி தொடக்கம் வைத்தியரத்னவின் தலைமையின் கீழ் இது செயல்படத் தொடங்கியது.

இணைந்த நடவடிக்கை பிரிவுக்கு தரை, ஆகாய, கடற் படைகளைச் சார்ந்த 120 பிளட்டூன்கள் வழங்கப்பட்டன. இது தவிர தயார் நிலை பரம்பிய படை (ஆர்.டி.எப்) பூரணமாக கொழும்பிலேயே ஈடுபடுத்தப் பட்டது. பிரிகேடியர் அல்கமயின்கீழ் திறமை வாய்ந்த பத்து இராணுவ அதிகாரிகளைக் கொண்ட தகவல் ஆய்வு பிரிவு ஒன்றும், ஜானக பெரேராவின் தலைமையின் கீழ் விசேட நடவடிக்கைப் பிரிவும் அமைக்கப்பட்டது தயார் நிலை பரம்பிய படையின் ஆணையிடும் அதிகாரியாக கேர்னல் ஜானக பெரேரா நியமிக்கப்பட்டார்.

பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் ரஞ்சன் விஜேரத்னவும் மேஜர் ஜெனரல் சிசில் வைத்தியரட்னவும் எவருடைய தலையீட்டுக்கும் இடம் அளிக்காமல் ஜேவிபியை முற்றாக அழிக்கும் நடவடிக்கைகளின் பொறுப்பை தமது கைக்குள் எடுத்தனர். ஜேவிபியை தகர்த்து அழிக்கும் முக்கிய தாக்குதல் ஸ்தானமாக இணைந்த நடவடிக்கைப் பிரிவு மாறியது. இது பொலிஸ் உடனும் தேசிய புலனாய்வு பணியகத்துடனும் நெருக்கமான தொடர்புகளை ஏற்படுத்திக்கொண்டு தமது நடவடிக்கைகளை ஆரம்பித்தது.

ஜேவிபியை தகர்த்தது தொடர்பாக பேசும் போது குறிப்பிடாமல் இருக்க முடியாத இன்னும் ஒரு நபர்தான் பிரேமதாச உடுகம்பொல இராணுவத்தில் மேஜர் ஜெனரல்

**27ம்பக்கம் பார்க்க..**



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# யுத்த முனையில் உண்மையான அஞ்சயன்கள்!

## தாயகத்திலிருந்து கருத்து திருட்டு: திருட்டு என்றே நம்மால் கருதப்படும்!

### அறுஞர் பேராசிரியர் கல்லாநிதி கியூறியஸ் ஜி


யுத்த முனையிலிருந்து காயமே படாமல் செய்தி அனுப்பும் நம்ம சஞ்சயன் பற்றி நீங்கள் தெரிந்திருப்பீர்கள். ஆனால் உண்மையிலேயே யுத்த முனையில் பத்திரிகை நடத்துகின்றவர்கள் பற்றி கேள்விப்பட்டீர்களோ என்னவோ? 85ம் ஆண்டில் ஐரோப்பா வந்த போது விமானத்தில் வைத்து யூகோஸ்லாவியாவில் சரஜீவோ விற்கு மேலாக பறக்கும் போது விமானி குறிப்பிட்டார். இதுதான் குளிர்கால ஒலிம்பிக்ஸ் நடந்த இடம் என்று. அன்று பலர் அந்த இடம் பற்றி கேள்விப்பட்டிருக்க மாட்டார்கள். பொஸ்னியா என்ற இடம் நான் வாழ்நாளில் கேள்விப்பட்டதே இல்லை. யூகோஸ்லாவியா என்றால் டிட்டோ, டிட்டோ என்றால் அணி சேராத் தலைவர். இன்று பெய்ரூட் எண்பதுகளில் இருந்த இடத்தை விட மோசமான நிலையில் இருந்து தலையங்கங்களில் வருவது அது. Ethnic cleansing என்ற சொல் கூட அதன் பின்னர் தான் பரவலானது.

இந்த சரஜீவோ தற்போது முற்றுகையிடப்பட்ட நிலையில் இருக்கிறது. இருந்தும் அங்கு வெளிவருகின்ற பத்திரிகையான ஒஸ்லோபொடென்ஜ் தொடர்ந்தும் வெளிவருகிறது. இதன் அலுவலகம் முன்பு அணுகுண்டு பாதுகாப்புக்காக கட்டப்பட்ட நிலக்கீழ் அறையிலிருந்து வருகிறது. மெழுகுதிரி வெளிச்சத்தில் எழுதும் பத்திரிகையாளர்கள்.. பிரதம ஆசிரியர் தனது நேரத்தில் பெரும்பகுதியை கறுப்பு சந்தையில் கிடைக்கும் பெற்றோல் வாங்க செலவிடுகிறார். எழுதி முடிந்ததும் பத்திரிகையாளர்களே விற்பனையாளர்களாக வீதிகளில் நின்று விற்கிறார்கள். யுத்த முனையிலிருந்து செய்தி சேகரித்து ஷெல்களையும் குண்டுகளையும் மீறி அலுவலகத்திற்கு வருகின்றார்கள் இந்த சஞ்சயன்கள். இந்தப் பத்திரிகை பொஸ்னியர்களின் நம்பிக்கைச் சின்னமாக, உறுதியின் வெளிப்பாடாக வெளிவருகிறது. இதன் பிரதம ஆசிரியர் சமீபத்தில் வட அமெரிக்கா வந்தார். அவரது சேவையைப் பாராட்டி விருதுகள் கொடுத்து கௌரவிக்கப் பட்டிருக்கிறது. நம்ம விருதுகள் மாதிரி முதுகு சொறிவதற்காக அல்ல. 'எந்த ஆயுதங்களாலும் கருத்துச் சுதந்திரத்தை அடக்க முடியாது. சரஜீவோ மக்கள் உணவில்லாமல் நாட்களைக் கழித்திருக்கலாம். ஆனால் பத்திரிகை இல்லாமல் அவர்கள் நாள் கழிந்ததில்லை. எங்களில் சிலருக்கு வேறு வழிகள் இருக்கலாம். ஆனால் நாங்கள் இந்தப் பத்திரிகையைக் கைவிட்டால், வேறு எந்த வழியும் இல்லாமல் இருக்கின்ற மக்கள் என்ன செய்வார்கள்?' என்கிறார் அவர்.

1943ல் ஸ்தாபிக்கப்பட்ட இந்தப் பத்திரிகையின் பெயரின் கருத்து விடுதலை. இந்தப் பத்திரிகை அதன் பெயருக்கு ஏற்ப இயங்கி வருகிறது. ஆரம்பத்தில் நாஸிகளுக்கு எதிரான இரகசியப் பத்திரிகையாக இருந்தது. பின்னர் கம்யூனிஸ்ட் கட்டுபபாட்டில் வந்து பின்னர் எண்பதுகளில் சுதந்திரமாக இயங்கியது. முற்றுகைக்கு முன்னர் அறுபதாயிரம் பிரதிகள் விற்றனவாம். இதில் மூன்றில் இரண்டு பகுதி விளம்பரங்கள். அத்துடன் 20 சஞ்சிகைகளும் வெளியிட்டது. பத்து மாடிக் கட்டடங்கள் இரண்டில் அதன் அலுவலகங்கள். தற்போது அந்த அலுவலகங்கள் குண்டுவீச்சால் பாதிக்கப்பட்டு நொருங்கிப் போயுள்ளது. பத்திரிகையாளர்கள் 120 பேர் ஏழு நாட்களும் வேலை செய்கிறார்கள். மூன்று பேர் கொல்லப்பட்டிருக்கிறார்கள். இருபது பேர் காயமடைந்திருக்கிறார்கள். ஆசிரியர் கூட துப்பாக்கிச் சூட்டுக்குத் தப்ப காரை திருப்பி காலை முறித்துக் கொண்டவர். பத்திரிகையில் சேர்பியர்கள், பொஸ்னியர்கள், குரோவேஷியர்கள் என்று சகல இனத்தவர்களும் வேலை செய்கிறார்கள். பொஸ்னியா நீண்ட காலமாக பலவேறு இனங்களை அனுசரித்துப் போனது. வெறுத்தது இல்லை என்கிறார் ஆசிரியர். இதனால் தான் பத்திரிகையாளர்களுக் கிடையில் பிரச்சனைகள் குறைவு என்கிறார். குண்டுகள் வீசப்படும் போது என்ன இனமாக இருந்தாலும் அனுபவிக்கும் பயம் ஒரே மாதிரியானது என்கிறார்.

தற்போது விற்பனை தினசரி 3500 முதல் 12 ஆயிரம் வரை உள்ளது. எட்டுப் பக்கங்கள் வழமையில்... இதில் இரண்டு மரண அறிவித்தல்களுக்காக.. கிடைக்கின்ற எல்லா பேப்பர்களில் பத்திரிகை வெளிவரும். இதுவரை 13 தடவைகள் அதன் அமைப்பு மாற்றப்பட்டதாம். ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு கலரிலும் வருமாம். அப்படி பேப்பர் தட்டுப்பாடு. வருமானம் எதுவுமில்லை. பொஸ்னிய பணம் பெறுமதி இழந்ததால் விற்பனைப் பணத்தில் எதுவும் செய்ய முடியாது. சர்வதேச உதவிகள் தான் பத்திரிகையை ஓட்ட உதவுகிறது. 'நாங்கள் இதைத் தொடர்கிறோம், ஏனென்றால் எங்களுக்கு பத்திரிகையாளருக்குரிய பொறுப்புகள் உள்ளன, யாரும் ஹீரோக்களாக முயற்சிக்கவில்லை' என்கிறார்.

'அதிக விற்பனையைக் கொண்ட பத்திரிகையாளர்களும், 'செய்தியை முந்தித் தருபவர்களும்' உணர்ந்துகொண்டால் சரி. அது சரி, நம்ம சஞ்சயன் என்னவானார்? ஆளையே காணோம். யுத்த முனையிலிருந்து செய்தி அனுப்பியவர் மாவீரனானாரோ? அல்லது மாத்தயா



அறு(சு)வை



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

பற்றிய தகவல் வெளியே போனதற்காக பிடிக்கப்பட்டிருக்கிருரோ என்னவோ?

★ ★ ★

யுத்த சூழ்நிலையில் யாழ்ப்பாணத்தில் பத்திரிகைகள் கிடைக்கின்ற காகிதங்களில் அச்சிடுகின்றன. குடாநாட்டு, பெருநிலப் பரப்புக்கு என இரண்டு பதிப்புகளை ஈழநாதம் வெளியிடுகிறதாம். மற்ற பத்திரிகைகளும் மக்களுக்கு நம்பிக்கையை ஏற்படுத்துவதற்கு பதிலாக பிரசார கைங்கர்யத்தில் ஈடுபடுகின்றன. முஸ்லிம்கள் வெளியேற்றப்பட்ட நிலையில் இந்த பத்திரிகைகள் மக்களின் உணர்வுகளைப் பிரதிபலிக்க முடியாதுள்ளன.

★ ★ ★

சென்ற வாரம் தாயகத்திற்கு ஒரு 'தமிழ்மகன்' கடிதம் எழுதியிருந்தார். தான் தாயகத்தில் பற்றுக்கொண்டிரா விட்டாலும் அனைத்தையும் வாசிப்பவராம். வேறுபல பத்திரிகைகளில் வராத, ஆனல் தமிழர்கள் தெரிந்து வைத்திருக்க வேண்டிய ஆக்கங்கள், குறிப்பாக ராவய மொழிபெயர்ப்புகள் தாயகத்தில் வருகிறது என்கிருர்.

'பாமரத்தனமான சில ஆக்கங்கள் வெளிவந்து உங்கள் பத்திரிகையில் எழுதுபவர்கள் சிலர் குழந்தைத்தனமான அறிவு கொண்டவர்கள் என்ற கருத்தையும் மனதில் ஏற்படுத்துகின்றன, குறிப்பாக கியூறியஸ் எனப் பெயரிட்டு எழுதுபவர் (சில சமயங்களில் அதன் ஆங்கிலப் பதத்தை மனதில்வைத்துக்கொண்டு) நாலும் தெரிந்தவர்கள் போல எழுதுகிருர். 'கல்லாநிதி' என்று அவர் தன்னை வேடிக்கையாக அழைத்துக் கொண்டாலும் அவரது சிற்றறிவுக்கு ஏற்ற விதத்தில் ஆக்கங்களும் கருத்துக்களும் இருக்கின்றன. பல இடங்களில் இவரது 'கல்லாமை' புலப்பட்ட போதும் ஒரு சில இடங்களில் இவரது அறியாமை உச்சத்தை எட்டி விடுகிறது. குறிப்பாக அண்மையில் இவரது கருத்துக்களில் ஓரிடத்தில் மாத்தயா பற்றி வேறு ஒரு பத்திரிகையில் வந்த சில கருத்துக்களை முரண்பாடாகக் காட்டுகிருர். இவரது வாதப்படி புலிகள் இயக்கமே இந்தியாவின் உளவுத்துறையுடன் தொடர்பு கொள்ள விருப்பமாக இருக்கும் போது, மாத்தயா தொடர்பு கொண்டதில் தவறில்லை என்பது ஒரு சிறுபிள்ளைத் தனமானது. சிறுவரே, ஒரு அமைப்பு தனது கொள்கைகளுக்கு ஏற்ப செயற்படுவதும் அதில் அங்கம் வகிக்கும் ஒருவர் தனது விருப்பத்திற்கு அமைய முடிவெடுப்பதும் வேறு விடயங்கள். மொட்டந்தலைக்கும் முழங்காலுக்கும் முடிச்சா?'

இப்படி இவரது கடிதம் போகிறது. எஸ்.ஜெயக்குமார் என்ற பெயரில் வந்த இந்த கடிதத்தில் விலாசம் இல்லாமல் ஒரு 'மார்க்கமாக' இருந்தது.

இவருடைய கருத்துக்களுக்கு விளக்கம் சொல்லும் பொறுப்பை என் வாசகர்களிடமே விட்டு விடுகிறேன். ஏனென்ருல் 'நான் கடக்க வேண்டியது நெருப்பாறு' என்பது எனக்குத் தெரியும். ஆனாலும் வாசகர் பலம் என்ற கவசம் எனக்குண்டு. ஆகா! எனவே ஒரு நாலு வரி....

★ ★ ★

ஔவையார் சொல்லியிருக்கிருர். பையலோடிணங்கேல்.. அதாவது சிறு பையனுடன் சேராதே என்று. அதெப்படி கியூறியஸ் பேனை தூக்கினுல் மட்டும் சிறுவன்? சிறுவன் ஆயுதம் தூக்கினுல் போராளி, மாவீரன்? எதற்கும் தலைவரின் காதில் விழுந்தால் அதோ கதிதான். சிறுவர்கள் என்ருல் விசயமே தெரியாதவர்கள் என்ருல், அவரைச் சூழ இருப்பவர்கள் போராளிகள் தானே. அவர்களும் சிறுவர் தானே.

★ ★ ★

சென்ற வாரம் தேனீர்க் கோப்பைக்குள் பெரும் சூருவளி ஒன்று. 'தமிழ்கூறு நல்லுலகில் சிறந்த 'இலக்கியப் பொக்கிசமான' சுபமங்களாவில் வெளிவந்த கட்டுரை ஒன்றுதான். கனடாவில் தமிழ் என்ற கட்டுரை... அதில் தேடகம் பற்றிய தகவல்கள் அதிகமாக இருந்தது. வெளிவந்ததும் தேடகத்தின் 'தோர்(ஆ)ஸ்தான' விமர்சகர் சும்மா இருப்பாரா? எழுதுவதற்கு இதை விட்டால் வேறு வழியேது? ஒரு பக்கம் தீட்டி விட்டார். தேடகம் குழு என்ன பேஸ் போல மட்டையா வைத்திருக்கிறது என்ற துணிவில் 'அசை போடும்' சரி பத்திரிகையும் (அதுதான் Munch!) பிரசுரித்தது. அதை விட ஆசிரிய தலையங்கம் வேறு.

சுபமங்களாவில் கட்டுரையை எழுதியது புதியவர் ஒருவர். ஆனல் கனடாவில் இலக்கியவாதிகளாக அந்தக் கட்டுரை காட்டிய பலரைப் பற்றி நான் கேள்விப்பட்டதேயில்லை. இது பரஸ்பர முதுகுசொறிகின்ற இயல்பாகத் தான் இருக்கும். அத்துடன் முக்கிய பலர், தாயகத்தில் எழுதுகின்றவர்களில் பெரும்பாலும் முழுப்பேரும், விடுபட்டிருக்கிருர்கள். ஒருவேளை எழுதியவரின் கண்ணில் அவர்கள் இலக்கியவாதிகளாக தெரியாதிருந்திருக்கலாம். அல்லது அவர்களது எழுத்துக்கள் இவர்கள் எதிர்பார்க்கின்ற இலக்கிய வரம்புக்குள் இல்லாதிருந்திருக்கலாம். ஆனல் சுபமங்களாவின் அங்கீகாரமும் ஆசீர்வாதமும் வெளிப்படுத்தலும் தேவை என்ற அளவில் தாயகத்து எழுத்தாளர்கள் இல்லை. 'கலக்கிய வாதியான' கியூறியஸ் பெயர் கூட விடுபட்டது வருத்தம் தான்.

இருந்தாலும் புலம் பெயர்ந்த இலக்கியங்களுக்கு இடம் ஒதுக்க முன்வரும் ஒரு சஞ்சிகையின் நோக்கத்தை துஷ்பிரயோகம் செய்கின்ற முயற்சி இது. ஒருவேளை ஒரு குறிப்பிட்ட அமைப்பு பற்றி எழுதியிருப்பின் அது குறித்து விவாதம் இருக்காது. ஆனல் கனடாவில் எல்லாமே அந்த அமைப்பு தான் என்ற ரீதியில் எழுதுவது தவருன பிரமைகளை ஏற்படுத்தும். தவளைகள் போன்று கிணற்றை உலகமாக நினைப்பது தவறு. ஆனல் தேடகம் குழுவினர் உத்தியோக பூர்வமாகச் செய்தது அல்ல இது. யாரோ ஒரு தனிநபரின் தன்னிச்சையான நடவடிக்கை என்றே கூறப்படுகிறது. எனவே அவரது நடவடிக்கைக்கு அமைப்பை நொந்து பயனில்லை.

இருந்தாலும் இந்த 'அரிய சந்தர்ப்பத்தை நழுவ விடாது' விமர்சகர் ஒருவர் விடுபட்ட பலரின் பெயர்களை சேர்த்திருக்கிருர். நல்ல முயற்சி. ஆனாலும் அதிலும் முதுகு சொறிகின்ற வாடை தென்படுகிறதே. . ஒரு பத்திரிகாசிரியரின் பெயரை ஒப்பிட்டு அவர் தமிழ் கூறு நல்லுலகத்திற்கு செய்த சேவை கண்ணில் படவில்லையா என்று கேட்கப்பட்டிருக்கிறது. நானும்தான் அவர் எழுதிய ஏதாவதை வாசிக்கலாம், அவரை ஒரு



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இலக்கியவாதி என்று கருதலாம் என்று தேடுகின்றேன். கிடைக்கவில்லை. ஒருவேளை ஒட்டக்கூத்தன் என்ற மாபெரும் 'விலக்கியவாதியை' தமிழ் கூறு நல்லுலகத்திற்கு தந்ததாலாக இருக்குமோ என்னவோ?

★ ★ ★

ஜலண்ட் பத்திரிகையில் இங்குள்ள பத்திரிகை ஆசிரியர் எழுதிய இரண்டு கட்டுரைகள் இவ்வாரம் வெளிவந்திருந்தன. முன்பக்கத்தில் கிட்டுவின் மாஜி நண்பரும் திருட்டுக் குற்றம் சாட்டப்பட்டு சர்ச்சைக்கு ள்ளானவருமான கொத்தலாவலை பற்றிய தலையங்க கட்டுரை ஒன்று. அதில் ஆசிரியரின் பெயர் குறிப்பிட்டு கீழே Somewhere in North America என்றிருந்தது. உள்ளே பார்த்தால் மாத்தயா பற்றிய கட்டுரையின் கீழ் கனடாவைத் தளமாகக் கொண்ட மஞ்சரி என்ற பத்திரிகையின் ஆசிரியர் என்றிருக்கிறது. கனடா என்பது வட அமெரிக்காவிற்குள் அடக்கம் என்பது ஜலண்டிற்கு தெரியாதோ என்னவோ? எங்கப்பன் குதிருக்குள் இல்லை!

★ ★ ★

மாத்தயா பற்றிய கட்டுரை இங்கே வந்ததை விட கொஞ்சம் 'நடுநிலையுடன்' எழுதப்பட்டிருக்கிறது. ஆனால் இங்கு எழுதும்போது மட்டும் 'வாளின் மேல் மாதவம்'. அங்கு மட்டும் .... the verdict seems to have been already arrived at. The basic tenets of natural justice have been violated. The principle of presumption of innocence unless proven guilty has been convoluted into the presumption of guilt unless proven innocent என்றிருக்கிறது. அடடே.. . இந்த விடயத்தில் நம்ம எழிலோனும் கியூறியஸ் ஜியும் எழுதிய விடயங்களின் வாடை வீசுகிறதே! இங்கே இந்தியச் சதியை இன்னொரு பின்னணியில் ஆராய்ந்தால் புரியும் என்ற மாதிரி அது சதிதான் என்றும் அங்கே ஜலண்டில் alleged conspiracy என்றும் வருகிறது. ஒருவேளை இங்கே எழுதுவது புலிகளின் ஆதரவாளர்களின் முட்டாள்தனத்துக்கு தீனிபோடுவதாக மட்டும் இருக்குமோ என்னவோ? Tamil newspapers have called for a free trial என்றிருக்கிறது. எவை? தாயகம் மட்டும் தானே!

மாத்தயாவின் செல்வாக்கு அதிகரித்து வருவதால் தனது பாதுகாப்பின்மையை உணர்ந்து கட்சியைக் கலைத்து மாத்தயா அடக்கினர், இது தற்போது ஒரு சதி என்ற பெயரில் வருகிறது என்று ஜலண்டில் இருந்தது. இது தாயகத்தில் எழிலோன் எழுதியது. Whether this is true or not, it is clear that Prabakaran will have to live with this charge for the rest of his life. If this opinion gathers momentum, the long term consequences for the LTTE can be drastic என்றிருக்கிறது.

இறுதியில் சிவதாசன் அசைத்தது போல mathaya's end in that sense may very well be the beginning of the end of the LTTE என்று முடிகிறது. நீதிமன்றத்தில் விவகாரம் இருப்பதால் கருத்துச் சொல்லக் கூடாது என்று தமிழருக்கும் நீதிமன்றத்தை kangaroo's court என்று ஜலண்டிலும் வர்ணிக்கப்பட்டிருக்கிறது.

The climate of fear in Jaffna along with the propaganda techniques of the Tigers could result in the initial acceptance of Mathaya's guilt. இதைத் தானே தாயகம் சொல்கிறது.

மொத்தத்தில் தாயகத்தில் வந்த விடயங்கள் தான் இக்கட்டுரையில் வந்திருக்கின்றன. எனவே 'இது திருட்டு என்றே நம்மால் கருதப்படும்'. கருத்துக்கள் சரியாக இருந்தால் அவை கொப்பியடிக்கப்பட்டாலும் தவறில்லை. சரியான கருத்து தாயகத்தினால் மட்டும் சொல்லப்பட வேண்டும் என்றும் இல்லை. தாயகத்தின் அனுமதியின்றி மறுபிரசுரம் செய்யக் கூடாது என்று சொல்லவும் இல்லை. ஆங்கிலப் பத்திரிகையில் சொல்கின்ற அதே கருத்துக்களை தமிழில் சொல்ல தயக்கம் என்ன? பத்திரிகை விற்க புலி ஆதரவுக் கருத்துக்கள்.... நல்ல பெயர் வாங்க வேண்டும் என்பதற்காக மட்டும் தாயகத்தின் கருத்துக்களை திருடலாமா?

தமிழருக்கு ஒரு முகம், சிங்களவர்களுக்கு ஒரு முகம்... மாறுமுகமான பொருள் நீயருள வேண்டும், கியூறியஸ்க்கு அந்த ரெக்னிக் சொல்லித் தர வேண்டும்.

This newspaper
is published by
Georgicka communications.
A member of
Ethnic Press Council Of Canada.

Editor: George R.Ckrhushchev

P.O.Box 1031, Station "F",
Toronto, Ont, M4Y 2T7.

Tel: (416) 920 9081
Fax: 963 5738
E mail:71650.3216
@Compuserve.com

இப்பத்திரிகை ஜோர்ஜிக்கா
தொடர்பு நிறுவனத்தினால்
வெளியிடப்படுகிறது.
ஆசிரியர்;
ஜோர்ஜ் இ. குருஷ்சேவ்

உங்கள் ஆக்கங்கள், பத்திரிகை பற்றிய உங்கள் ஆக்கபூர்வமான கருத்துக்கள் என்பவற்றை வரவேற்கிறோம். உங்கள் கருத்துக்களை எழுத்து மூலமாக அனுப்புங்கள். உங்கள் கருத்துக்கள் எதுவாயினும் பிரசுரிக்க முயற்சிப்போம். ஆக்கங்கள் தரங்கண்டு பிரசுரமாகும். ஆக்கங்களின் கருத்து சிதையாமல் மாற்றங்கள் செய்ய ஆசிரியருக்கு உரிமை உண்டு. ஆக்கங்களுடன் உங்கள் தொலைபேசி இலக்கங்களையும் விலாசங்களையும் குறிப்பிடுங்கள்.

ஆக்கங்களை மீளப் பெற விரும்புபவர்கள் சுயவிலாசமிட்ட முத்திரையிட்ட அஞ்சற்கூடு அனுப்பவும். படைப்புகளில் சொல்லப்படும் கருத்துக்களுக்கு எழுதியவர்களே பொறுப்பு. படைப்புகளில் வரும் கருத்துகள் ஆசிரியரின் கருத்தாக இருக்க வேண்டிய அவசியமில்லை.

## தாயகம்
## சந்தா விபரம்

கனடா ஆறுமாதம் $30
வெளிநாடுகள்
ஆறு மாதம் US$60
வெளிநாட்டு வாசகர்களின் காசோலைகளின் இலக்கம் encoded செய்யப்பட்டிருக்க வேண்டும். காசோலைகள் அனைத்தும் Georgicka communications பெயருக்கு எழுதப்பட வேண்டும். (தாயகத்தின் பெயருக்கு அல்ல)



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net


ஒரே இடத்தில் உங்கள் அனைத்து இலங்கை, இந்திய, கனடிய
உணவுப் பொருட் தேவைகளுக்கும் நாட வேண்டிய இடம்

# அன்ரனி பிறதர்ஸ்

**1472 QUEEN ST WEST (QUEEN/LANSDOWNE),**
**TORONTO, ONT. M6K 1M4**

வாரத்தில் ஏழு நாட்களும் காலை 9 மணி முதல் இரவு 11 மணி வரை

உடன் மீன்,
இறைச்சி,
மரக்கறி, பழவகைகள்
மலிவு விலையில்

தமிழக, இலங்கை
வாரப்பத்திரிகைகள்,
சஞ்சிகைகள் உடனுக்குடன்

முத்திரை, சிகரெட்,
TTC Tickets, Lottery Tickets


★ போட்டோக்கொப்பி,
ஃபாக்ஸ் வசதிகள்

★ தமிழ், ஹிந்தி, மலையாள
வீடியோக்கள்
வாடகைக்குப் பெறலாம்

★ லேசர்
இசைத்தட்டுக்கள்
மலிவு விலையில்

## ANTONY BROTHERS

**TEL:(416) 588-0733**
**TEL/FAX:(416) 516 3903**




சிங்கப்பூரில் இருந்து
இறக்குமதி செய்யப்பட்ட
உடைகள்,
பரிசுப் பொருட்கள்,
அலங்காரப் பொருட்கள்
அனைத்தும் மலிவு விலையில்
பெற்றுக் கொள்ள

## ANTONY BROTHERS FASHION HOUSE

**1484 QUEEN ST WEST**
**Tel:(416) 588 0310**

www.tamilarangam.net


# சிவாஸ் ரேடிங் கோ லிமிட்

## மாபெரும் மலிவு விற்பனை

★ இலங்கை, இந்திய உணவுப்பொருட்கள்
★ உடன் இறைச்சி, கடலுணவு, மரக்கறி வகைகள்
★ தயாரிக்கப்பட்ட உணவுவகைகள்
(இடியப்பம், தோசை, அப்பம்)
★ சமையல் உபகரணங்கள்
★ இலங்கை, இந்திய சஞ்சிகைகள்
அனைத்தும் மலிவுவிலையில்

# SIVA'S TRADING CO LTD

3852 FINCH AVE EAST (KENNEDY/FINCH)
TEL:(416) 321 2739

# P.S.S.T

5210 FINCH AVE EAST #23
(FINCH/MIDDLEFIELD)
TEL:609-0141

வீடியோ ஒலிப்பதிவு நாடாக்கள்,
இந்திய உணவு வகைகளின் மொத்த விற்பனையாளர்

VIDEO TRANSFER (ANY SYSTEM) $8.99

சகல புதிய, பழைய தமிழ், இந்தி, மலையாளப் படங்கள்
வாடகைக்கு கிடைக்கும்